விலை : 20.00
பக்கங்கள் : இருபது

# வலம்புரி
Valampurii

website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com

சங்கு 15 வள்ளுவர் ஆண்டு 2045 தை 22 செவ்வாய்க்கிழமை (04.02.2014) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 047

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
உலகத்தர ISO 14 001, 9001
சான்றிதழ் பெற்றுள்ள
ஒரே சீமெந்து ராம்கோ

## காணாமல் போனோர் தொடர்பில்

# ஜனாதிபதி ஆணைக்குழுவின் விசாரணைகள் யாழ்ப்பாணத்தில்

### 14ஆம் திகதி ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

வடக்கில் யுத்தகாலத்தில் காணாமற்போனோர் தொடர்பாக விசாரணைகளை மேற்கொள்வதற்காக ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவினால் நியமிக்கப்பட்ட விசேட ஆணைக்குழுவின் விசாரணை யாழ். மாவட்டத்தில் எதிர்வரும் 14ஆம் திகதி தொடக்கம் 17ஆம் திகதிவரை நான்கு நாட்கள் இடம்பெறவுள்ளது.

கடந்த 1990 ஆம் ஆண்டு தொடக்கம் 2009 ஆம் ஆண்டு வரை வடக்கில் காணாமல் போனவர்கள் தொடர்பான விசாரணைகளை மேற்கொள்வதற்காக ஜனாதிபதியால் நியமிக்கப்பட்ட ஆணைக் 20 ஆம் பக்கம் பார்க்க..

## 19 மீனவர்களுக்கு விளக்கமறியல்

(யாழ்ப்பாணம்)

இலங்கை கடற்பரப்பிற்குள் அத்துமீறி நுழைந்து மீன்பிடித்துக்கொண்டிருந்தபோது காங்கேசன்துறை கடற்பரப்பில் வைத்து கைதுசெய்யப்பட்ட இந்திய மீனவர்கள் 19 பேரையும் எதிர்வரும் 13 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு ஊர்காவற்றுறை நீதவான் நீதிமன்ற நீதவான் எஸ். லெனின்குமார் உத்தரவிட்டார். .

இந்தியாவின் ஜனதாப் பட்டிணப் பகுதியிலிருந்து 5 ரோலர் படகுகளில் 20 ஆம் பக்கம் பார்க்க..

## பால்மா விலையேற்றம் கண்டித்து ஆர்ப்பாட்டம்



பால்மாவின் விலை அதிகரிக்கப்பட்டதை கண்டித்து ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமையகமான சிறிகொத்தவிற்கு அருகில் நேற்று ஆர்ப்பாட்டம் ஒன்று நடத்தப்பட்டது.

இந்த ஆர்ப்பாட்டத்தை ஐக்கிய தேசியக் கட்சியின் லக் வனிதா முன்னணி ஏற்பாடு செய்திருந்தது. ஆர்ப்பாட்டத்தில் அந்த அமைப் 20 ஆம் பக்கம் பார்க்க..

## சர்வதேச விசாரணை கோரி சென்னையில் ஆர்ப்பாட்டம்

(சென்னை)

ஈழத் தமிழர்களைத் திட்டமிட்டு படுகொலை செய்த ராஜபக்ஷ மீது விசாரணை நடத்த தற்சார்பு பன்னாட்டு புலனாய்வு ஆணையத்தை அமைக்க வேண்டும் உள்ளிட்ட கோரிக்கையை வலியுறுத்தி, எதிர்வரும் 20-ம் திகதி தமிழக மாவட்ட தலை நகரங்களில் ஆர்ப்பாட்டம் நடைபெறும் என உலகத் தமிழர் பேரமைப்பின் தலைவர் பழ. நெடுமாறன் தெரிவித்தார்.

இது குறித்து அவர் தெரிவித்துள்ளதாவது,

தஞ்சை விளார்சாலை அருகே முள்ளிவாய்க்கால் நினைவு முற்றத்தில் தமிழ் அமைப்புகளின் ஆலோசனை கூட்டம் நடைபெற்றது.

கூட்டத்திற்கு உலக தமிழர் பேரமைப்பின் தலைவர் பழ.நெடுமாறன் தலைமை வகித்தார்.

நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான், தமிழ்த் தேசப் பொதுவுடைமைக் கட்சியின் நிறுவனர் மணியரசன், விடுதலை தமிழ்ப் புலிகள் கட்சியின் நிறுவனர் குடந்தை அரசன், தமிழர் தேசிய இயக்கப் பொதுச் செயலாளர் 20 ஆம் பக்கம் பார்க்க..

பால்மா விலை அதிகரிப்பு ஆர்ப்பாட்டத்திற்குத் தயார்
செய்திகள் பக்கம் 10

பக்தர்கள் பயணித்த பஸ் விபத்து
செய்திகள் பக்கம் 16

ஆயுள் காக்கும் 10 கட்டளைகள்
செய்திகள் பக்கம் 13

கொடியேற்று; தேசிய கீதம் பாடு எனக் கட்டளையிடுவதா தேசப்பற்று!
ஆசிரியர் தலையங்கம் பக்கம் 17

அரசியலில் இதெல்லாம் சகஜமப்பா!

செய்திகள் பக்கம் 11


0 வான தோனி
விளையாட்டு பக்கம் 18

## பால்மாவின் விலையை குறைக்க முடியாது

பால்மாவின்விலையை குறைக்க முடியாது என அரசாங்கம் அறிவித்துள்ளது.

பால் மாவின் விலையை குறைக்கும் அதிகாரம் அரசாங்கத்திற்கு கிடையாது என அமைச்சர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

பால்மா விலையை அரசாங்கமா குறைத்தது? பல் தேசிய 20 ஆம் பக்கம் பார்க்க..

## இலங்கைக்கு எதிரான தீர்மானத்தை ஜெனிவாவில் நிறைவேற்ற வேண்டும்

### மத்திய அரசைக் கோரினார் ஜெயலலிதா



(சென்னை)

ஐ.நாவில் இலங்கைக்கு எதிராக இந்தியாவே தீர்மானம் கொண்டு வந்து நிறைவேற்ற வேண்டும் என தமிழக முதல்வர் ஜெயலலிதா. தெரிவித்தார். சட்டப்பேரவையில் ஆளுநரின் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீது நடைபெற்ற விவாதத்திற்கு பதில் அளித்து ஜெயலலிதா பேசுகையில்,

இலங்கைத்தமிழர்கள் பிரச்சினை பற்றி உறுப்பினர்கள் இங்கே பேசினார்கள். எங்களைப் பொறுத்த வரையில். இலங்கை உள்நாட்டுப் போரில் சர்வதேச போர் நெறி முறைகளை மீறி நடந்து கொண்டவர்களை போர்க் குற்றவாளிகள் என அறிவிக்க வேண்டும்.

இனப் படுகொலையை நடத்தியவர்கள் தண்டிக்கப்பட வேண்டும். அதுவரை இலங்கை நாட்டின் மீது பொருளாதாரத் தடை விதிக்க வேண்டும். தமிழ் ஈழம் குறித்து இலங்கையில் உள்ள மற்றும் வெளிநாடுகளில் வாழுகின்ற இலங்கை தமிழர் 20 ஆம் பக்கம் பார்க்க..

## கட்சி தாவும் ஜே.வி.பியினர்

ஜே.வி.பியின் புதிய தலைவராக அனுரகுமார திஸாநாயக்க நேற்று தெரிவு செய்யப்பட்ட நிலையில், அந்த கட்சியின் பிரதேச சபை உறுப்பினர் ஒருவர் நேற்று ஐக்கிய தேசியக் கட்சியில் இணைந்து கொண்டார்.

களுத்துறை - மத்துகம பிரதேச சபையில் அங்கம் வகிக்கும் ஜே.வி.பியின் ஒரே ஒரு உறுப்பினரான பிரியந்த வித்தான ஐக்கிய தேசியக் கட்சியில் இணைந்தார்.

மத்துகமவில் நடைபெற்ற, மேல் மாகாண சபைத் தேர்தலில் போட்டியிடும் ஜகத் பின்னகொட கலந்து கொண்ட கூட்டத்தின் பின்னர் 20 ஆம் பக்கம் பார்க்க..

## கோயில் ஒன்றை நோக்கியதாக மண்டையோடுகள் காணப்பட்டன

### பொலிஸ் பேச்சாளர் தெரிவிப்பு

மன்னார் - திருக்கேதீஸ்வரம் மனிதப் புதைகுழியிலிருந்து மீட்கப்பட்ட மனித எச்சங்களில் மண்டையோடுகள் ஒரேதிசையில் புதைப்பட்டிருந்ததாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி நேற்று கொழும்பில் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் இந்த தகவலை வெளியிட்டுள்ளார்.

இதுவரை தோண்டியெடுக்கப்பட்டதாக மனித எச்சங்களின் தலைப் பகுதிகள் அருகில் உள்ள கோவிலை நோக்கி திருப்பியவாறு புதைக்கப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

தற்போது வரை 55 மனித எச்சங்களும், மண்டையோடுகளும் தோண்டியெடுக்கப்பட்டுள்ளன.

கடந்த வருடம் டிசம்பர் 23 ஆம் திகதி குறித்த மனித புதைகுழியில் அகழ்வு நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டன.

17 தினங்க 20 ஆம் பக்கம் பார்க்க..

## இந்திய வீட்டுத்திட்டம் முஸ்லிம்கள் ஆர்ப்பாட்டம்



(வவுனியா)

தமிழ், சிங்கள, முஸ்லிம் மக்கள் மத்தியில் இனவாதத்தை ஏற்படுத்தி, மீண்டுமொரு யுத்த மோதலை ஏற்படுத்துவதற்குத்தமிழ்த்தேசியக்கூட்டமைப்பு முனைந்துள்ளதாகக் குற்றம் சுமத்தி வவனியாவில் முஸ்லிம் மக்கள் கலந்து 20 ஆம் பக்கம் பார்க்க..

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்**

# இராணுவத்தை வெளியேற்றுமாறு அரசைக் கோருகிறார் சம்பந்தன்

## மீள்குடியேற்ற அமைச்சர் தெரிவிப்பு

(வாகரை)

வடக்கு கிழக்கில் நிலை கொண்டுள்ள இராணுவத் தினர் அப்பகுதிகளில் இருந்து வெளியேற வேண்டும் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர் சம் பந்தன் அரசிற்கு வேண்டு கோள் விடுத்து வருகின்றார் என மீள்குடியேற்ற அமைச்சர் குணரத்ன வீரக்கோன் குற்றம் சாட்டியுள்ளார்.

வாகரை பிரதேசம்புனானை கிழககில் பிரதேச செயலாளர் எஸ். ஆர். இராகுலநாயகி தலைமையில்நேற்று இடம் பெற்ற மீள்குடியேற்ற நிகழ் வில்பிரதம அதிதியாக கலந்து கொண்டு உரையாற்றுகை யிலேயே அவர் மேற்கண்ட வாறு தெரிவித்தார். தொடர் ந்து உரையாற்றிய அவர்,

வடக்கு கிழக்கில் முகா மிட்டுள்ள இராணுவத்தினர் அப்பகுதிகளில் இருந்து வெளியேற வேண்டும்என்று இரா.சம்பந்தன் அரசாங்கத் தற்கு வேண்டு கோள்விடுக கின்றார்.

ஆனால்இராணுவமோ அப்பகுதிகளில் உள்ள மக களுக்கு பல் வேறுபட்ட உத விகளைவழங்கிவருகிறது.

எமது அமைச்சினால 3 இலட்சம் ரூபாய் பெறுமதி யான வீடுகளை கட்டுவதற் கான நிதி உதவி வழங்கப் பட்டு வருகிறது.

ஆனால் சம்பூர் போன்ற இடங்களில் இராணுவத் தினர் 10 லட்சம் ரூபா பெறு மதியான வீடுகளைக் கட்டிக் கொடுத்து மக்களுக்கான உதவிகளை செய்து வரு கின்றனர். மக்களுக்காக ஒன்றி ணைந்து வேலை செய்வோம் வாருங்கள் என்று தமிழ்த தேசியக் கூட்டமைப்பு தலை வருக்கு அழைப்பு விடுததிருந்தேன்.

ஆனால் அதற்கு அவர் சம்மதம்தெரிவிக்கவில்லை என்றார். (எ-11)


### தொடர்ந்தும் உங்கள் சேவையில்....

உலகெங்குமுள்ள உறவுகளுக்கு உடனுக்குடன்

☛ கடிதங்கள் ☛ அன்பளிப்பு பொருட்கள் ☛ உடுபுடவைகள்

☛ CD, VCD க்கள் அனுப்பவும் உலகெங்குமுள்ள உறவுகளிடமி ருந்து Western Union மூலம் அனுப்பிய பணத்தை ஒரு சில நிமிடங்களில் பெற்றுக் கொள்ளவும். தொலைபேசி அட்டைகளைப் பெற்றுக்கொள்ளவும்.

ஸ்ரீமுருகன் தொலைத் தொடர்பகம்
303, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம்.
T.P. No :-021222 5392

WESTERN UNION MONEY TRANSFER

(C-6412)



## கண்ணீர் அஞ்சலி



### கிருஸ்ணபிள்ளை வசந்தராசா

எமது நண்பரும் கிளி/ இந்துக் கல்லூரி அதிபருமாகிய திரு. கிருஸ்ணபிள்ளை விக்னராஜா அவர்களின் அன்புச் சகோதரன் கிருஸ்ணபிள்ளை வசந்தராசா நேற்று (03.02.2014) லண்டனில் காலமானார்

வசந்தமாய் வந்த வசந்தனே விரைவினில்
நீர் விண்ணகம் விரைந்ததேனோ
உன்பிரிவால் சோதரர்கள் துவண்டிட நண்பர்கள்
கலங்கிட எங்கு சென்றீர் உன் பிரிவால்
துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு
எமது கண்ணீர் அஞ்சலியை
காணிக்கையாக்குகின்றோம்

அதிபர், நண்பர்கள்
கிளிநொச்சி மாவட்டம்

(C-6415)


## நத்தார் மற்றும் புதுவருடத்தை முன்னிட்டு ஆல்சிலோன் டிஸ்ரிபியூட்டர்ஸ் நிறுவனத்தால் நடத்தப்பட்ட மாபெரும் பரிசுக் குழுக்கலில் பரிசில்களை வெல்லும் அதிர்ஷ்டசாலிகளது பெயர் விபரங்கள்

**1. முதல் மூன்று வெகுமதியான பரிசில்களை பெறும் அதிர்ஷ்டசாலிகள்**

| | பெயர் | முகவரி |
|---|---|---|
| 1ம் இடம் : | T.வியராசா | சங்குவேலி வடக்கு, மானிப்பாய். |
| 2ம் இடம் : | I.சின்னராசா | ஆசீர்வாதப்பர் வீதி, யாழ்ப்பாணம். |
| 3ம் இடம் : | A.யாழினி | 105, பலகொல்ல, கெங்கால, கண்டி. |

**2. 4, 5, 6ம் பரிசில்களையும் 7ம், 8ம், 9ம், 10ம் பரிசில்களை பெறும் அதிர்ஷ்டசாலிகள்**

| | பெயர் | முகவரி |
|---|---|---|
| 4ம் இடம் : | S.தயாளன் | 47, 1ம் ஒழுங்கை, யாழ்ப்பாணம். |
| 5ம் இடம் : | கிரிதாஸ் | 133, கஸ்தூரியார் வீதி. |
| 6ம் இடம் : | V.ரதுயன் | குறுக்கு வீதி, நீர்வேலி வடக்கு |
| 7ம் இடம் : | பொ.தனபாலசிங்கம் | தொல்புரம் கிழக்கு, சுழிபுரம் |
| 8ம் இடம் : | M.ஜசிக்கா | 61, கொழும்புத்துறை, யாழ்ப்பாணம். |
| 9ம் இடம் : | M.ஜெயக்குமார் | இணுவில் மேற்கு, இணுவில். |
| 10ம் இடம் : | V.மாலினி | சுன்னாகம் கிழக்கு. |

**11 தொடக்கம் 27 வரையான ஆறுதல் பரிசில்களை பெறுவோர்.**

| | | |
|---|---|---|
| 11ம் இடம் : | திருமதி .V.அரவிந்தன் | 5, விபுலானந்த வீதி, கொழும்புத்துறை. |
| 12ம் இடம் : | L.உஷாஜனனி | நீர்வேலி வடக்கு, நீர்வேலி. |
| 13ம் இடம் : | திருமதி.A.ஞானேஸ்வரன் | கொல்லன் கலட்டி, தெல்லிப்பழை. |
| 14ம் இடம் : | S.நிலவன் | 135, 4ஆம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம். |
| 15ம் இடம் : | Y.றஞ்சித்குமார் | சிவகாமி அம்மன் வீதி, காரைநகர். |
| 16ம் இடம் : | S.சிவப்பிரியா | அராலி மத்தி , வட்டுக்கோட்டை. |
| 17ம் இடம் : | R.காந்திமதி | தேதாவடி, இடைக்காடு, அச்சுவேலி. |
| 18ம் இடம் : | தோ.ஜஸ்ரின்ராஜ் | 6ஆம் வட்டாரம், நெடுந்தீவு. |
| 19ம் இடம் : | பா.சிலை | அராலி தெற்கு, வட்டுக்கோட்டை. |
| 20ம் இடம் : | மு.பகீதரன் | அராலி வடக்கு, வட்டுக்கோட்டை. |
| 21ம் இடம் : | A.சகாயசீலன் | 29, கோயில் ஒழுங்கை நாவாந்துறை. |
| 22ம் இடம் : | P.சஜிதா | 13 இராசாவின் தோட்டம், யாழ்ப்பாணம். |
| 23ம் இடம் : | கி.டனோஜா | 190, சிவன்பண்ணை வீதி, யாழ்ப்பாணம். |
| 24ம் இடம் : | S.C.கிசோர்குமார் | 237, கடற்கரைவீதி, நாவாந்துறை. |
| 25ம் இடம் : | அபிராமி லோகச்சந்திரன் | சில்லாலை தெற்கு, பண்டத்தரிப்பு. |
| 26ம் இடம் : | வாகீசன் | அராலி மேற்கு, வட்டுக்கோட்டை. |
| 27ம் இடம் : | V.ராஜன் | குருநகர், யாழ்ப்பாணம். |

நிறுவனத்தினர்.

# அமெரிக்க ராஜதந்திரிக்கு விசா வழங்க அரசு மறுப்பு

(கொழும்பு)

அமெரிக்காவின் உயர் ராஜதந்திரி ஒருவருக்கு இலங்கை அரசாங்கம் விசா வழங்க மறுத்துள்ளது.

இதன்காரணமாக இரு நாடுகளுக்கும் இடையிலான ராஜதந்திர உறவுகளில் விரிசல் ஏற்பட இந்த சம்பவம் ஏது வாகக்கூடுமென அச்சம் வெளி யிடப்பட்டுள்ளது.

மகளிர் விவகாரங்களுக் கான அமெரிக்காவின் விசேட பிரதிநிதி கெதரீன் ரசலுக்கே இவ்வாறு விசா மறுக்கப்பட் டுள்ளது. எதிர்வரும் 10-11ஆம் திகதிகளில்அவர்இலங்கைக்கு விஜயம் செய்யவிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

கெதரீன்ரசலுக்கு இலங்கை அதிகாரிகள் விசா வழங்க மறுத்துள்ளதாக அமெரிக்கத் தூதரக அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார். பெண்களை சமூக, பொருளாதார மற்றும் அரசியல் ரீதியாக மேம்படுத்தி சமாதானத்தையும், அபிவருத்தி யையும், ஸ்திரத்தன்மையை யும் ஏற்படுத்துவதே ரசலின் கடமையாக அமைந்துள்ளது.

பால் நிலை சமத்துவம் தொடர்பில் அமெரிக்கா தொடர்ந் தும் கேள்வி எழுப்பும் என தூதரக அதிகாரி தெரிவித்துள் ளார். கொழும்பிற்கும் யாழ்ப் பாணத்திற்கும் ரசல் விஜயம் செய்யத் திட்டமிட்டிருந்தார். இலங்கைக்கு விஜயம் செய்ய அனுமதி மறுக்கப்பட்ட கார ணத்தினால் இலங்கையின் சிவில் சமூக உறுப்பினர்கள், மகளிர் அமைப்பு பிரதிநிதிகள் மற்றும் ஏனைய தரப்பினரை இணையத்தின் ஊடாக தொடர்பு கொண்டு கருத்துக் களை பரிமாறிக் கொள்ள ரசல் திட்டமிட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இலங்கையில் பெண்கள் எதிர்நோக்கி வரும் பிரச் சினைகள் குறித்து கவனம் செலுத்துவதே ரசலின் பிர தான இலக்கு எனக் குறிப்பிடப் படுகிறது. அண்மையில் இலங கைக்கு விஜயம் செய்திருந்த அமெரிக்க துணை ராஜாங்கச் செயலாளர் நிஷா பிஸ்வால் கடுமையான விமர்சனங் களை வெளியிட்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. இந்த கருத்துக்களுக்கு அர சாங்கமும் கடும் எதிர்ப்பை வெளியிட்டிருந்தது. (எ-11)

# உலகம் போற்றும் வகையில் எமது நடவடிக்கைகள் அமையட்டும்

## முதலமைச்சர் விக்னேஸ்வரன் தெரிவிப்பு

(வவுனியா) -

வடமாகாணத் தமிழ்ப் பேசும் மக்கள் இன வேறுபாடின்றி மனி தாபிமான அடிப்படையில் வாழ்ந்து வருபவர்கள் என்று உலகம் எம்மைப் போற்றும் அளவிற்கு எமது நடவடிக்கைகள் இருக்க வேண்டும் என முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வன் தெரிவித்துள்ளார்.

வவுனியா நகர சபை அட்டவணைப்படுத்தப்படாத பதவி அணியின ருக்கான நிரந்தர நியமனம் வழங்கும் நிகழ்வு, வவுனியா நகரசபைக் கலாசார மண்டபத்தில் நேற்று மாலை 5 மணிக்கு இடம்பெற்றது. இந் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே வடமாகாண முதல மைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார். முதலமைச்சர் விக்னேஸ்வரன் மேலும் கூறுகையில்,

வடமாகாணத் தமிழ்ப் பேசும் மக்கள் இன வேறுபாடின்றி மனி தாபிமான அடிப்படையில் வாழ்ந்து வருபவர்கள் என்று உலகம் எம்மைப் போற்றும் அளவிற்கு எமது நடவடிக்கைகள் இருக்க வேண்டும் என்று எண்ணுகின்றேன்.

கத்தோலிக்க - முஸ்லிம் பிரச்சினைகள், தமிழர் - முஸ்லிம்கள் பிரச் சினைகள், சிங்களவர் - முஸ்லிம்கள் பிரச்சினைகள், சிங்களவர் - தமிழர் பிரச்சினைகள் என்று வவுனியா, மன்னார், முல்லைத்தீவு மாவட்டங் களில் பலவிதமான பிரச்சினைகள் எழுந்து வருவதை நாம் காண்கின்றோம்.

எமது மத்திய அரசின் மாண்புமிகு அமைச்சர் ரிஷாட் பதியூதீன் அவர் கள் நினைத்தால் அவையாவற்றையும் நீதியும், நியாயமானதுமான முறையில் தீர்த்து வைக்கலாம் என்பது எனது கருத்து.

காரணம் உலகத்தின் மிகப் பலம் வாய்ந்த 500 முஸ்லிம்களில் அவரையும் ஒருவராகத் தேர்ந்தெடுத்துள்ளார்கள் என்றால் அவரின் செல்வாக்கை அதிலிருந்து ஊகித்துக் கொள்ளலாம். இன்று இந்தத் தொழிலாளர்கள், அலுவலர்களின் பிரச்சினைகள் எங்கள் கூட்டத்தின் நிமித்தம் தீர்வுகாண்பதுபோல் தொடர்ந்தும் பலபிரச்சினைகளை நாங்கள் சேர்ந்தே தீர்த்து வைக்க அமைச்சர் எமக்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டும்.

இன்றைய காலகட்டத்தில் அடுத்த தேர்தலுக்காக எம்முள் பலர் வேலை செய்கின்றார்களே ஒளிய இந்தத் தேர்தலில் எமக்கு வாக் களித்தவர்களுக்கு நாமளித்த வாக்குறுதிகளை நிறைவேற்றுவதாக எமது நடவடிக்கைகள் அமைகின்றதா என்பது சந்தேகமாக இருக்கின்றது. நாம் யாவரும் சேர்ந்து ஒரு ஐக்கியமான வடமாகாணத்தைக் கட்டி எழுப்ப எல்லோரும் உதவ வேண்டும் என்றார். (எ-11)

# ஆளும் கட்சி உறுப்பினர் தீக்குளிப்பு

(கொழும்பு)

யட்டியந்தோட்டை பிர தேச சபையின் ஐக்கிய மக் கள சுதந்திர முன்னணி உறுப பினரான உபுல் சிசிர குமார (வயது 39) தனக்கு தானே தீ மூட்டி தற்கொலை செய்துள் ளார்.

நேற்று முன்தினம் மாலை புதிதாக நிர்மாணிக்கப்பட்டு கொண்டிருக்கின்ற தனது வீட்டின் முன்பாக தீக்குளித் துள்ளார்.

கடும் எரிகாயங்களுக்கு உள்ளான நிலையில், கர வனல்ல வைத்தியசாலை யில் அனுமதிக்கப்பட்டதன் பின்னர் மேலதிக சிகிச்சை களுக்காக கொழும்பு தேசிய வைத்தியசாலைக்கு மாற்றப் பட்டார்.

எனினும், சிகிச்சை பலன ளிக்காத நிலையில் நேற்றுக் காலை உயிரிழந்துள்ளதாக பொலிஸார் குறிப்பிட்டனர்.

கடன் தொல்லை காரண மாக அவர் தீ வைத்து தற் கொலை செய்து கொண்டிருக் கலாம் என்று பொலிஸார் சந் தேகம் தெரிவித்தனர்.

எனினும் இது குறித்து மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளதாகவும் குறிப்பிட்டனர். (எ-11)


## இலங்கையின் முதலாவது பரதநாட்டிய கலாநிதி



### கலாநிதி ஆனந்தஜோதி தர்ஷனன்

பரதநாட்டியத்தில் இலங்கையிலேயே முதலாவதாக கலாநிதிப் பட்டம் பெற்ற கலாநிதி ஆனந்தஜோதி தர்ஷனன் அவர் களை பெருமையுடன் வாழ்த்துகின்றோம்.

பரதநாட்டியத்தில் இளமாணி (B.F.A), முதுமாணி (M .F. A.), முதுதத்துவமாணி (M.Phil), ஆகிய பட்டங்களில் முதல் பிரிவு தேர்ச்சியை பெற்று கலாநிதிப் பட்டம் பெற்ற ஒரேஒரு இலங்கையர் என்ற பெருமையும் இவரையே சாரும் எமது முன்னாள் மாணவியை பெருமையுடன் வாழ்த்துகின்றோம்.

வரி பொன்னம்பலம் – முன்னாள் அதிபர்
வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை

(C-6417) (C-6416)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இன்று ஒரு தகவல்

### செக்கிழுத்த சிதம்பரனார்

ஒரு பழைய காலச் சம்பவம்.

இப்போது நினைத்துப் பார்த்துக்கொண்டால் நல்லது என்று தோன்றியது!

அது 1908 ஆம் வருடம் மார்ச் மாதம் 9 ஆம் திகதி. தேசம் பூராகவும் 'ஸ்வராஜ்ய தினம்' கொண்டாட வேண்டும் என்று கூறி அதற்கு வேண்டிய ஏற்பாடெல்லாம் செய்துகொண்டிருக்கிறார்கள்.

அது மட்டும் இல்லை... அந்த நாளே தான் வங்காளப் புரட்சி வீரர் விபின் சந்திரபால் சிறையிலேயிருந்து விடுதலையாகி வெளியில் வருகிறார்.

மக்களுக்கு இரட்டிப்பு மகிழ்ச்சி.

அந்தச் சமயத்திலேதான் வத்தலக்குண்டுலேயிருந்து தேசபக்தர் சுப்ரமணிய சிவா தூத்துக்குடிக்கு வருகிறார். அவரும் வ.உ.சியும் சேர்ந்துகொண்டு ஊர் ஊராகப் பிரசாரம் செய்கிறார்கள்... நாட்டுக்கு விடுதலை வேண்டும் என்று சொல்லி!

அப்போது தூத்துக்குடியிலே சப்-கலெக்டரா இருந்தவர் ஆஷ்துரை.

அவருக்கு இது பொறுக்கவில்லை... உடனே ஒரு ரிப்போட் தயார் செய்து திருநெல்வேலி கலெக்டருக்கு அனுப்பினார். அப்போது திருநெல்வேலி கலெக்டராக இருந்தவர் விஞ்ச்துரை! அப்போது அவர் உடனே நோட்டீஸ் அனுப்பினார். வ.உ.சி.க்கும் சிவாவுக்கும்.

"உங்கள் பெயரிலே புகார் இருக்கிறது... அதனாலே ஏன் உங்கள் இரண்டு பேர் மேலும் தகுந்த நடவடிக்கை எடுக்கக்கூடாது? என்பதற்கு விளக்கம் கொடுங்கள். சுய ராஜ்யதினம் கொண்டாடுகின்ற மார்ச் 9ஆம் திகதி திருநெல்வேலியிலே என்னை வந்து பார்க்கவேண்டும்!" அப்படி என்று கூறி உத்தரவு போட்டார்.

கலெக்டர் உத்தரவுக்கு மரியாதை கொடுக்க வேண்டியது நம்ம கடமை என்று நினைத்து இவர்கள் இரண்டு பேரும் போனார்கள்.

ஆனால் அவர் இவர்களுக்கு தகுந்த மரியாதை கொடுக்கவில்லை... நிற்க வைத்துப் பேசினார். உட்கார கூடச் சொல்லவில்லை.

"நாளைக்கு மறுபடியும் என்னை வந்து பாருங்கள்" என்று கோபமாகச் சொல்லியனுப்பினார்.

மறுநாளும் நிற்க வைத்துத்தான் பேசினார்.

"தூத்துக்குடியிலே நீங்கள் பண்ணியது ராஜத்துவேஷமான பிரசங்கம். அதற்காக நீங்கள் இரண்டு பேரும் மன்னிப்புக் கேட்க வேண்டும். இந்த மாவட்டத்தை விட்டே வெளியேற வேண்டும். எந்தப் பிரசங்கமும் செய்யக்கூடாது!" இதற்கான பதிலை இன்னும் இரண்டு நாளிலே எனக்குத் தெரிவிக்க வேண்டும் என்று உத்தரவிட்டார்.

மார்ச் 12 ஆம் திகதி... இரண்டு பேரும் வந்தார்கள்!

"உங்கள் உத்தரவுக்குப் பணிய மாட்டோம்... பரிபூர்ண சுயராஜ்யம் எங்கள் பிறப்புரிமை. அதை அடைந்தே தீருவோம், வந்தே மாதரம்!" என்று முழங்கினார்கள்.

கலெக்டருக்கு அதிர்ச்சி.

இவர்கள் இரண்டு பேரையும் கைதுசெய்து தடுப்புக்காவலில் வையுங்கள் என்றார். அதைக் கேட்டதும் இவர்கள் மறுபடியும் வந்தேமாதரம் என்று முழங்கினார்கள்.

சிறிது நேரத்திலே அந்த இரண்டு தலைவர்களையும் ஒரு ஜட்கா வண்டியிலே ஏற்றி பாளையங்கோட்டைச் சிறைச்சாலைக்கு அழைத்துக் கொண்டு போனார்கள்.

இதைப்பார்த்த உடனே மக்களாலே பொறுத்துக் கொள்ள முடியவில்லை. எங்கே பார்த்தாலும் ஆங்கிலேய ஆட்சி ஒழிக! வ.உ.சி. வாழ்க! சிவம் வாழ்க! என்கின்ற முழக்கம்.

மறுநாள் திருநெல்வேலி பூராகவும் கலவரம்... கடையடைப்பு. கல்லூரி- பள்ளிகளுக்குப் போனவர்கள் எல்லாம் திரும்பி வந்து விட்டார்கள். கல்லெறி! தீவைப்பு!

நிலைமை மோசமாகிவிட்டது. கலெக்டர்- சப்கலெக்டர்- பொலிஸ் அதிகாரிகள் எல்லோரும் கலவரப் பகுதிகளுக்கு விரைந்தார்கள். கட்டுப்படுத்த முடியவில்லை.

எச்சரிக்கை ஏதும் இல்லாமலே துப்பாக்கிச் சூடு... நான்கு இந்தியர்கள் அந்த இடத்திலே உயிரிழந்து போனார்கள். அதற்குப் பின்னர் வ.உ.சி., சிவா பேரிலே ராஜ நிந்தனை வழக்கு.

வ.உ.சியை எண்ணெய் பிழியற செக்கிலே மாடுமாதிரி கட்டி இழுக்க வைத்தார்கள்.

சிவாவை சுண்ணாம்புக்காரத்திலே ஊறப் போட்ட ஆட்டு ரோமங்களை கையாலே சுத்தம் செய்யச் சொன்னார்கள். இப்படியெல்லாம் கஷ்டப்பட்டு வாங்கிய சுதந்திரம் சேர் இது.

என்னங்க இது.. இன்று ஒரு தகவலிலே.. சுவாரஸ்யமாக புராணக்கதை ஏதாவது சொல்வீர்கள் என்று பார்த்தால்... சுயராஜ்யம்... சுதந்திரம் என்று என்னென்னமோ சொல்லிக் கொண்டு இருக்கிறீங்களே என்று நீங்கள் நினைக்கலாம்.

இப்போது நான் சொல்லிக் கொண்டு வந்த உண்மை நிகழ்ச்சிகள் கூட இந்தத் தலைமுறையிலே உள்ளவர்களுக்கு புராணக் கதை மாதிரி ஆகிவிட்டது. அதனாலேதான் சொன்னேன்.

இந்தக் காலத்து ஆசாமி ஒருத்தன் சொன்னான்.

வ.உ.சி. ஜெயிலுக்கு வந்து செக்கிழுத்தார்! நான் செக்கிழுத்து ஜெயிலுக்கு வந்தேன் என்றான்.

என்னடா சொல்லுகின்றாய் என்றேன். வங்கிக்கு கொண்டு போறதுக்கு என் முதலாளி மேசை மேலே வைத்திருந்த செக்கை அவருக்குத் தெரியாமல் இழுத்தேன்... அதனாலே மாட்டிக் கொண்டேன். ஜெயிலுக்கு வந்து விட்டேன் என்றான். இப்படி செக் இழுக்கிறவன் எல்லாம் எந்தக் காலத்திலே சுதந்திரம் வாங்கப் போகின்றான்?

தென்கச்சி கோ சுவாமிநாதன்

# திக்கம் வடிசாலையை தனியார் மயப்படுத்த அரசு சதித்திட்டம்

## வடக்கு மாகாணசபை உறுப்பினர் சிவயோகன்

உயிராபத்தையும் பாராமல் முழு உடலையும் வருத்தி திக்கம் வடிசாலை மூலப்பொருளான பனங்கள்ளை வழங்கிய பனைகள் தொழிலாளர்களுக்கு இற்றைவரை இரண்டு கோடியே பதினேழு இலட்சம் ரூபாய் கொடுப்பனவு வழங்கப்படவுள்ள நிலையில் அவ்வடிசாலையை தனியார்மயப்படுத்த திட்டமிட்டு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக வடக்கு மாகாண சபை உறுப்பினர் வே.சிவயோகன் குற்றம் சுமத்தியுள்ளார்.

இவ் விடயம் தொடர்பில் தொழிலாளர் சார்பில் வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவ் அறிக்கையில் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது,

வடமாகாணத்தின் மூல வளங்களான மண், கடல், பனை ஆகிய 3 வளங்களும் அரசினால் திட்டமிட்டு அழிக்கப்பட்டு வருகின்றது.

இதனடிப்படையில் மண்வளம் மிக்க விவசாய காணிகள் அபகரிக்கப்பட்டு தென்னிலங்கை மக்களுக்கு தாரைவார்க்கப்படுகின்றது. அதே போல் எமது ஆளுகைக்குட்பட்ட கடற்பரப்பில் தென்னிலங்கை மீனவர்களின் ஆதிக்கம் மேலோங்கியுள்ளது.

இலட்சக்கணக்கான பனைமரங்கள் தறிக்கப்பட்டு திட்டமிட்டு அழிக்கப்பட்டது. அத்துடன் எஞ்சியுள்ள பனைசார் வளங்களின் உற்பத்தி மையமாகவிருந்த திக்கம் வடிசாலையும் தனியார்மயப்படுத்துவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதன் ஆரம்ப கட்டமே பல வருடங்களாக வடிசாலையில் பணியாற்றி வந்த பணியாளர்கள் இம் மாதம் முதலாம் திகதி பணி நீக்கம் செய்யப்பட்டுள்ளனர். இதனால் இங்கு பணியாற்றிய 23 பணியாளர்ளும் நிர்க்கதியாக்கப்பட்டுள்ளனர்.

அத்தோடு இவ்வடிசாலையில் 5 கோடி ரூபாவிற்கு அதிகமான உற்பத்தி பொருள் (ஸ்பிறிற்) சந்தைப்படுத்தப்படாது தேங்கிக் கிடக்கின்றது.

இதனை உற்பத்திச் செலவீனத்திலும் பார்க்க குறைந்த விலையில் விற்பனை செய்து தொழிலாளர்களின் பணத்தைச் சூறையாடுவதே தனியார்மயப்படுத்தலின் பிரதான நோக்கமாகும்.

உயிராபத்தையும் பாராது உடல் முழுவதையும் மூலப்பொருளான பனங்கள்ளினை வழங்கிய பனைசார் தொழிலாளர்களுக்கு இன்று வரை இரண்டு கோடியே பதினேழு இலட்சம் ரூபாய் கொடுப்பனவு வழங்கப்படாது நிலுவையிலுள்ளது.

இந் நிலையில் தனியார் மயப்படுத்தப்படுமாயின் இதுவரை காலமும் குறித்த கொடுப்பனவைப் பெறாத தொழிலாளர்களும் பனை வளத்தை நம்பியுள்ள 35 ஆயிரம் குடும்பங்களும் நிர்க்கதியாக்கப்பட்டுள்ளனர்.

குறித்த வடிசாலையானது முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்களான த.இராசலிங்கம், க.துரைரத்தினம் ஆகியோரின் முயற்சியினால் அப்போதிருந்த தமிழர் விடுதலைக் கூட்டணி பாராளுமன்ற உறுப்பினர்கள் அனைவரினதும் பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்ட நிதியுதவி யினூடாக 1984ஆம் ஆண்டு முதல் செயற்பட ஆரம்பித்தது.

இங்கு உற்பத்தி செய்யப்பட்ட மதுசாரம் இலங்கையின் அனைத்துப் பகுதிகளிலும் சந்தைப்படுத்தப்பட்டு தொழிலாளர் சமூகம் உச்சக் கட்டப்பயனை அனுபவித்தனர்.

2000 ஆம் ஆண்டு இறுதி வரை பனை தென்னை வள கூட்டுறவுச் சங்கத்தின் வடமராட்சி கொத்தணியின் முகாமைத்துவத்தின் கீழ் இயங்கி வந்தமையால் தொழிலாளரின் சமூக மேம்பாடு ஓங்கியிருந்தது.

இதற்கு வேட்டு வைக்கும் முகமாக 2001 ஆம் ஆண்டு இலங்கைப் பாராளுமன்ற அமைச்சரவைத் தீர்மானத்தின் ஊடாக தொழிலாளர்களின் வகுப்பிற்கு மாறாகவும் பாரிய கவனயீர்ப்புப் போராட்டத்தையும் கவனத்திற் கொள்ளாது அமைச்சர் ஒருவரால் இவ்வடிசாலை இலங்கை பனை அபிவிருத்தி சபைக்கு கையளிக்கப்பட்டது.

இந்நிலையில் பனை அபிவிருத்திச் சபை நேரடியாக தன் முகாமைத்துவத்தின் கீழ் இயக்கமுடியாத நிலை ஏற்பட்டதனால் குத்தகை ஒப்பந்தம் மூலம் வடமராட்சி கொத்தணிக்கு வழங்கப்பட்டு இவ் வருடம் ஜனவரி 31 ஆம் திகதி வரை இயங்கி வந்தது.

இக்காலப்பகுதியில் உற்பத்திப் பொருளை சந்தைப்படுத்துவதில் அரசாங்கம் முயற்சியெடுக்கத் தவறியதோடு கொத்தணி எடுத்த முயற்சியையும் முடக்கியே வந்துள்ளது.

இதன் காரணமாக உற்பத்தி பொருளின் (ஸ்பிறிற்) தேக்கம் அதிகரித்ததோடு வடிசாலையின் இலாபங்களை தொழிலாளர்களுக்கு வழங்காது துஷ்பிரயோகம் செய்துள்ளது. இதன் உச்சக்கட்ட நிலையே வடிசாலையைத் தனியார் மயப்படுத்தும் முயற்சியாகும்.

இச்செயற்பாடு ஆட்டைக்கடித்து மாட்டைக்கடித்து ஆளைக்கடிக்கும் நிலையே ஆகும்.

இதனை தொழிலாளர் சமூகம் சார்பாக வன்மையாக கண்டிப்பதாக அதில் குறிப்பிடப்பட்டிருந்தது. (அ-9)

## சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 90 | 60 | 80 |
| உருளைக்கிழங்கு | 60 | 70 | 60 |
| பச்சைமிளகாய் | 40 | 50 | 80 |
| தக்காளி | 30 | 40 | 50 |
| மரவள்ளிக் கிழங்கு | 30 | 35 | 30 |
| கோவா | 30 | 40 | 40 |
| கரட் | 60 | 70 | 80 |
| பூசணி | 20 | 30 | 30 |
| புடோல் | 40 | 50 | 60 |
| வாழைக்காய் | 20 | 40 | 40 |
| சின்ன வெங்காயம் | 50-100 | 100 | 100 |
| பெரிய வெங்காயம் | 70 | 80 | 70 |
| பாகற்காய் | 100 | 120 | 160 |
| வெண்டிக்காய் | 60 | 30 | 100 |
| கருணைக் கிழங்கு | 20 | 40 | 60 |
| பயற்றங்காய் | 120 | 130 | 80 |
| லீக்ஸ் | 60 | 80 | 80 |
| பீற்றூட் | 50 | 70 | 60 |
| கறிமிளகாய் | 100 | 120 | 120 |
| முருங்கைக்காய் | 300 | 240 | 400 |
| போஞ்சி | 50 | 80 | 60 |
| கத்தரிதம்புள்ள | 50 | 60 | 60 |
| கீரை - 1 பிடி | 20 | 20 | 20 |
| தேசிக்காய் | 20 | 50 | 40 |
| தேங்காய் (ஒன்று) | 30-50 | 40 | 35-40 |
| இராசவள்ளி | 70 | 80 | 80 |

## இராசி பலன்

04.02.2014
(தை 22, செவ்வாய்க்கிழமை)
சூரிய உதயம் காலை 6.30 மணிக்கு
பஞ்சமி முன்னிரவு 7.25 மணிவரை
உத்திரட்டாதி முற்பகல் 10.41 மணிவரை
இராகுகாலம் 3.35-5.05 மணிவரை
சுபநேரம் 11.05-12.35 மணிவரை
அமிர்தசித்தம்

**மேடம்** வெளியூர்த் தொடர்புகள் அதிகரிக்கும், பொழுது போக்கு விடயங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், தேகாரோக்கியத்தில் கவனம் தேவை, வழக்கத்தை விட கூடுதல் நேரம் பணி புரியும் சூழ்நிலை உருவாகும்.

**இடபம்** செல்வாக்கு மேலோங்கும் நாள், புதிய பொருட்சேர்க்கைக்கு அடித்தளம் அமைப்பீர்கள், மனதில் இனம் புரியாத சந்தோசம் குடிகொள்ளும், பணப்புழக்கம் அதிகரிக்கும்.

**மிதுனம்** மனதிற்கினிய சம்பவங்கள் நடைபெறும் நாள், கொள்கைப் பிடிப்போடு செயற்படுவீர்கள், தொல்லை கொடுத்தவர்களே மனம்மாறி ஒத்துழைப்பு வழங்குவர்.

**கடகம்** மனதில் உற்சாகமும் மகிழ்ச்சியும் அதிகரிக்கும், நல்லவர்களைச் சந்தித்து நலம் காணும் நாள், திடீர் பயணங்களால் பலனுண்டு, சொத்துக்களால் நன்மையுண்டு.

**சிங்கம்** வழிபாட்டால் ஆனந்தம் காண வேண்டிய நாள், பணத் தேவைகள் கடைசி நேரத்தில் தான் பூர்த்தியாகும்; உறவினர்களின் மனக்கசப்பிற்கு ஆளாகாமல் பார்த்துக் கொள்வது நல்லது.

**கன்னி** குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை உருவாகும், எடுத்த காரியங்கள் எளிதில் கைகூடும், கௌரவமான நாள், விருந்துக்களில் கலந்து மகிழும் வாய்ப்புண்டு.

**துலாம்** நல்ல செய்திகள் நாடி வரும் நாள், நல்லவர்களின் அறிமுகம் கிடைக்கும், உடல் நலம் சீராகும், கௌரவமான நாள், முயற்சிகள் எளிதில் கைகூடும்.

**விருச்சிகம்** சுப தகவல்கள் வந்து சேரலாம், பிள்ளைகள் வழியில் பெருமைக்குரிய சம்பவங்கள் நடைபெறும், அதிகாரிகள் அனுகூலமாக நடந்து கொள்வர், பிறருக்கு உதவும் எண்ணம் உருவாகும்.

**தனுசு** மனதில் இனம்புரியாத சந்தோசம் குடிகொள்ளும், சகோதர வழியில் நன்மையுண்டு, செலவுகளில் தாராளம் காட்டுவீர்கள், அரசியல் செல்வாக்கு மேலோங்கும்.

**மகரம்** கேட்ட இடத்தில் உதவிகள் கிடைக்கும் வாய்ப்புண்டு, பிரபலமானவர்களின் சந்திப்பு இடம்பெறலாம், பாகப்பிரிவினைகள் சுமுகமாக முடியும், பயணங்களால் பலனுண்டு.

**கும்பம்** ஆரோக்கியம் சம்பந்தப்பட்ட வகையில் இருந்த கவலைகள் தீரும், கோரிக்கைகள் நிறைவேற அதிக பிரயாசை காட்டுவீர்கள், மாதர் நட்புண்டு, சுப செலவுகள் கூடும்.

**மீனம்** பக்குவமாக நடந்து பாராட்டுப் பெறுவீர்கள், திட்டமிட்ட காரியமொன்றில் திடீர் மாற்றங்கள் ஏற்படலாம், பெரிய மனிதர்களின் சந்திப்பு இடம்பெறலாம்.

வளவன்

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# தீவகத்தை அபிவிருத்தி செய்ய சனத்தொகை செறிவுபோதாது

தீவக பிரதேசங்களின் முழுமையான அபிவிருத்திக்கு இங்கு காணப்படுகின்ற செறிவற்ற சனத்தொகை பின்னடைவாக காணப்படுகிறது என பாராளுமன்ற உறுப்பினர் முருகேசு சந்திரகுமார் தெரிவித்துள்ளார்.

ஊர்காவற்றுறை பிரதேச சபை ஊழியர் நலன்புரிச் சங்கத்தின் 19 ஆவது ஊழியர்கள் ஒன்றுகூடல் நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.


அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,ஒரு காலத்தில் தீவகம் அதிகளவான மக்களுடன் கலகலப்பான செழிப்பான பிரதேசமாக காணப்பட்டது. ஆனால் தற்போது தீவகம் சோபை இழந்த பிரதேசமாக காணப்படுகிறது.

யுத்தம் காரணமாக இந்த பிரதேசங்களிலிருந்து இடம்பெயர்ந்து சென்றவர்கள் சென்ற இடங்களிலேயே நிரந்தரமாகிவிட்டனர். எஞ்சியவர்களே தீவகத்தில் தற்போது வாழந்து வருகின்றனர்.

இவர்கள்தான் தொடர்ந்தும் தீவகத்தின் வரலாற்றையும் மண்ணையும் பாதுகாக்கின்றவர்களாக வாழ்ந்துகொண்டிருக்கின்றனர்.

தீவக பிரதேசங்களில் தொடர்ந்தும் வாழ்கின்ற மக்களில் பலர் வறுமையில் காணப்படுகின்றனர். இவர்களுக்கான நிரந்தர தொழில் வாய்ப்புகளை ஏற்படுத்திக்கொடுக்க வேண்டுமானால் இந்த பிரதேசங்களிலேயே தொழில் மையங்களை உருவாக்குவதற்கும் பல உட்கட்டுமான பணிகளை மேற்கொள்வதற்கும் இங்கு காணப்படுகின்ற சனத்தொகையின் செறிவற்ற தன்மை தடையாக உள்ளது. இருந்த போதிலும் தீவக பிரதேசங்கள் இரண்டு கட்டங்களில் அபிவிருத்திசெய்யப்பட்டது. ஒன்று யுத்தகாலப் பகுதியில தீவகம் மட்டுமே அரசின் கட்டுப்பாட்டு பரதேசமாக இருந்த காரணத்தினால் பெருமளவு நிதிகளை பெற்று பல அபிவிருத்திப்பணிகள் முன்னெடுக்கப்பட்டன.

அதன் பின்னர் மீள்குடியேற்ற காலத்தில் தீவகங்களின் அபிவிருத்திக்கு என விசேடமாக இங்குள்ள உள்ளூராட்சி சபைகள் மூலம் பெருமளவு நிதிகள் பெறப்பட்டு அபிவிருத்திகள் முன்னெடுக்கப்பட்டன. வீதிகள், அரச திணைக்களங்களின் அலுவலகங்கள், மின்சாரம், குடிநீர் போன்ற பல வேலைத் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. (அ-9)




நன்றி:-மிரர்

# வடமராட்சி கிழக்கின் பிரதான வீதிகள் 30 வருடங்களாக புனரமைக்கப்படவில்லை

## வடமராட்சி கிழக்கு பட்டப்படிப்பு மாணவர் ஒன்றியம் சுட்டிக்காட்டு

வடமராட்சி கிழக்கு பிரதேசமானது கடந்த காலங்களில் ஏற்பட்ட சுனாமி மற்றும் யுத்த அனர்த்தங்களால் பெரிதும் பாதிக்கப்பட்டது. இப் பிரதேசத்தில் மக்கள் மீண்டும் மீள்குடியேற்றப்பட்டு நான்கு வருடங்கள் கடந்துவிட்ட நிலையிலும் இப் பகுதியின் பிரதான வீதிகள் எவையும் செப்பனிடப்படாமல் மிகவும் மோசமான நிலையில் காணப்படுகின்றது என வடமராட்சி கிழக்கு பட்டப்படிப்பு மாணவர் ஒன்றியம் தெரிவித்துள்ளது.

இவ்விடயம் தொடர்பில் அவ்வொன்றியம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

இப் பிரதான வீதிகள் கடந்த 30 வருடங்களுக்கு மேலாக செப்பனிப்படமால் குண்டும் குழியுமாகக் காணப்படுகின்றது.

மழைக்காலங்களில் கடற்கரையை அண்டிய வீதிகளினுள் கடல்நீர் உட்புகுந்து கடலுக்கும் வீதிக்கும் வித்தியாசம் தெரியாது. இதனால் இவ் வீதிகளில் பிரயாணம் செய்யும் மக்கள் படும்பாடு சொல்லிலடங்காது.

இப் பிரதேசத்தில் மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் பிரிவின் கீழ் மணற்காடு முதல் போக்கறுப்பு வரையான 18 கிராம சேவகர் பிரிவில் 15 ஆயிரத்திற்கு மேற்பட்ட மக்கள் வாழ்கின்றனர். இவர்கள் தமது உற்பத்திப் பொருட்களையும் தமது தேவைகளையும் நிறைவேற்ற பருத்தித்துறை, யாழ்ப்பாணம், கிளிநொச்சி போன்ற இடங்களுக்குச் சென்று வரும் இப் பிரதான வீதிகள் சீரின்மையால் பல்வேறு இன்னல்களுக்கு உள்ளாகின்றார்கள்.

அத்துடன் இப் பிரதேசத்திற்கான பிரதான வீதியாக கேவிலிலிருந்து பருத்தித்துறை வரையான 50.5 கிலோமீற்றர் நீளமான இவ் வீதியால் எமது பிரதேச பாடசாலைக்கான பெருமளவு ஆசிரியர்கள் பருத்தித்துறையில் இருந்து வந்தே கற்பிக்கின்றார்கள்.

இப் போக்குவரத்து வீதிகளின் சீரின்மை காரணமாக பல்வேறு இன்னல்களுக்கு உள்ளாவதுடன் குறித்த நேரத்திற்கு வந்து தமது கடமைகளை ஆற்றுவது சிரமமாக காணப்படுகின்றது.

இப் பிரதேசத்தில் இருந்து உயர்கல்விகளுக்காக யாழ்ப்பாணம், பருத்தித்துறை, பளை போன்றவற்றுக்கு பெருமளவான மாணவர்கள் தினமும் சென்று வருகின்றார்கள். இவர்களும் இவ் வீதிகளின் சீரின்மையால் பல்வேறு வகை சிரமங்களை எதிர்நோக்குகின்றார்கள்.

அத்துடன் இங்கு கடமையாற்றும் ஆசிரியர்களும் கிளிநொச்சி, முல்லைத்தீவு போன்ற பிரதேசங்களுக்கு இடமாற்றம் பெற்று செல்ல விரும்புகின்றனர்.

இது தொடர்பான பொதுமக்களின் கையெழுத்துப் பெற்ற கடிதம் ஒன்றை வடக்கு மாகாண முதலமைச்சர், பாராளுமன்ற உறுப்பினர், மாகாணசபை உறுப்பினர், அரசாங்க அதிபர், உதவி அரசாங்க அதிபர், வீதி அபிவிருத்தி அதிகாரசபை போன்றவற்றுக்கு அனுப்பி வைக்கவுள்ளோம் என்பதை தெரிவித்துக் கொள்கிறோம். (அ)




### வீடு உடைத்து 50 ஆயிரம் ரூபா பெறுமதியான பொருட்கள் திருட்டு

சித்தன்கேணி கீரிமலை வீதியிலுள்ள வீடொன்றின் கதவு உடைக்கப்பட்டு 50 ஆயிரம் ரூபா பெறுமதியான பொருட்கள் திருடப்பட்டுள்ளன.

இச்சம்பவம் கடந்த சனிக்கிழமை இரவு இடம்பெற்றுள்ளது.

இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

வீட்டில் எவரும் இல்லாத சமயம் பார்த்து வீட்டின் முன்கதவை உடைத்து உள் நுழைந்த திருடர்கள் ஆடைகள், தொலைக்காட்சிப் பெட்டி உட்பட 5 ஆயிரம் ரூபா பணத்தையும் அபகரித்துச் சென்றுள்ளனர்.

சம்பவம்தொடர்பில்வட்டுக்கோட்டைபொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டதையடுத்து, பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (அ-9-23)

# யாழிற்கு நரம்பியல் பிரிவு திறந்துவைப்பு







(யாழ்ப்பாணம்)

யாழ்.போதனாவைத்தியசாலையில் ஒரு மில்லியன் ரூபா செலவில் புதிதாக ஆரம்பிக்கப்பட்ட நரம்பியல் பிரிவு நேற்று முற்பகல் 11 மணியளவில் கொழும்பு நரம்பியல் சத்திர சிகிச்சை நிபுணர் பேராசிரியர் றஞ்சனி ஹமகேவினால் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

இதுவரை காலமும் யாழ். போதனாவைத்தியசாலைக்கு வரும் நரம்பியல் நோயாளர்கள் கொழும்புக்கு அனுப்பி வைக்கப்பட்டிருந்த நிலையில் தற்போது 1997 ஆம் ஆண்டுக்குப் பின்பு இந்த நரம்பியல் பிரிவு நேற்று ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

ஆண்-பெண் இருபாலாருக்கும் சிகிச்சையளிக்கக் கூடியதாக 20 படுக்கைகளைக் கொண்டதாக இந்தப் பிரிவு ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இந்நிகழ்வில் நல்லை ஆதீன குருமுதல்வர் ஸ்ரீ லஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞான சம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள், யாழ். ஆயர் தோமஸ் சௌந்தரநாயகம் ஆண்டகை, யாழ்.நாக விகாரை விஹாராதிபதி விமலரத்தின தேரர், யாழ்.பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் பேராசிரியர் வசந்தி அரசரட்ணம்,

யாழ்.போதனாவைத்தியசாலையின் பணிப்பாளர் வைத்தியர் திருமதி பவானி பசுபதிராஜா, வடக்கு மாகாண ஆளுநரின் செயலாளர் இ.இளங்கோவன், யாழ்.பல்கலைக்கழகத்தின் மருத்துவ பீடாதிபதி வைத்தியர் பாலகுமாரன், யாழ்.போதனா வைத்தியசாலையின் பிரதிப் பணிப்பாளர் வைத்தியர் நந்தகுமார் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். (அ-6)

# குப்பிளானுக்கான பயணிகள் சேவை 31 ஆக அதிகரிக்கப்பட்டது

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்திலிருந்து குப்பிளானுக்கான சேவை இம் மாதம் முதலாம் திகதியிலிருந்து 31 சேவைகளாக அதிகரிக்கப்பட்டுள்ளதாக யாழ்.-காங்கேசன்துறை சிற்றூர்திச் சேவைச் சங்கத் தலைவர் அ.றொலின்சன் அறிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

யாழ்ப்பாணத்திலிருந்து குப்பிளானுக்கு செல்லும் வழித்தட இலக்கம் 770 சிற்றூர்திச் சேவையானது மக்களின் வேண்டுகோளுக்கிணங்க 31 சேவைகளாக அதிகரிக்கப்பட்டுள்ளன.


முன்னர் யாழிலிருந்து 13 சேவைகளும் குப்பிளானிலிருந்து 12 சேவைகளும் ஒரு மணித்தியால இடைவெளியின்படி நடைபெற்று வந்தது.

ஆயினும் இச் சேவை போதாமையாக வுள்ளதென மக்கள் கோரிக்கை விடுத்தமைக்கேற்ப, தற்போது யாழ்ப்பாணத்திலிருந்து 16 சேவைகளும் குப்பிளானிலிருந்து 15 சேவைகளும் குறுகிய நேர இடைவெளியில் இடம் பெற்று வருகின்றன.

இவ்வாறாக, 6 சேவைகள் அதிகரிக்கப்பட்டமை தொடர்பான தகவலை பிரதேசத்தில் துண்டுப் பிரசுரங்கள் மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது என்றார். (அ-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விண்வெளி வீரர்களின் உணவுத் தேவைக்காக பசுமைத் தோட்டம் அமைக்கப்பட்டுள்ளது



உலக நாடுகள் இணைந்து அமைத்துள்ள சர்வதேச விண்வெளி மையத்தில் பணியில் உள்ள விண்வெளி வீரர்களின் உணவுத் தேவைகளுக்காக அங்கே லடா என்ற பசுமைத் தோட்டம் அமைக்கப்பட்டுள்ளது. அங்கு சோதனை முயற்சியாக காய்கறிகள் வளர்க்கப்பட்டு வருகின்றன.

பட்டாணி, கீரை வகைகள் மற்றும் குள்ள வகையைச் சேர்ந்த கோதுமை போன்றவ்வை இதுவரை அங்கு விளைவிக்கப்பட்டுள்ளன. இவை அனைத்தும் சாப்பிடுவதற்கு பாதுகாப்பானவை என்ற சான்றிதழைப் பெற்றுள்ளதாக உயிர்மருத்துவவியல் சிக்கல்கள் குறித்து ஆய்வு செய்யும் ரஷ்ய நிறுவனம் ஒன்றில் பணிபுரியும் ரஷ்ய ஆய்வாளரான மார்கரிட்டா லெவின்ஷிக் சமீபத்தில் மொஸ்கோவில நடைபெற்ற விண்வெளிக் கருத்தரங்கின் ஆண்டு மாநாட்டில் தெரிவித்தார்.

இந்த ஆண்டிற்கான பழுது பார்க்கும் பணி நிறைவடைந்தவுடன் அரிசி, தக்காளி, மணி மிளகு போன்றவை அங்கு பயிரிடப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

விண்வெளி வீரர்களின் உணவுத் தேவைக்காக இந்தப் பயிர்கள் பயன்படுவதோடு, விண்வெளியில் ஏற்படக்கூடிய மரபணு மாற்றங்கள் குறித்த ஆய்விலும் இவை பயன்படுத்தப்படும் என்று ஆய்வு நிறுவனம் குறிப்பிட்டுள்ளது. விண்வெளியில் அமைக்கப்படும் வாழ்விடம் குறித்த நம்பிக்கையை அளிப்பதாக இந்த முடிவுகள் இருப்பதாக ரஷ்ய ஆய்வு நிறுவனம் தெரிவிக்கின்றது.

அமெரிக்காவின் உடா மாகாண பல்கலைக் கழகத்தின் விண்வெளி டைனமிக்ஸ் ஆய்வகத்துடன் இணைந்து ரஷ்ய நிறுவனம் இந்த விவசாய முயற்சியில் இறங்கியுள்ளது. (அ-2)

# அரசு வட்டியை செலுத்தவே கடன் பெற்று வருகின்றது

## ஜே.வி.பி. குற்றச்சாட்டு

(கொழும்பு)

கடன் மற்றும் வட்டியை செலுத்த அரசாங்கம் கடன் வாங்குவதாக ஜே.வி.பி. கட்சி குற்றம் சுமத்தியுள்ளது, 6 இலட்சத்து 49 ஆயிரம் கோடி ரூபா கடனை அரசாங்கம் பெற்றுக் கொண்டுள்ளதாக ஜே.வி.பியின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா தெரிவித்துள்ளார்.

கடன் தவணை மற்றும் வட்டியைச் செலுத்த அரசாங்கம் மீளக் கடன் பெற்றுக் கொள்கின்றது, பெற்றுக்கொள்ளப்பட்ட கடனை அரசாங்கம் விரயமாக்கி வருகின்றது.

ஐந்து நாட்கள் பாகற்காய் சாப்பிட்டு உயிர் வாழ்ந்த குடும்பம் பற்றிய தகவல்கள் கிடைக்கப் பெற்றுள்ளன.

இந்த நிலையில் சுபீட்சமான எதிர்காலம் பற்றி அரசாங்கம் பிரசாரம் செய்கின்றது.

குழந்தைகளின் பால்மா விலையை அதிகரித்த ஜனாதிபதி, தனது பிள்ளைகள் விளையாட கார்ப்பந்தயங்களை ஒழுங்கு செய்து கொடுக்கின்றார். நாட்டின் பொருளாதார நன்மைகள் எல்லோருக்கும் கிடைப்பதில்லை.

சமூகத்தின் ஒருசில தரப்பு மட்டுமே பொருளாதார நலன்களை அனுபவிக்கின்றது. நாடு பாரிய பொருளாதார நெருக்கடிகளை எதிர் நோக்கி வருகின்றது.

மாற்று பொருளாதாரக் கொள்கை ஒன்றின் மூலமே நாட்டின் பொருளாதாரத்தை கட்டியெழுப்ப முடியும் என அவர் தெரிவித்துள்ளார். (அ-2)

ஓம்
சின்மயா மிஷன்– யாழ்ப்பாணம்
"அன்பின் ஆற்றல்"
(ஆன்மீக அருளுரை)
இந்தியா சேலத்தில் இருந்து வருகை தரும்
சுவாமி கிருஸ்ணாத்மானந்தா
காலம்–06,07,08,09 மாசி 2014
நேரம்–பி.ப. 6.00–7.30
இடம்– இல. 09, செட்டித்தெரு ஒழுங்கை, நல்லூர், யாழ்ப்பாணம்
புதிய மண்டபம் 06-02-2014 மாலை 4 மணிக்கு சுவாமி கிருஸ்ணாத்மானந்தா அவர்களால் திறந்து வைக்கப்படும்.
அன்புடன் அழைக்கின்றோம்! அனுமதி இலவசம்!!
சின்மயா மிஷன், இல.09, செட்டித்தெரு ஒழுங்கை, நல்லூர்.
தொலை.இல. 0212223447 (இ)

# கத்திக்குத்துடன் இலங்கை வந்தார் மாலைதீவு எம்.பி.

(கொழும்பு)

மாலைதீவின் ஜனநாயக கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் அல்ஹான் பாமி கத்திக் குததுக்கு இலக்கான நிலையில் இலங்கைக்கு அழைத்து வரப்பட்டுள்ளார்.

இலங்கையில் அவருக்கு 3 மணித்தியால சத்திரசிகிச்சை மேற்கொள்ளப்பட்டதாக மாலைதீவு தகவல்கள் தெரிவிக்கின்றன.

இலங்கைக்கு நேற்று முன்தினம் மாலை அழைத்து வரப்பட்டார். அவரின் உடல்நிலை மோசமாகவுள்ளதாக அவருடைய சகோதரர் குறிப்பிட்டுள்ளார்.

இந்தக் கத்திக்குத்து தாக்குதல் திட்டமிடப்பட்ட ஒன்றாக இருக்கலாம். அரசியலில் அவருடன் பகையை கொண்டிருப்பவர்களே இந்தத் தாக்குதலை மேற்கொண்டிருக்கலாம் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இந்தக் கத்திக்குத்து சம்பவம் நேற்று முன்தினம் இரவு 9 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

சம்பவம் தொடர்பில் மூன்று பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர். (அ-2)

# யானைகளின் தொல்லைகளை தடுப்பதற்கு பனைமர வேலி

(கொழும்பு)

யானைகளுக்கும் மனிதர்களுக்கும் இடையே ஏற்படும் மோதல்களை தடுக்கும் வகையில், இலங்கையில் புதிய வகையான ஒரு முன்னெடுப்பு வெற்றி பெற்றுள்ளதாக ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.

பனைமரங்களைக் கொண்டு வேலியை அமைப்பதன் மூலம் நீண்டகால அடிப்படையில் மனிதர்கள் வாழும் பகுதிகளுக்குள் யானைகள் வருவதை நிரந்தரமாகத் தடுக்க முடியும் என்று இந்த ஆய்வில் ஈடுபட்ட இலங்கையின் ஜனதாக்ஷன் எனும் அமைப்பும் பிரிட்டனைத் தலைமையகமாகக் கொண்டு இயங்கும் பிராக்டிகல் ஆக்ஷன் எனும் அமைப்பும் தெரிவித்துள்ளன.

முட்கம்பி வேலிகள், மின்சார வேலிகளைவிட இயற்கையாக பனைமரங்களைக் கொண்டு அமைக்கப்படும் வேலி மிகவும் செலவு குறைந்தது, பராமரிப்பு செலவுகள் அற்றது மற்றும் நூறு ஆண்டுகள் வரை நீடித்திருக்கக் கூடியது என்று இந்த முன்னெடுப்பின் திட்ட இயக்குநர் லாஃபிர் மொஹமட் தெரிவித்துள்ளார்

இலங்கையில் நான்கு இடங்களில் சோதனை முறையில் முன்னெடுக்கப்பட்ட இந்தத் திட்டம் வெற்றி பெற்றுள்ளது என்றும் இதையடுத்து நாடெங்கும் யானைகள் நடமாடும் கிராமங்களை ஒட்டிய பகுதிகளில் இந்தத் திட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

குறுக்கு நெடுக்காக பனை மரங்களை நடுவதன் மூலம், அந்த மரங்கள் செறிந்து நெருங்கி வளரும்போது, யானைகள் மனிதர்கள் வாழும் பகுதிக்குள் வருவதை தடுப்பதோடு மட்டுமல்லாமல், அவற்றுக்கு உணவுக்கும் வழி செய்யும் எனவும் லாஃபிர் மொஹமட் சுட்டிக்காட்டினார்.

பனைமரங்கள் முற்றாக வளர்ந்து முழுமையான பாதுகாப்பை அளிப்பதற்கு எட்டு வருடங்கள் ஆகும் என்றாலும் அதுவரை மின்சார வேலிகள் அல்லது முட்கம்பி வேலிகளை மக்கள் பயன்படுத்த வேண்டும் எனவும், மரங்கள் வளர வளர, சிறிது சிறிதாக அந்த வேலிகளை அகற்ற முடியும் எனவும் அவர் கூறுகிறார்.

இலங்கையில் ஆண்டொன்றுக்கு சராசரியாக ஐம்பதுக்கும் அதிகமானவர்கள் யானைகளின் தாக்குதல் காரணமாக உயிரிழக்கிறார்கள் என்று அறிக்கைகள் தெரிவிக்கின்றன. (அ-2)

கல்யாண மாலை
இவர்களுக்கு மணமகள் தேவை

பிறப்பு: 1985 இந்து
நட்சத்திரம்: திருகோணம் 1
கி.பா: 71 செவ் 8 ல்
உயரம்: 5'6"
தகைமை/தொழில்: BBM, AAT / அரச உத்தியோகம் தொ.இ: B/997

பிறப்பு: 1984 இந்து
நட்சத்திரம்: ரேவதி 4
கி.பா: 50 ¾
உயரம்: 5'5"
தகைமை/தொழில் A/L/விற்பனைப் பகுதி பொறுப்பாளர் தொ.இ: B/999

பிறப்பு: 1983 இந்து
நட்சத்திரம்: சுவாதி 4
கி.பா: 31 சூரி செவ் 5 ல்
உயரம்: 5'8"
தகைமை/தொழில்: Dip. in Teach, அகில இலங்கை சமாதான நீதவான் (J.P) தொ.இ: B/1000

பிறப்பு: 1973 இந்து
நட்சத்திரம்: பூராடம் 2
கி.பா: 16 ¾ செவ் 12 ல்
உயரம்: 5'6"
தகைமை/தொழில்: A/L / (கனடா PR) தொ.இ: B/1003

இவர்களுக்கு மணமகன் தேவை

பிறப்பு: 1978 இந்து
நட்சத்திரம்: சுவாதி
கி.பா: 39 ¾ செவ் 2 ல்
உயரம்: 5'2"
தகைமை/தொழில்: BBA / வங்கி உதவி முகாமையாளர் தொ.இ: G/672

பிறப்பு: 1990 இந்து
நட்சத்திரம்: உத்தரம் 2
கி.பா: 27 ½
உயரம்: 5'4"
தகைமை/தொழில்: A/L, NCED தொ.இ: G/1452

பிறப்பு: 1977 இந்து
நட்சத்திரம்: சுவாதி
கி.பா: 14 செவ் 2 ல்
உயரம்: 5'3"
தகைமை/தொழில்: A/L / தனியார் நிறுவனம்
எதிர்பார்ப்பு: RC சமயத்தவரும் ஏற்றுக்கொள்ளப்படும். தொ.இ: G/1453

பிறப்பு: 1987 இந்து
நட்சத்திரம்: சதயம் 1
கி.பா: 33
உயரம்: 5'1"
தகைமை/தொழில்: O/L தொ.இ: G/1455

கல்யாண மாலை
(சர்வதேச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே
தொடர்பு:- 021 720 1005
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசு நில அபகரிப்பை மேற்கொள்ளவே பொருத்தமற்ற பயிரை நடவுள்ளது

## வடக்கு விவசாய அமைச்சர்

(முழங்காவில்)

எமது நிலங்களை அபகரிப்பதற்காகவும் போர்த்தாக்கம் முடிவுற்ற பின்னர் பொருளாதார ரீதியில் பின்னடைவை ஏற்படுத்துவதற்காகவுமே பொருத்தமற்ற பயிர்ச் செய்கைகளை வடமாகாணத்தில் மேற்கொள்ள அரசாங்கம் முயற்சிப்பதாக வடமாகாண விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசன் குற்றஞ்சாட்டியுள்ளார்.

முழங்காவில் பிரதேசத்தில் தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளுக்குப் பப்பாசி மரக்கன்றுகள் வழங்கும் நிகழ்வு அண்மையில் முழங்காவில் பொதுநோக்கு மண்டபத்தில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரை நிகழ்த்திய போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

பாப்பாசிப்பழம் எங்களைப் பொறுத்த வரையில் அதிகளவு தீண்டப்படாத பழமாகவே இருந்தது. ஆனால் தற்போது ஏற்றுமதிக்கான ஒரு சந்தை வாய்ப்புக் கிடைத்துள்ளது.

தென்னிலங்கைப் பகுதிகளில் இருந்து வருகை தரும் பழங்களுக்குக் கொடுக்கின்ற முன்னுரிமையை உள்ளூரில் இருந்து உற்பத்தி செய்யப்படும் பழங்களுக்கு நாங்கள் கொடுப்பதில்லை.

பொருளாதாரத்தைப் பொறுத்த வரையில் எங்களுடைய விவசாயிகள் மிகுந்த அனுபவமும் பயிற்சியும் கொண்டவர்களாகவுள்ள போதிலும், இன்று போர்ப் பாதிப்புக்களால் நலிவடைந்து இருக்கின்ற ஒரு சமூகமாக உள்ளனர்.

இவ்வாறான நிலையில் ஏற்றுமதியுடன் கூடிய பப்பாசிச் செய்கை ஆறுதல் தரக்கூடியதாக இருக்கும்.

இச்செய்கை எமது பிரதேசத்தில் இலாபமாக வளரக் கூடிய பொருத்தமான பயிர் என்பதும் குறிப்பிடத்தக்கது. இதன் உற்பத்தியாளர்கள் ஒன்றிணைந்து கூட்டுறவுச் சங்கங்கள் ஊடாகப் பழங்களை ஏற்றுமதி செய்ய முன்வர வேண்டும்.

எமது பிரதேசத்தில் எந்தப்பயிரை நடுகை செய்யலாம் என்று தீர்மானிக்க வேண்டிய உரிமையும் எங்களிடமே உள்ளது.



சந்தனம், கரும்பு, இறப்பர் மரங்களை இந்த மண்ணில் நடுகை செய்யுமாறு நிலத்தைக் கேட்பதற்கு யாருக்கும் உரிமை கிடையாது.

போர்ப் பாதிப்புக்கு பின்னர் எங்களை நோக்கி பொருளாதார ரீதியான வலைப் பின்னல்கள் பின்னப்பட்டுக் கொண்டிருக்கின்றன. இத்தகைய வேலைத் திட்டங்களை மேற்கொள்ளும் அரச சார்பற்ற நிறுவனங்கள், வட மாகாண சபையுடன் கலந்தாலோசிக்காமல் எந்த ஒரு வேலைத்திட்டங்களையும் எங்களுடைய மண்ணில் மேற் கொள்வதற்கு நாங்கள் இடமளிக்க மாட்டோம் என்றார். (அ-9-23)

# ஆன்மீக சொற்பொழிவு

(பூநகரி)

யாழ்.சின்மயா மிஷனின் அழைப்பின் பேரில் இந்தியா சேலத்தில் இருந்து வருகை தந்துள்ள சுவாமி கிருஸ்ணாத்மானந்தவின் **அன்பின் ஆற்றல்** எனும் தலைப்பிலான ஆன்மீக அருளுரை நாளை புதன்கிழமை பிற்பகல் 4 மணி முதல் 5 மணி வரை கிளி/ தர்மபுரம் இல 1 அ.த.க பாடசாலை பிரதான மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இதில் கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள ஆலய நிர்வாகிகளை தவறாது கலந்து கொள்ளுமாறு சின்மயா மிஷனின் யாழ். வதிவிட ஆச்சார்யார் பிரமச்சாரி ஜாக்கிரத் சைதன்ய சுவாமிகள் அறிவித்துள்ளார். (அ-9-84)




# நட்டஈட்டு தொகையை பெற்றுத் தாருங்கள்

## விவசாயிகள் கோரிக்கை

(இராமநாதபுரம்)

புதுக்குடியிருப்பு பிரதேசத்திற்குட்பட்ட விசுவமடு மேற்கு கிராமத்தில் மேற்கொள்ளப்பட்ட கால போக நெற்செய்கையினால் பாரிய நட்டம் ஏற்பட்டுள்ளதாக விவசாயிகள் கவலை வெளியிட்டுள்ளனர்.

விசுவமடு மேற்கு கிராமத்தில் 700 ஏக்கரில் காலபோக நெற்செய்கை மேற்கொள்ளப்பட்டது. இதில் 600 ஏக்கர் நெற்செய்கை முற்றாக அழிவடைந்துள்ளது.

அத்தோடு எஞ்சிய 100 ஏக்கரில் 50 வீதமான நெற்செய்கையே விளைச்சலை தந்துள்ளதாக விவசாயிகள் தெரிவித்துள்ளனர்.

பருவமழை தவறியமையால் காலபோகச் செய்கையில் பாரிய நட்டத்தை அடைந்துள்ளதாகவும் அதற்கான நட்டஈடு தேவைப்படுவதாகவும் அவர்கள் வலியுறுத்தியுள்ளனர்.

எனவே விசுவமடு மேற்கு கமக்கார அமை



ப்பினர் குறித்த கிராமத்தில் ஏற்பட்டுள்ள நெற்செய்கை அழிவை உரியவர்களுக்கு எடுத்துரைத்து உதவிகளைப் பெற்றுத்தர ஆவன செய்ய வேண்டுமென விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

கடந்த காலபோகச் செய்கையின் போது பருவமழை பெய்யாமையால் நெற் செய்கையில் ஈடுபட்ட அனைத்து விவசாயிகளும் பாரிய நட்டத்தை எதிர்நோக்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ-9-269)

# கிராம அபிவிருத்தி சங்கத்தின் நிர்வாக தெரிவு இடம்பெறவில்லை

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டத்தின் கரைதுறைப்பற்று பிரதேசத்தின் கீழுள்ள முள்ளியவளை மத்தி கிராமசேவையாளர் பிரிவில் கிராம அபிவிருத்தி சங்கத்திற்கான புதிய நிர்வாகத் தெரிவு இடம்பெறாமையால் அபிவிருத்தி செயற்பாடுகளில் பின்னடைவு ஏற்பட்டுள்ளதாக சமூக ஆர்வலர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

யுத்தத்தின் பின்னர் கடந்த 2010ஆம் ஆண்டு ஏப்ரல் 10ஆம் திகதி இக்கிராம மக்கள் மீள்குடியேற்றம் செய்யப்பட்டனர்.

4 வருடங்கள் கடந்துள்ள நிலையில் முள்ளியவளை மத்தி கிராம சேவையாளர் பிரிவின் கீழுள்ள கிராம அபிவிருத்திச் சங்கத்திற்கான புதிய நிர்வாகத் தெரிவு இடம்பெறவில்லை.

தற்போது இயங்கி வருகின்ற பழைய நிர்வாகிகள் சேவை திருப்திகரமாக அமையாமையால் கிராமத்தின் அடிப்படை அபிவிருத்தித் திட்டங்கள் அனைத்தும் பின் தங்கி காணப்படுகின்றது.

இக்கிராமத்தில் வீதி அபிவிருத்தி, வீட்டுத் திட்டம் வாழ்வாதாரப் பிரச்சினைகள் குடிநீர் பிரச்சினை மாணவர்களின் இடைவிலகல், முன்பள்ளிகளின் செயற்பாடுகளில் வீழ்ச்சித் தன்மை, கிராமமட்ட அமைப்புக்கள் செயற்பாடுகள் குன்றிய நிலை போன்ற பல்வேறு குறைபாடுகள் காணப்படுகின்றது.

இவ்வாறான நிலையுள்ளதனால் புதிய நிர்வாகத்தின் அவசியத்தை வலியுறுத்தி கரைதுறைப்பற்று கிராம அபிவிருத்தி உத்தியோகத்தருக்கு அறிவித்தும் இதுவரை எவ்வித நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படவில்லை.

எனவே இக்கிராமத்தின் நிலையைக் கருத்திற்கொண்டு சம்பந்தப்பட்டோர் இவ்வருடம் கட்டாயம் புதிய நிர்வாகத்தை தெரிவு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டுமென சமூக ஆர்வலர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (அ-9-267)



கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள சாந்தபுரம் கிராம மாணவர்களுக்கு சுவிஸ் எழுகை அமைப்பு பாராளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரன் ஊடாக அப்பியாசக் கொப்பிகள் அண்மையில் வழங்கப்பட்ட போது...
(படம்:- மானிப்பாய் செய்தியாளர்)

# பயணிக்கமுடியாத நிலையில் முத்தையன்கட்டு பாலம்

(பூந்தோட்டம்)

முத்தையன்கட்டு கிராமத்தின் முக்கிய போக்குவரத்து மார்க்கத்தில் அமைந்துள்ள முத்தையன்கட்டு பாலம் மக்கள் பயணிக்க முடியாத நிலையில் உள்ளதாக அப்பகுதி மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

முத்தையன்கட்டு வலதுகரை மற்றும் இடது கரையை இணைக்கும் இப்பாலம் கடந்த ஓகஸ்ட் மாதம் புனரமைப்பு செய்யப்பட்டு திறந்து வைக்கப்பட்டிருந்தது.

ஆயினும் திறக்கப்பட்டு சில நாட்களிலேயே சேதமடைந்துள்ள இப்பாலம் தற்போது ஆபத்தானதாக மாறியுள்ளது என இக் கிராமத்தவர்கள் தெரிவிக்கின்றனர்.

பேராறை ஊடறுத்து செல்லும் வீதியில் அமைந்துள்ள இப்பாலம் மழை காலங்களில் நீர் வழிந்தோடுவதற்கு ஏற்ற வகையில் அமைக்கப்படாமையினால் பாலத்தினூடாக நீர்செல்ல முடியாது அயலில் உள்ள வீடுகளினுள் நீர் செல்வதாகவும் இவ்வாறு வரும் நீர் தேங்கி நிற்பதனால் மக்கள் இடம்பெயர வேண்டிய நிலைக்கு தள்ளப்படுவதாகவும் சுட்டிக்காட்டியுள்ளனர்.

மழை காலங்களில் இவ் வீதியால் செல்ல முடியாமையினால் இப் பாலம் உயர்த்தி கட்டப்பட்டபோதிலும் முன்னர் கட்டப்பட்ட பாதையிலிருந்து நீர் வழிந்தோடும் வழிமுறைகள் அகற்றப்படாமலும் தற்போது கட்டப்பட்ட பாலம் போதுமான இடைவெளி இன்றி கட்டப்பட்டமையினாலுமே நீர் தேங்கி நின்று கிராமங்களுக்குள் புகுவதாகவும் தெரிவிக்கின்றனர்.

அத்துடன் பாலம் வீதியில் இருந்து மிகவும் தாழமான பகுதியில் அமைக்கப்பட்டுள்ளமையினால் துவிச்சக்கர வண்டியில் செல்லும் மக்கள் துவிச்சக்கரவண்டியை உருட்டிச் செல்ல வேண்டியுள்ளதாகவும் பாலம் உடைந்து வருவதனால் போக்குவரத்து செய்வது ஆபத்தானதாகவுமுள்ளது.

எனவே இப் பாலத்தை சிறந்த முறையில் புனரமைக்க வேண்டும் என இப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (அ-9-266)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழர்கள் தங்களை தாங்கள் ஆளவேண்டும் என்பதில் கூட்டமைப்பு உறுதியாகவுள்ளது

## யோகேஸ்வரன் எம்.பி.தெரிவிப்பு

(மட்டக்களப்பு)

**கிழக்கு மாகாண சபையானது கல்வி மற்றும் வேலைவாய்ப்பில் தமிழர்களை திட்டமிட்டு புறக்கணித்து வருவதாக தமிழ் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சீனித்தம்பி யோகேஸ்வரன் தெரிவித்துள்ளார்.**

போட்டிப் பரீட்சைகளில் சித்தியடைந்த போதிலும், நியமனங்களைப் பெறுவதில் தமிழர்கள் திட்டமிட்ட முறையில் புறக்கணிப் படுவதாகவும் அவர் கூறினார்.

மட்டக்களப்பு சத்துருக்கொண்டான் புளியடி முனை அரசினர் தமிழ் கலவன் பாடசாலை யின் வருடாந்த இல்ல விளையாட்டுப் போட்டி அண்மையில் நடைபெற்றது. இதில் உரை யாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் அங்கு மேலும் உரையாற்றுகையில்,

இந்த நாட்டில் யுத்தம் ஆரம்பிக்கப்பட முன்னர் தமிழர்கள் கல்வியில் உயர்ந்த நிலையில் இருந்தார்கள். இவர்களின் கற்றல் ஆற்றலை அழிக்க வேண்டுமென்பதற்காக யாழ்ப்பாண நூலகத்தை எரித்தார்கள்.

போட்டிப் பரீட்சையில் கூடிய பெறுபேறுக ளைப் பெற்றும் பதவியைப் பெறமுடியாது ஒடுக்கப்படும் இனமாக கிழக்கு மாகாணத்தில் நாம் இன்று வாழ்ந்துகொண்டிருக்கி றோம்.

இவற்றைக் கண்டு நாங்கள் சோரவில்லை. இந்த அராஜக நடவடிக்கையை எதிர்த்து எமது உரிமைக்காக நாங்கள் வழக்குத் தாக்கல் செய்துள்ளோம். எமது மக்களின் கல்வி உரிமை, மொழி உரிமை பாதுகாக்கப்பட வேண்டும்.

இதேபோன்று பல திணைக்களங்களில் பெரும்பான்மை இனத்தை மையமாகக் கொண்டு சிற்றூழியர்கள் நியமனங்கள் மேற்கொள்ளப்படவுள்ளன. இதனை தடுக்கும வகையில் நாங்கள் பல நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளோம்.

கிழக்குமாகாணசபையானது கல்வி, வேலை வாய்ப்பு போன்றவற்றில் தமிழர்களை திட்டமிட்டு புறக்கணித்து வருகிறது. இதனை ஒருபோதும் ஏற்றுக்கொள்ள முடியாது.

நாங்கள் அரசாங்கத்துடன் இணைந்து செயற்பட்டால் பதவிகளைத் தருவதற்கு அவர்கள் தயாராகவுள்ளார்கள். ஆனால், எமது மக்களை விற்று அரசாங்கப் பதவிகளைப் பெற நாங்கள் தயாராக இல்லை.

எமது மக்கள் செய்த தியாகங்களை ஒரு போதும் நாங்கள் மறக்க மாட்டோம். எமது மக்களின் அடிப்படை உரிமைகளைப் பாது காப்பதில் நாங்கள் தீவிரமாக செயற்பட்டுக் கொண்டிருக்கிறோம்.

தமிழ் மக்களுடைய தாயகத்தை அடை யாளப்படுத்த வேண்டும். தமிழர்கள் தங்க ளைத் தாங்களே ஆள வேண்டும் என்பதில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உறுதியாகவு ள்ளது என்றார். (அ-2)

# 80 ஏக்கர் பயிர் நிலம் தீக்கிரை



(கொழும்பு)

மாரவில, தெடுவாவ - மட்டாகொடுவ பிரதேசத்தில் பரவிய தீயின் காரணமாக 80 ஏக்கர் நிலப்பகுதி அழிவடைந்துள்ளது.

நேற்று முன்தினம் மாலை ஏற்பட்ட தீயின் காரணமாக 15 ஏக்கர் தென்னந் தோப்பு அழிவடைந்துள்ளது.

மாரவில பொலிஸ் அதிகாரிகள், பிரதேசவாசிகள் மற்றும் சிவில் பாதுகாப்பு அதிகாரிகள் இணைந்து தீயை கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவந்துள்ளனர்.

தீ பரவியமைக்கான காரணம் இது வரை கண்டறியப்படவில்லை. (அ-2)

# இலங்கைப் பெண் மீது துஷ்பிரயோகம்

(குவைத்)

பாலியல் துஷ்பிரயோகத்திற்கு உட்படுத் தப்பட்ட சம்பவம் தொடர்பில் இலங்கைப் பெண்ணொருவர் குவைத் பொலிஸாரிடம் முறைப்பாடு செய்துள்ளார்.

தனக்கு வேலை வாய்ப்பை பெற்று தந்த அலுவலகத்தில் பணியாற்றும் அதிகாரி ஒருவர், தன்னை பாலியல் துஷ்பிரயோகத்திற்கு உட்படுத்தியதாக இலங்கை பெண் ஹவாலி பொலிஸ் நிலையத்தில் செய்துள்ள முறைப்பாட்டில் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன் சம்பவம் பற்றி பொலிசில் முறைப்பாடு செய்தால் குவைத்தில் இருந்து வெளியேற்ற நேருமெனவும் அந்த அதிகாரி அச்சுறுத்தியுள்ளார்.

சம்பவம் குறித்து பொலிஸார் சந்தேக நபரிடம் விசாரணை நடத்தியுள்ளதுடன், அவருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்க வுள்ளதாக அறிவித்துள்ளனர். (அ-2)

# வீதி விபத்தில் தமிழ் இளைஞர் பலி

(இத்தாலி)

இத்தாலியின் சிசிலி தீவில் அதிவேக நெடுஞ்சாலை ஒன்றில் சென்ற இரண்டு கார்கள் நேருக்கு நேர் மோதியதில் இலங்கையை சேர்ந்த இளைஞர் ஒருவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார்.

28 வயதான இளைஞரே விபத்தில் பலியாகியுள்ளார்.

உயிரிழந்த இளைஞர் கடந்த முதலாம் திகதி மாலை பணி முடிந்து தங்குமிடத்திற்கு காரில் திரும்பிக் கொண்டிருந்த போதே இவ் விபத்து நேர்ந்துள்ளது.

இளைஞர் செலுத்திச் சென்ற வாகனத்திற்கு எதிரில் வேகமாக வந்த மற்றுமொரு வாகனம் இளைஞரின் வாகனத்தின் மீது மோதியுள்ளது.

இந்த விபத்து கோரமானதாக இருந்ததாகவும் விபத்தில் உயிரிழந்த இளைஞரின் சடலம் வாகனத்தில் சிக்கியிருந்ததுடன் மிகவும் சிரமத்துக்கு மத்தியில் அதனை மீட்டெடுத்ததாகவும் சிசிலி பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவம் குறித்து சிசிலி பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (அ-2)


# தேசிய சுதந்திர தினத்தில் கைதிகள் விடுவிக்கப்படுவர்

(கொழும்பு)

இலங்கையின் 66ஆவது தேசிய சுதந்திர தினத்தை முன்னிட்டு சிறைக் கைதிகள் சிலர் விடுவிக்கப்படவுள்ளதாக சிறைச்சாலைகள் தலைமையகம் தெரிவித்துள்ளது.

ஜனாதிபதி மன்னிப்புப் பெற்ற சிறைக் கைதிகள் இன்று செவ்வாய்க்கிழமை விடுதலை செய்யப்படுவர் என சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகம் ஜே.பி. குலதுங்க தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி பொது மன்னிப்புப் பெற்ற கைதிகளின் பெயர் விபரங்கள் சிறைச் சாலைகள் தலைமையகத்திற்கு அனுப்பி



வைக்கப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

அதன்படி, 700 தொடக்கம் 800 கைதிகள் விடுதலை செய்யப்படவுள்ளதாக அவர் கூறினார். (அ-2)

# வல்லப்பட்டை வைத்திருந்தவர் கைது

(கொழும்பு)

ஒரு தொகை வல்லப்பட்டை வைத்திருந்த சந்தேகநபர் ஒருவர் வாத்துவ, மெலகம பிரதேசத்தில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்படும் போது, சந்தேக நபரிடமிருந்து 5, 6 அடி உயரமான வல்லப் பட்டைகள் கைப்பற்றப்பட்டுள்ளன.

சந்தேகநபர் பாணந்துறை நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்படவுள்ளார்.

இந்த சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை வாத்துவ பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (அ-2)

## பெண் ஊடகவியலாளரின்

# கொலையுடன் தொடர்புடைய சந்தேக நபர் கைதானார்

(கொழும்பு)

ஏ.எப்.பி செய்தி சேவையின் முன்னாள் பெண் சுதந்திர ஊடகவியலாளர் மெல் குணசேகரவின் கொலையுடன் தொடர்புடைய சந்தேகநபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

தொம்பே பகுதியைச் சேர்ந்த 39 வயதான ஒருவரே சந்தேகத்தின் பேரில் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ அத்தியட்சகர் அஜித் ரோஹண குறிப்பிட்டுள்ளார்.

கடந்த 2 மாதங்களுக்கு முன்னர் ஊடகவியலாளர் மெல் குணசேகரவின் வீட்டில் குறித்த சந்தேகநபர் புனரமைப்பு பணிகளில் ஈடுபட்டதாகவும் இந்த நிலையில் அவரின் வீட்டில் சம்பவ தினம் கொள்ளையிட வந்த போது, சந்தேகநபரை மெல் குணசேகர அடையாளம் கண்டு கொண்டதால் அவரை கூரிய ஆயுதத்தால் குத்தி கொலை செய்துள்ளமை, முதற்கட்ட விசாரணைகளிலிருந்து தெரியவந்துள்ளதாகவும் பொலிஸ் ஊடக பேச்சாளர் குறிப்பிட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட சந்தேகநபரிடமிருந்து, மெல் குணசேகரவின் கையடக்கத்தொலைபேசி மீட்கப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

மிரிஹான பொலிஸ் விசேட குற்றப் புலனாய்வு பிரிவின் குழுவினரின் விசாரணைகளை அடுத்து, சந்தேகநபரை கைது செய்ய முடிந்துள்ளதாகவும் அவர் தெரிவித் தார்.

இதேவேளை இவரது மர்மக் கொலை தொடர்பில் விரிவாக ஆராய்ந்து விசாரணை நடத்தவென பிரதிப் பொலிஸ்மா அதிபர் ஒருவர் மற்றும் நுகேகொட பிரிவு பொலிஸ் அத்தியட்சகர் தலைமையில் விசேட குழுக்கள் உடனடியாக நியமிக்கப்பட்டுள்ளன.

குற்றச் செயல்கள் தொடர்பிலான தடயவியல் நிபுணத்துவம் பெற்ற பொலிஸ் குழுவும் விரல் அடையாளங்கள் தொடர்பிலான ஆராயும் குழுவும் உடனடியாக ஸ்தலத்திற்கு அழைக்கப்பட்டனர்.

இந்தச் சம்பவம் திட்டமிட்ட கொலையா? எவ்வாறு இட்ம்பெற்றுள்ளது. யார் இதனை மேற்கொண்டனர்போன்ற விடயங்கள் தொடர்பாக விசாரணைகள் முடுக்கிவிடப்பட்டதுடன் பல்வேறு கோணங்களில் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

மேற்படி ஊடகவியலாளரின் வீட்டில் நான்கு நாய்கள் வளர்க்கப்பட்டு வருகின்றது.

எனினும் சம்பவம் நடைபெற்ற நேரத்திற்குள் எந்த ஒரு நாயும் குரைக்கவில்லை என்பது ஆரம்ப கட்ட விசாரணைகளிலிருந்து தெரிய வந்துள்ளது.

இதனையடுத்து இந்த கொலைச் சம்பவத்திற்கு பின்னால் உள்ள மர்மம் தொடர்பில் விரிவாக ஆராய்ந்து வருகின்றனர். சம்பவ நடைபெற்ற இடத்திற்கு விரைந்த கடுவெல பதில் மஜிஸ்திரேட் கமல் விஜேசிறி மஜிஸ்திரேட் பரிசோதனைகளை மேற்கொண்ட துடன் பிரேத பரிசோதனை நடத்துமாறு உத்தர விட்டுள்ளார். (அ-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிறுவர் அரங்கம்

709



## ஞாபக சக்தி

ஓர் அமாவாசையன்று ரமேஷ் காமேஷின் வீட்டிற்கு வந்திருந்தான். அன்று ஒரு யோகி காமேஷின் வீட்டிற்கு வந்தார். அந்த யோகியை வணங்கிய ரமேஷ் இரு செப்புக் காசுகளை அவரிடம் தந்துவிட்டு, "ஒன்று என் சார்பிலும், மற்றொன்று என் நண்பன் காமேஷ் சார்பிலுமாக உங்களுக்கு இதை காணிக்கையாக அளிக்கிறேன்!" என்றான்.

அவனை ஆசிர்வதித்த யோகி, "உங்கள் இருவருடைய நட்பும் பாராட்டத்தக்கது. ஆனால், உன் நண்பன் சார்பில் நீ எனக்குக் கொடுத்த காசைத் திரும்ப அவனிடமிருந்து பெற்றுக் கொள்ளாதே! இனி ஒவ்வொரு அமாவாசையும் நீ உன் நண்பனுக்கு ஒரு செப்புக்காசு கொடு! இதனால் உன் நண்பனுக்கு அதிர்ஷ்டம் உண்டாகும்! அதேபோல், உன் நண்பனும் உனக்கு ஒவ்வொரு பௌர்ணமியன்றும் ஒரு செப்புக்காசு தர வேண்டும். அதனால் உனக்கும் லாபம் உண்டாகும். ஆனால் ஒருவருக்கொருவர் இதை ஞாபகப்படுத்தாமல் தாங்களாகவே நினைவில் வைத்துக்கொண்டு செய்ய வேண்டும்" என்று கூறிவிட்டுச் சென்றார்.

அடுத்த நாளே, பல நாட்களாக வாங்கிய கடனைத் திருப்பித் தராமல் காலங்கழித்த பிரபாகரன் என்ற ஒருவன் திடீரென, தனது பழைய பாக்கியை எல்லோருக்கும் திருப்பிக் கொடுத்தான்.

காமேஷுக்கும் அவனது பழைய கடன் திரும்பக் கிடைத்தது. அதைக் கேள்விப்பட்ட ரமேஷ் யோகியின் ஆசிர்வாதம் பலித்தது என்று எண்ணிக் கொண்டான். ஆனால், பௌர்ணமியன்று காமேஷ் தன் நண்பனுக்கு செப்புக் காசு தர மறந்து போனான்.

யோகியின் சொல்லை மறக்காத ரமேஷ் மட்டும் அமாவாசையன்று காமேஷிற்கு செப்புக்காசை அளித்தான். அதைப் பெற்றுக் கொண்ட காமேஷ், "உனக்கு அந்த யோகி சொன்னது நன்றாக ஞாபகத்தில் இருக்கிறதே!" என்று கேட்டான்.

அதற்கு ரமேஷ், "உனக்கு அதனால் பயன் உண்டாகும் என்று யோகி கூறியிருக்கும்போது நான் தர மறப்பேனா?" என்றான். "சரிதான்! நீ கொடுக்கும் இந்த செப்புக்காசினால்தான் என் கடன் வசூலாயிற்று என்று கூற விரும்புகிறாயா? எனக்கு நல்ல நேரம் என் கடன் திரும்பக் கிடைத்தது" என்றான்.

அதைத் தொடர்ந்து, "எனக்கு உன்னைப் போல் ஞாபக சக்தி கிடையாது. பௌர்ணமியன்று நான் உனக்கு காசு தானம் செய்ய மறந்துவிட்டேன்!" என்றான்.

அன்றிரவு, ஒரு பக்காத்திருடன் ஏதோ ஒரு வீட்டில் திருட முயற்சிக்கையில் பிடிபட்டான். பலநாள் திருடனான அவன் அது வரை தான் திருடிய பொருட்களை ஓரிடத்தில் ஒளித்து வைத்திருந்தான். அவற்றை மீட்ட காவலர்கள் திருட்டுப் பொருட்களை சொந்தக்காரர்களிடம் ஒப்படைத்தனர். காமேஷின் திருட்டுப்போன சில நகைகளும் திரும்பக் கிடைத்தன.



ரமேஷ் தனக்கு தானம் அளித்த செப்புக்காசின் மகிமையினால்தான் களவுபோன பொருள் தனக்குத் திரும்பக் கிடைத்தது என்று கமேஷுக்குத் தோன்றியது. தானும் அதுபோல் ரமேஷுக்குப் பௌர்ணமி அன்று தானம் செய்தால், அவன் நிச்சயம் லாபம் அடைவான் என்று தோன்றியது. அதனால் காமேஷ் வேண்டுமென்றே பௌர்ணமியன்று ரமேஷுக்கு தானம செய்யாமல் இருந்து விட்டான்.

இவ்வாறு ரமேஷ் ஒழுங்காக தானம் கொடுக்க, காமேஷ் ஞாபக மறதியினால் மறந்து விட்டதாக நடித்து வந்தான். ஆனால், ஒரு பௌர்ணமியன்று அயலூர் சென்றிருந்த ரமேஷினால் தன் நண்பனுக்கு செப்புக்காசு தானம் தர இயலவில்லை. அன்று, தன் தோட்டத்தைத் தோண்டியபோது காமேஷுக்கு மண்ணில் புதைந்திருந்த ஒரு பெட்டி கிடைத்தது.

பெட்டி நிறைய தங்க நகைகள் இருக்கும் என்று மனப்பால் குடித்துக் கொண்டே அதைத் திறந்த காமேஷுக்கு பயங்கர ஏமாற்றம் ஏற்பட்டது. பெட்டி நிறைய கூழாங்கற்கள் தான் இருந்தன. 'ஆகா! அமாவாசையன்று ரமேஷ் வழக்கப்படி தனக்கு தானம் செய்து இருந்தால், கூழாங்கற்களுக்கு பதில் தங்க நகைகள் கிடைத்திருக்குமே" என்று காமேஷ் புலம்பினான்.

ரமேஷ் தன் வீட்டில் புதிதாக ஒரு கிணறு தோண்டுவதைப் பற்றிய செய்தி காமேஷை எட்டியது. பௌர்ணமியன்றுதான் அவனுக்கு இந்த முறையாவது செப்புக்காசு தானம் செய்யலாமா என்று ஒரு கணம் அவனுக்குத் தோன்றியது. ஆனால், அதனால் அவனுக்கு கிணறு தோண்டப்போய் புதையல் கிடைத்து விடுமோ என்ற பயமும் தோன்றியது.



கிணறு தோண்டி முடிந்துவிட்டதென்று அறிந்த பின்னர், சாவகாசமாக ரமேஷின் வீட்டிற்குச் சென்ற காமேஷ், "நண்பா! இந்த பௌர்ணமி தினத்தன்றும் உனக்கு தானம் செய்ய மறநதுவிட்டேன் இன்றுதான் ஞாபகம் வந்தது. இந்தா செப்புக் காசைப் பெற்றுக் கொள்" என்றான்.

கூடியிருந்த அனைவரும் என்ன விஷயம் என்று புரியாமல் விழிக்க, ரமேஷ் யோகியின் வரத்தைப் பற்றி விளக்கினான். பினனர், காமேஷை நோக்கி, "நண்பா! சென்ற முறை அமாவாசையன்று நான் ஊரில் இல்லை. அதனால் உனக்கு தானம் தர முடியவில்லை" என்று கூறிவிட்டு சிறிது நேரங்கழித்து, "நான் உனக்கு ஒவ்வொரு அமாவாசையன்றும் தானம் அளித்து வந்தேன்.

அதனால் உனக்கு சில லாபங்கள் ஏற்பட்டன. ஆனால் பதிலுக்கு எனக்கு தானம் செய்ய வேண்டிய உனக்கோ அசாத்திய ஞாபக மறதி ஏற்பட்டு விட்டது. முதன் முறையாக, இப்போதுதான் உனக்கு தானம் தர வேண்டும் என்ற ஞாபகமே ஏற்பட்டுள்ளது. மனிதனுக்கு ஞாப்க சக்தி மிக மிக முக்கியம். இதுவரை நீ பெற்ற லாபங்களைவிட, இதுவே நீ பெற்ற மிகப்பெரிய நன்மை! அதனால்தான், நான் இனி தானம் செய்யப் போவதில்லை" என்றான். சுற்றியிருந்தவர்கள் சிரிக்க, மறுபடியும் காமேஷின் மூக்கு உடைநதது.

02.2014
04

## இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

- 1783 - ஐக்கிய அமெரிக்கா மீது தனது அனைத்துத் தாக்குதல்களையும் நிறுத்துவதாக ஐக்கிய இராச்சியம் அறிவித்தது.
- 1789 - ஐக்கிய அமெரிக்காவின் முதலாவது ஜனாதிபதியாக ஜார்ஜ் வோஷிங்டன் ஏகமனதாகத் தெரிவு செயயப்பட்டார்.
- 1794 - பிரெஞ்சுக் குடியரசு முழுவதும் அடிமைத் தொழில சட்டவிரோதமாக்கப்பட்டது.
- 1810 - கரிபியன் தீவுகளான குவாட்லூப் பிரித்தானியக் கடற்படையினரால் கைப்பற்றப்பட்டது.
- 1834 - இலங்கையின் ஆங்கிலப் பத்திரிகை **சிலோன ஒப்சேர்வர்** முதன் முதலாக வெளியிடப்பட்டது.
- 1859 - கிரேக்க பைபிளின் 4ஆம் நூற்றாண்டுக் கையெழுத்துப்படி ஒன்று எகிப்தில் கண்டுபிடிக்கப் பட்டது.
- 1936 - முதற்தடவையாக ரேடியம் E என்ற செயற்கைக் கதிரியக்க மூலகம் உருவாக்கப்பட்டது.
- 1943 - இரண்டாம் உலகப் போர்: ஸ்டாலின்கிராட் போர் முடிவுக்கு வந்தது.
- 1945 - இரண்டாம் உலகப் போர்: அமெரிக்க ஜனதிபதி பிராங்கிளின் ரூஸ்வெல்ட், பிரித்தானிய பிரதமர் வின்ஸ்டன் சேர்ச்சில், ரஷ்யத் தலைவர் ஜோசப் ஸ்டாலின் ஆகியோர் உக்ரேனில் யால்ட்டா மாநாட்டில் சந்தித்தனர்.
- 1948 - இலங்கை ஐக்கிய இராச்சியத்திடம் இருந்து விடுதலை பெற்றது.
- 1969 - பாலஸ்தீன விடுதலை இயக்கத் தலைவராக யாசர் அரபாத் பதவியேற்றார்.
- 1978 - இலங்கையின் முதலாவது நிறைவேற்று ஜனாதிபதியாக ஜே. ஆர். ஜெயவர்த்தனா பதவியேற்றார்.
- 2003 - யூகொஸ்லாவியா அதிகாரபூர்வமாக "சேர்பியா மற்றும் மொண்டெனேகுரோ" எனப் பெயர் மாற்றம் பெற்றது.
- 2007 - வங்காள தேசத்தில் இடம்பெற்ற உலகின் மிகப் பெரிய கூட்டுப் பிரார்த்தனையில் 3 மில்லியனுக்கும் அதிகமானோர் கலந்துகொண்டனர்.

### பிறப்புகள்

- 1913 - றோசா பாக்ஸ், ஆபிரிக்க அமெரிக்க குடியுரிமைகள் செயற்பாட்டாளர் (இ. 2005)
- 1921 - கே. ஆர். நாராயணன், இந்தியாவின் ஜனாதிபதி (இ. 2005)

### இறப்புகள்

- 1747 - வீரமாமுனிவர், இத்தாலியத் தமிழறிஞர் (பி. 1680)
- 1928 - ஹெண்ட்ரிக் லோரெண்ட்ஸ், நோபல் பரிசு பெற்றவர் (பி. 1853)
- 1974 - சத்தியேந்திரா போஸ், இந்திய இயற்பியலாளர் (பி. 1894)

### சிறப்பு நாள்

- இலங்கை - சுதந்திர தினம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சதுரகிரி சித்தர்கள்


...யாழ்வல்ல தேவரையும் தேவ மாதையையும் நோக்கிய சிவபெருமான், பிறலி வினைகளைத் தொலைத்து கயிலைக்கு வந்தும், மாயையின் வலையிலகப்பட்டு காதல் வயப்பட்டதால் நீங்களிருவரும் பூலோகம் சென்று பிறந்து, பந்த பாசங்களுக்கு அடிமைப்பட்டு, காதல் பெருவாழ்வு வாழ்ந்து எல்லா மனிதர்களும் படும் துன்பங்களை அனுபவியுங்கள் என்று சாபமிட்டார்.

ஆ! சிறிதுநேர மனத்தடுமாற்றத்திற்கு இவ்வளவு பெரிய தண்டனையா? இறைவா! எங்களை மன்னியுங்கள். பூர்வஜென்ம வினையால் புனிதமான கயிலையில் காதல் வசப்பட்டது தவறுதான். என்றாலும் தவறை மன்னிக்கக் கூடாதா? விதி வசத்தால் பூமியில் காதல் வாழ்க்கை வாழ்ந்தாலும், தங்கள் பெரும் கருணையால் மன்னித்து ஆட்கொள்ள வேண்டுகிறோம் என்று வேண்டினர்.

சிவபெருமானும் மனமிரங்கி நீங்கள் இருவரும் பூவுலகில் வாழ்ந்து வருங்கால் நாற்பது ஆண்டுகள் முடிந்ததும் உங்கள் சாபம் தீர்ந்து என்னால் ஆட்கொள்ளப்படுவீர்கள் என்றார்.

சிவபெருமானின் கட்டளைப்படியே பூவுலகில் கோட்டையூர் என்ற இடத்தில் மனிதர்களாகப் பிறந்தனர். சதுரகிரிக்கு அருகில் உள்ள அழகான ஊர் கோட்டையூர். பெயருக்கேற்றப்படி கோட்டையூர் இயற்கை வளங்கள் அரணாக அமைந்து சிறப்புப் பெற்றிருந்தது. அகத்தி மாமுனிவரும் விரும்பி வந்து தவம்செய்த பெருமைக்கும் உரியதாயிருந்தது.

கோட்டையூரில் வசித்த யாதவர் குலத் திலகமான தில்லைக்கோன் என்பவருக்கும், அவன் மனைவி திலகவதிக்கும் யாழ்வல்ல தேவர் மகனாகப் பிறந்தார். பிறக்கும் போதே திருமாலின் நிறமான பச்சை நிற மேனியைக் கொண்டிருந்ததால் அக்குழந்தைக்குப் பச்சைமால் என்று பெயரிட்டனர்.



கோரக்கர் குண்டா

தில்லைக்கோன் தங்கையாகிய சிங்காரமங்கை என்பவளுக்கும் அவள் கணவன் செங்கமலக் கண்ணன் என்பவனுக்கும் எட்டாவது குழந்தையாகப் பிறந்தாள் தேவமாது. பிறக்கும் போதே அக்குழந்தைக்குச் சடை இருந்ததால் குழந்தைக்கு சடைமங்கை என்று பெயரிட்டு அழைத்தனர்.

சடைமங்கைக்கு மூத்த ஏழு பேரும் ஆண் குழந்தைகள். பெண் குழந்தை இல்லாத வீட்டில் பெண்ணாகப் பிறந்ததால் சடைமங்கை அவ்வீட்டில் மிகவும் செல்லமாக வளர்க்கப்பட்டார்.

குழந்தைகள் இருவரும் நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்து வந்தனர். இருவரும் தக்க திருமண பருவத்தை அடைந்தனர். பச்சைமாலுக்குப் பதினாறு வயதும், சடைமங்கைக்குப் பன்னிரண்டு வயதும் நடைபெறும் தருணத்தில் சுற்றத்தவரின் விருப்பத்திற்கு ஏற்ப தில்லைக்கோன் தன் மகன் பச்சைமேனிக்கு தனது தங்கை சிங்காரமங்கையின் மகளாகிய சடைமங்கையைத் திருமணம் செய்து வைத்தான்.

தம்பதிகள் இருவரின் இல்லறம் இனிதே தொடங்கியது. பச்சைமால் தனது குல வழக்கப்படி சதுரகிரிக்கு

## ஆன்மீகம் 23

அருகில் உள்ள மலைப்பகுதிகளில் பசுக்களை மேய்த்து வரலானான். மேய்ச்சலுக்குச் சென்ற பசுக்களின் பாலைக் கறந்து சடைமங்கையிடம் கொடுக்க அவள் அந்தப் பாலை வீடு வீடாகச் சென்று விற்று அந்த வருவாயைக் கொண்டு இனிதே வாழ்ந்து வந்தனர்.

இந்த இனிய இல்லறவாழ்வில் இருபத்து இரண்டு வருடங்கள் ஓடியதே தெரியவில்லை. தம்பதிகள் தங்கள் சாபத்தை மறந்திருக்கலாம். ஆனால், சாப விமாசனம் சொன்ன இறைவன் தனது வாக்கை மறக்கவில்லை. அவர்களது நாற்பதாவது வயதில் சாப விமோசனம் அருளுவதற்காக மாவூத்தில் எழுந்தருளுகிறார் சித்தர் வடிவில்.

டாக்டர். சி. எஸ். முருகேசன்,
எம்.ஏ., பி.எச்.டி




# பொன்மனச்செம்மல் எம்.ஜி.ஆர்



ராதா சலூஜா

35

...இதயக்கனி- அறிஞர் அண்ணா செம்மலுக்கு அன்பாகச் சூட்டிய பெயர். சத்யா மூவிஸ் படங்களில் இறுதியாக செம்மல் நடித்த படம் *இதயக்கனி* கதையம்சத்தில் புதுமை இருந்ததால் எல்லாம் புதுமையாக இருக்கட்டுமே என்று இந்தி நடிகை ராதா சலுஜாவை கதாநாயகியாக தேர்ந்தெடுத்தார். இந்த சமயம், *தோ ரஹா* என்ற இந்தி படம் வந்து நாட்டைக் கலக்கியது. அதில் நடித்தவர் சலுஜா.

இதயக்கனி படத்தின் படப்பிடிப்பு ஏலம், இவங்கம், காபி விளையும் கூர்க் மலைப்பிரதேசத்தில் நடந்தது.

இந்திய இராணுவ முன்னாள் பிரதம தளபதி ஜெனரல் கரியப்பாவின் இல்லத்தில் படப்பிடிப்பு நடந்தபோது அவரது குடும்பத்தினர் செம்மலை கௌரவித்தனர்.

அதன் ஒளிப்பதிவாளர் என்.பாலகிருஸ்ணன் எவ்வளவு பெரிய ஷாட் ஆனாலும் எவ்வளவு இக்கட்டான கோணங்களானாலும் சளைக்க மாட்டார்.

ஆரம்ப கட்டம் செம்மலின் அறிமுகக் காட்சி. பல பெண்களின் ஆட்டத்துக்கு நடுவே நடந்து வருவார் செம்மல். அந்த ஷாட்டுக்காக நான்கு மணி நேரம் போராட வேண்டியிருந்தது.




அப்போது இந்த அசாத்தனத்தைக் கண்ட வேறொரு தயாரிப்பாளர் "ஒரு ஷாட்டுக்கு நாலு மணி நேரம் என்றால் எப்போது படம் முடிப்பது? நான் நாலு மணி நேரத்துக்கு 40 ஷாட் எடுத்துவிடுவேன்" என்றார்.

இதை அவர் மறைமுகமாகப் பேசியிருந்தாலும் செம்மலின் காதுக்கு எட்டியது. செம்மல் சொன்னார்.

"படத்துக்குச் செலவழித்தால் மட்டும் போதாது. அது திரையில் தெரிய வேண்டும். அதை ஸ்கிரீன் எஃபக்ட் என்கிறோம். அந்த எஃபக்டுக்குத்தான் இங்கே இந்தப் பாடு" என்றார்.

ராதா சலூஜாவின் தமிழ் வசனங்களை இந்தியில் எழுதிக் கொடுத்தோம். அதன் அர்த்தம் சொல்லவும் அவர் நன்கு தமிழை உச்சரிக்கவும் ரங்கன் என்பவர் நியமிக்கப்பட்டிருந்தார். அவர் நான்கு மாதம் சென்னையில் இருந்து ஐந்து வார்த்தைகளை அழகாகப் பேசக் கற்றுக் கொண்டார். வாங்க- இருங்க- போங்க- சாப்பிடுங்க- வணக்கம்.

ஒருநாள் வேடிக்கையாக தேவர் அவர்கள் "என்ன தம்பி உங்க புது ஹீரோயின் எப்படி தமிழ் பேசுறா?" எனக் கேட்க,

"நீங்க இங்லீஷ் பேசுற மாதிரி அவ தமிழ் பேசுறா. உங்க இங்லீஷ்லே நீங்க ராஜேஷ் கன்னாவுக்கே கதை சொல்லி முடிச்சுட்டீங்க. அப்படி இவளும் அவ தமிழிலே நல்ல நல்ல கதை சொல்றா" என்றார் செம்மல்.

படம் முடிந்தது. ஒரு பெரிய தயாரிப்பாளர், புது டைரக்டர் "எப்படி படத்தை ஜனங்க ஏத்துக்கு வாங்களோ தெரிலே?" என்றார்.

அதற்குச் செம்மல் "படம் நன்றாக அமைந்துவிட்டால் மக்கள் நடிகரையோ டைரக்டரையோ பார்க்கிறது இல்லை. படத்தைத்தான் பார்க்கிறார்கள். படத்துக்காகவே படம். ஜனங்க நம்ப பேர்லே உள்ள மதிப்புக்காகவோ, தாட்சண்யத்துக்காகவோ இரக்கப்பட்டோ பார்ப்பதில்லை. இந்தக் கனி நிச்சயம் இனிக்கும். காயல்ல கசப்பதற்கு" என்று சொன்னார்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பால்மாவிலை அதிகரிப்பு; தாய்மாரே ஆர்ப்பாட்டத்துக்கு தயாராகுங்கள்



## ஐ.தே.க.பா.உ.ரோசி எம்.பி.அழைப்பு

(கொழும்பு) நாய்களுக்கான உணவுகளின் விலைகளையும் வரியையும் குறைத்த அரசாங்கம் பிள்ளைகளுக்கான பால்மாவின் விலையை அதிகரித்து மனிதனை நாயை விட மோசமான கீழ் நிலைக்கு தள்ளிவிட்டுள்ளது என ஐ.தே.கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் ரோசி சேனநாயக்க தெரிவித்துள்ளார்.

இதனை எதிர்த்து புறக்கோட்டையில் ஆர்ப்பாட்டமொன்றை நடத்தவுள்ளதாகவும் அனைத்து தாய்மாரும் இதில் கலந்துகொள்ள வேண்டுமென்றும் அவர் அழைப்பு விடுத்துள்ளார்.

ஐ.தே.கட்சியின் தலைமையகமான சிறிகொத்தாவில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார.

இங்கு அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

400 கிராம் பால்மாவின் விலையை 61 ரூபாவினாலும் ஒரு கிலோ பால்மாவின் விலையை 152 ரூபாவினாலும் அதிகரித்து பிள்ளைகளதும் பெற்றோர்களதும் வயிற்றில அரசாங்கம் அடித்துள்ளது.

இன்றும் நாட்டில் வறுமை நிலை நூற்றுக்கு 26 வீதமாக உயர்ந்துள்ளது. கடந்த வாரத்தில் உண்பதற்கு உணவின்றி தனது நான்கு பிள்ளைகளுக்கு பாகற்காய் அவித்து உணவாக கொடுத்து தாமும் உட்கொண்ட பெற்றோரும் பிள்ளைகளும் கண்டுபிடிக்கப்பட்டனர்.

பாதணிகள் இல்லாமல் பாடசாலை செல்ல முடியாமல் பிள்ளைகள் பரிதவிக்கின்றனர். வடக்கு, கிழக்கு, தெற்கு என மாகாணங்களில் பெரும்பாலான பிள்ளைகள் போஷாக்கின்மையால் பாதிப்புற்றிருக்கின்றனர்.

நிறை குறைந்த பிள்ளைகள் பிறக்கின்றனர். ஆனால் இந் நிலைமைகள் எதனையும் தெரிந்து கொள்ளாமல் அமைச்சர்கள் சுகபோகமாக வாழ்கின்றனர்.

நாய்களுக்கான உணவு வகைகள் மற்றும் அதன் வரிகளை குறைத்து நாய்களுக்கு சலுகைகளை வழங்கிய அரசாங்கம் எமது நாட்டு பிள்ளைகளை நாய்களை மதிக்கும் விதத்தில் கூட மதிக்காது பால்மாக்களின் விலைகளை உயர்த்தியுள்ளது.

இதன் மூலம் பெற்றோர்கள் மட்டுமல்ல பிள்ளைகளின் வயிற்றிலும் அரசாங்கம் அடித்துள்ளது. தேர்தல்கள் முடிந்ததும் பால்மாக்களின் விலைகள் மேலும் அதிகரிக்கும்.

அது மட்டுமல்லாது காஸின் விலையும் அதிகரிக்கும்.

எனவே மக்களை வாழவிடாது வாழ்க்கை செலவை அதிகரித்து நெருக்கடியில் தள்ளிவிட்டுள்ள அரசாங்கத்திற்கு பதிலடி வழங்கி வீட்டுக்கு அனுப்ப தற்போது மகளுக்கு சந்தர்ப்பம் கிடைத்துள்ளது.

இன்றும் நாட்டில் பால்மாவை வாங்குவதற்கு அதிக பணம் தேவைபடுகின்றது.

ஆனால் ஒவ்வொரு அடி தூரத்திற்கு ஹெரோயின் போதைப் பொருளை குறைந்த விலையில் வாங்க கூடியதாக இருக்கின்றது.

ஆசியாவின் ஆச்சரியமாக அல்ல ஆசியாவின் போதைவஸ்து மத்திய நிலையமாக இலங்கை மாறி வருகின்றது.

தாய்மார் அனைவரும் அரசுக்கு தமது எதிர்ப்பையும் எச்சரிக்கையையும் விடுக்க வேண்டுமென்றும் அவர் மேலும் தெரிவித்தார். (அ-2)


# நியமனத்தை இரத்துச்செய்க

(மட்டக்களப்பு)

எழுத்துப் பரீட்சையில் அதிகூடிய புள்ளிகளைப் பெற்றிருந்தும் தமிழர்கள் என்ற காரணத்தால் கிழக்கு மாகாண சபையால் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படாத தமிழர்கள் ஏழு பேர் வழங்கப்படவுள்ள நியமனங்களை கிழக்கு மாகாண சபை இரத்துச் செய்ய வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்து வழக்குத் தாக்கல் செய்துள்ளனர்.

கடந்த வெள்ளிக்கிழமை இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. கொழும்பு மேன் முறையீட்டு நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்டுள்ள இவ்வழக்கின் பிரதிவாதிகளாக கிழக்கு மாகாண ஆளுநர், பொதுச் சேவை ஆணைக்குழுவின் செயலாளா ஆகியோர் குறிப்பிடப்பட்டுள்ளனர்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினரும் சட்டத்தரணியுமான சுமந்திரன் இவ்வழக்கைத் தாக்கல் செய்துள்ளார். (அ-2)



மன்னார் இரணை இலும்பைக்குளம் மகாலிங்க சிவன் ஆலயத்தின் கும்பாபிஷேகம் அண்மையில் நடைபெற்ற போது, குடமுழுக்கு இடம்பெறுவதை படத்தில் காணலாம்.(படம்: பூந்தோட்டச் செய்திளார்)

# பரீட்சைகளின் பெறுபேற்றை விரைவில் பெற்றுக்கொள்ள விசேட பொறிமுறை

(கொழும்பு)

அரசாங்கப் பரீட்சைகளின் கடந்தகால பெறுபேறுகளை ஒரு நாளுக்குள் பெற்றுக்கொள்ள கூடிய வகையிலான விசேட பொறிமுறையை ஆரம்பிக்கவுள்ளதாக பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் புஸ்பகுமார தெரிவித்துள்ளார்.

இதற்கான விசேட பிரிவு கல்வியமைச்சர் பந்துல குணவர்தன தலைமையில் நாளை புதன்கிழமை பரீட்சைகள் திணைக்களத்தில் ஆரம்பித்து வைக்கப்படவுள்ளது.

இதற்கிணங்க 1992 ஆம் ஆண்டிற்கு பிற்பட்ட பெறுபேற்று சான்றிதழ்களை 2 மணித்தியாலங்களுக்குள் பெற்றுக் கொள்ளக் கூடியதாகவிருக்குமெனவும் 1992 இற்கு முற்பட்ட காலப் பகுதிகளைச் சேர்ந்த பரீட்சை பெறுபேற்று சான்றிதழ்கள் ஒரு நாளுக்குள் பெற்றுக் கொடுக்கப்படுமெனவும் அவர் தெரிவித்தார்.

கடந்தகால க. பொ. த. சாதாரணதர, உயர்தர பெறுபேற்று சன்றிதழ்களும், வெளிநாடுகளுக்குச் செல்வோரின் சான்றிதழ்களை அத்தாட்சிப்படுத்தும் செயன்முறையும் குறித்த பிரிவின் கீழ் முன்னெடுக்கப்படும்.

இதற்கென விநியோகிக்கப்படும் விண்ணப்பப் படிவங்களை பூர்த்தி செய்து வழங்கிய பின்னர் வருட அடிப்படையில் சான்றிதழ் பெற்றுக் கொடுக்கப்படுவதுடன் வழமையான கட்டணங்களில் எவ்வித அதிகரிப்பும் செய்யப்படவில்லையெனவும் அவர் கூறினார்.

இருப்பினும் வேலை நாட்களில் பிற்பகல் 3 மணிக்கு முன்பாக அதற்கான கட்டணத்தை செலுத்த வேண்டுமெனவும் ஆணையாளர் நாயகம் சுட்டிக் காட்டினார்.

பரீட்சை பெறுபேறுகளை நேரடியாக திணைக்களத்திலிருந்தே உடனுக்குடன் வெளிப்படுத்தும் வகையிலான புதிய இணையத்தளமொன்றும் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்படவுள்ளது.(அ-2)

# பொதுக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

பள்ளம்புலம் முருகமூர்த்தி சனசமூக நிலைய வருடாந்தப் பொதுக் கூட்டம் எதிர்வரும் 9ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு நிலைய மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்தில் புதிய செயற்குழுத் தெரிவு இடம்பெறும்.

எனவே, உறுப்பினர்கள் அனைவரையும் தவறாது பங்கேற்கு மாறு கேட்கப்பட்டுள்ளது. இதில் சிறப்புரையை வேலணை பிரதேச சபை ச.ச.நிலைய உத்தியோகத்தர் திருமதி புஸ்பராணி பாலசுப்பிரமணியம் வழங்குவார். (அ-2)

# என்னை சரியான பாதையில், பயணிக்க வைத்தவர் ஜனாதிபதி

## ஹிருணிகா தெரிவிப்பு

(கொழும்பு)

எனது தந்தையார் மக்களுக்காக நிறைவேற்றத் திட்டமிட்ட வேலைத் திட்டங்களை முன்கொண்டு செல்ல வேண்டும். இதற்காகவே நான் அரசியலுக்கு வந்தேன் என்று மத்திய கொழும்பு ஸ்ரீ.சு.கட்சி இணை அமைப்பாளர் ஹிருணிகா பிரேமச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

ஆக்ரோஷத்தில் இருந்து என்னை விடுவித்து, சரியான பாதையில் கொண்டு சென்றவர் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ என்றும் அவர் கூறினார்.

கொழும்பு மாவட்ட ஸ்ரீ. சு. கட்சி செயற்பாட்டாளர்கள் மத்தியில் உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

இன்று எதிர்க்கட்சிக்கு கூறுவதற்கு ஒன்றும் இல்லை. அதனால அவர்கள் ஜனாதிபதிக்கும், அரசுக்கும் சேறு பூசப்பார்க்கின்றனர்.

ஜெனீவா மாநாட்டை இலக்கு வைத்து தவறான அறிக்கைகளை வெளியிடுகின்றனர். அபிவிருத்தியைச் சீர்குலைக்கவும், இனவாதத்தை எழுப்பவும் இவர்கள் செயற்படுகின்றனர்.

எனது தந்தை பிரச்சினைகளை மனிதப் பார்வையிலேயே நோக்கினார். அவர் குறுகிய அரசியல் அபிப்பிராயங்களைக் கருத்திற் கொள்ளவில்லை. அவரின் பணிகளைத் தொடர்வதே எனது பொறுப்பாகும்.

ஜனாதிபதியின் பெயர் வரலாற்றில் பொன் எழுத்துக்களால் பொறிக்கப்படும். பயங்கரவாதத்தில் இருந்து நாட்டைமீட்டு அபிவிருத்தியை அவர் உருவாக்கினார் என்றும் அவர் கூறினார். (அ-2)

# பொதுமக்களை வழக்குகளில் சிக்கவைக்க வேண்டாம்

## பிரதி அமைச்சர் குணவர்தன கோரிக்கை

(கொழும்பு)

அப்பாவி பொதுமக்களை வழக்குகளில் சிக்க வைக்க வேண்டாம் என பிரதி பௌத்த சாசன அமைச்சர் டி.எஸ். குணவர்தன பொலிஸ் உத்தியோகத்தர்களிடம் கோரியுள்ளார்.

கந்தளாய் சூரியபுர மற்றும் அக்போபுர பிரதேசத்தில் 640 இலட்ச ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்ட இரண்டு பொலிஸ் நிலையங்களை அங்குரார்ப்பணம் செய்து வைத்து உரையாற்றிய போது அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் தொடர்ந்து கூறுகையில்,

பொலிஸ் உத்தியோகத்தர்கள் அனைவரும் தர்மசக்கரத்தினை உத்தியோகபூர்வ இலச்சினையாக அணிகின்றனர்.

மாதமொன்றுக்கு 15 ட்ரபிக் வழக்குகளைப் பெற்றுக்கொள்ள வேண்டும் என்ற காரணத்திற்காகவோ அல்லது வேறு வழக்குகள் இல்லாவிட்டாலோ விடுமுறை கிடைக்காத காரணத்தினாலோ பொது மக்களை சிரமத்தில் ஆழ்த்த வேண்டாம்.

பொலிஸ் நிலையம் பொலிஸ் நிலையமாக இயங்க வேண்டும். பொலிஸ் நிலையங்களில் இலஞ்சம் பெற்றுக்கொள்ளும் சிலர் இருக்கின்றார்கள். 98 வீதமானவர்கள் நல்ல நேர்மையான அதிகாரிகள். சில உயர் அதிகாரிகளுக்கு கீழ் மட்ட உத்தியோகத்தர்களை பிடிக்காது.

எனக்கு தெரிந்த பொலிஸ் அத்தியட்சகர் ஒருவர் திருகோணமலை பிரதேசத்தில் கடமையாற்றினார். கடைநிலை உத்தியோகத்தர்களை திட்டித் தீர்ப்பதே அவரது முதலாவது கடமையாக இருந்தது.

சில பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிகள் பொருத்தமற்ற உத்தரவுகளை பிறப்பிக்கின்றனர்.

வாரத்திற்கு இத்தனை வழக்கு போன்ற நிபந்தனைகளை விதிப்பது உசிதமானதல்ல என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (அ-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசியலில் இதெல்லாம் சகஜமப்பா...!

# கவுண்டமணி காமடி ஆனது கருணாநிதி அன் கோ





**" உங்கள் அப்பாவை தி.மு.க-வில் இருந்து நீக்கியதும் நீங்கள் டுவிட்டரில் அதிருப்தியாக கவுண்டமணி காமடியைப் பதிவு செய்து, தி.மு.க. தலைவர் கருணாநிதி சொன்னது இப்படித் தான் இருக்கிறது என்று சொல்லியுள்ளீர்களே? "**

தி.மு.க-வில் இருந்து அழகிரி தற்காலிகமாக நீக்கப்பட்டதை அடுத்து கோபாலபுரம், அறிவாலயம், மதுரை என்று கொதிநிலையான சூழ்நிலை உருவாகிவிட்டது. கண்ணீர் பேட்டிகள், காரசார அறிக்கைகள் என்று தி.மு.க. முகாமே அதகளமாகிப்போனது. இந்த நிலையில், அழகிரியின் மகன் துரை தயாநிதி, தன் அப்பாவுக்கு ஆதரவாக களத்தில் இறங்கி, தொண்டர்களை அரவணைக்கும் பணியில் மும்முரமாக இருக்கிறார். கருணாநிதியை கவுண்டமணியோடு ஒப்பிட்டு "சூரியன்' திரைப்பட காமடி காட்சியைக் குறிப்பிட்டு டுவிட்டரில் துரை தயாநிதி வெளியிட்டிருக்கும் பதிவும் அரசியல் வட்டாரத்தில் அதிர்வுகளை ஏற்படுத்திருக்கிறது.

**உங்கள் அப்பாவை தி.மு.க-வில் இருந்து நீக்கியதும் நீங்கள் டுவிட்டரில் அதிருப்தியாக கவுண்டமணி காமடியைப் பதிவுசெய்து, தி.மு.க. தலைவர் கருணாநிதி சொன்னது இப்படித்தான் இருக்கிறது என்று சொல்லியுள்ளீர்களே?**

பொய்க் குற்றச்சாட்டுகளைப் பார்த்ததும் எனக்கு அந்த காமடிதான் நினைவுக்கு வந்தது. ஏனென்றால், சம்பவம் நடந்த அன்று நான் அங்குதான் இருந்தேன். அதனால்தான், பொய்க் குற்றச்சாட்டுகள் நெடுநாள் நீடிக்காது. உண்மைகள் விரைவில் வெளியே வரும். பெரிய, வயதில் மூத்த தலைவ்ரிடம் இருந்து இதை நான் எதிர்பார்க்கவில்லை என்று சொன்னேன்.

**உங்கள் சித்தப்பா ஸ்டாலினுக்கு தி.மு.க-வில் பொருளாளர், இளைஞர் அணி தலைவர் என்று இரண்டு பதவிகள உள்ளன. உங்கள் அப்பாவுக்குக் தென் மண்டல அமைப்புச் செயலாளர் பதவி மட்டுமே தந்தது, திட்டமிட்டே அவரை வளரவிடாமல் தடுப்பதற்காக உருவாக்கப்பட்டது என்று கருதுகிறீர்களா என்ன?**


தெரியலையே... அதுபத்தி யாராவது கேக்கணுமே! நீங்க தலைவரைக் கேளுங்கள்... என்ன சொல்கிறார் என்று பார்ப்போம்.

**உங்கள் அப்பாவுக்கு எதிராக சென்னை முழுவதும் போஸ்டர்கள் ஒட்டப்பட்டுள்ளதே?**

"அப்பாவைக் கண்டித்து எல்லா ஊர்களிலும்தான் போஸ்டர் ஒட்டியிருக்கிறார்கள். கண்டன போஸ்டர்கள் எங்க வேணாலும் யார் வேணும்னாலும் ஒட்டலாமே... மதுரை முழுக்க எங்க ஆதரவாளர்கள் ஒட்டியிருக்கும் போஸ்டர் பத்தி யாருமே கேக்க மாட்டீங்களே... சென்னை பக்கம் ஒட்டியது, அது அவங்களா ஒட்டுகிறார்களோ... இல்லை, தூண்டிவிட்டு ஒட்டுகிறார்களோ? தூண்டுதலாகக் கூட இருக்கலாம்.

**தலைவர் கருணாநிதியிடம் உங்கள் அப்பா, ஸ்டாலின் இன்னும் மூன்று மாதத்தில் இறந்துவிடுவார் எனச் சொன்னதாக கருணாநிதி சொல்கிறாரே?**

அது ஒரு பொய்யான குற்றச்சாட்டுனு நாங்க சொல்லிட்டிருக்கோம். அப்படி ஒண்ணு நடக்கவே இல்லையே. அவர் சொன்னார் என்றால் அப்புறம் எப்படி? யாரு அதைச் சொன்னாங்களோ... அவரிடமே



கேளுங்கள்!

**ஸ்டாலினுக்குப் பாதுகாப்பை அதிகரிக்க வேண்டும் என்று பிரதமருக்குக் கடிதம் எழுதியிருக்கிறார் கருணாநிதி. அதுபற்றி என்ன கருதுகிறீர்கள்?**

அவருக்கு ஏற்கெனவே இசட் ப்ளஸ் பாதுகாப்பு இருக்கிறது. எனவே கடிதம் எழுதத் தேவை இல்லை என நினைக்கிறேன்.

**உங்கள் அப்பாவின் கொடும்பாவிகளை எரித்த மறுநாள்தான், "அழகிரி கொடும் பாவி எரிக்கக் கூடாது' என்று ஸ்டாலின் அறிக்கை விட்டிருக்கிறார். அதுபற்றி என்ன நினைக்கிறீர்கள்?**

அப்போதுதான் அவருக்குத் தெரிந்திருக்கலாம். அதனால் அப்படிச் சொல்லியிருப்பார்.

**அதில் எதாவது உள்குத்து இருக்குமோ?**

இருந்திருக்கலாம். இருக்கலாம். யாருக்குத தெரியும்!

**தென் மண்டல அமைப்புச் செயலாளர் பதவி என்பது உங்கள் அப்பாவுக்காக உருவாக்கியது. ஆனால், கட்சியை விட்டு நீக்கியிருக்கிறார்கள். இதை எப்படி பார்க்கிறீர்கள்?**

அப்படி என்றால் அப்பா எவ்வளவு முக்கிய மானவர் என்று நீங்களே தெரிந்து கொள்ளுங்கள். அப்பாவின் பலம் எப்படி என்று எழுதுங்கள். அப்பாவை நீக்க தலைவர் எவ்வளவு கஷ்டங்களை அனுபவித்தாரோ... இந்தக் கடினமான முடிவை யாருடைய தூண்டு தலின் பேரில் எடுத்தாரோ... தெரியவில்லை!


**உங்கள் தாத்தாவுக்கு என்ன சொல்ல விரும்புகிறீர்கள்?**

எங்களுக்குத் தேவை நீதி, உண்மை. எதற்காக அவர் அப்பா மீது வீண்பழி சுமத்துகி றார் என்பது தெரிய வேண்டும். அது மட்டும் இப்போது போதும்!

**அ.தி.மு.க-வில் இணைவது அல்லது, புதிய கட்சி ஆரம்பிக்கும் திட்டம் ஏதும் உங்கள் அப்பாவிடம் இருக்கிறதா?**

அப்படியெல்லாம் எதுவும் இல்லை. அந்த மாதிரி யூகம் எல்லாம் வேண்டாம். நாங்கள் தி.மு.க-வில்தான் இருப்போம்!

*ஜூனியர் விகடன்*



கிளிநொச்சி கணேசபுரத்தில் ஆசிரியராகவிருந்து அமரத்துவம் அடைந்த திருமதி பராசக்தி மஹாலிங்காசிவத்தின் நினைவாக அவரது பிள்ளைகளால் நிறுவப்பட்ட பராசக்தி அம்மையார் முன்பள்ளி அண்மையில் திறந்து வைக்கப்பட்டது. இந்நிகழ்வில் விருந்தினர்கள் அழைத்து வரப்படுவதையும் முன்பள்ளிக் கட்டடத்தை கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி ரூபவதி கேதீஸ்வரன் நாடாவெட்டி திறந்து வைப்பதையும் முன்பள்ளிச் சிறார்களையும் படங்களில் காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நேபாளப் புரட்சியின் பின்னடைவு உணர்த்தும் உண்மைகள்...!



நேபாள மாவோயிசக் கட்சியின் மாவட்ட மற்றும் மாநில அலுவலகங்களை அப்படையைச் சேர்ந்த போராளிகள் முற்றுகையிட்டுப் போராடிய பொழுது, நேபாள இராணுவத்தால் கைது செய்யப்படும் செம்படை வீரர்.

இந்திய மார்க்சிஸ்டுகள் நாறி அம்பலப் பட்டுப் போன இந்திய நாடாளுமன்றத்தைத் தமது தலைமேல் தூக்கி வைத்துக் கொண் டிருப்பதைப் போல, நேபாள மாவோயிசக் கட்சி முதலாவது அரசியல் நிர்ணய சபைக்கு நெருக்கடி ஏற்பட்ட போதெல்லாம் நேபாள ஓட்டுக்கட்சிகளோடு மாறிமாறிக் கூட்டணி அமைத்தும், பேச்சுவார்த்தை நடத்தி, விட்டுக கொடுத்து நாடாளுமன்ற நாற்காலி அரசியலின் வரம்புக்குட்பட்டு தீர்வு காண முயன்றதேயொழிய, அரசியல் நிர்ணய சபையின் கையாலாகாத்தனத்தை வெளியிலிருந்து அம்பலப்படுத்தி, புரட்சியின் அடுத்த கட்டத்திற்கு மக்களை அணிதிரட்டத் தவறியது. குறிப்பாக, நேபாள மாவோயிசக் கட்சியின் பிரசண்டா-பட்டாராய் கும்பல், "பல கட்சி போட்டியின் மூலம்தான் எதிர்ப்புரட்சியை வீழ்த்த முடியும் அரசியல் நிர்ணய சபை, தேர்தல்கள், அரசியல் சாசனம் என்ற மூன்றின் மூலம் புதிய நேபாளத்தை உருவாக்க முடியும்" என்ற சட்டவாதப் பாதையை உயர்த்திப் பிடித்து, தமது சந்தர்ப்பவாதக் கூட்டணிகளை நியாயப்படுத்தியது. "அடுத்துவரும் தேர்தல்களில் நாம் பெரும்பான்மை பெற்றுவிட்டால் அரசே நமது கட்டுப்பாட்டின் கீழ் வந்துவிடும்" எனக் கூறி, கீழிருந்து போராட்டங்கள் எடுக்க வேண்டிய அவசியத்தை முற்றிலுமாக நிராகரித்தது.

ஒரு புரட்சிகரக் கட்சி எவ்வளவு சிறியதாக இருப்பினும் தனது செயல்தந்திர வழியை அமுல்படுத்தும்பொழுது, சமரச சக்திகளைத் தனிமைப்படுத்தி எதிரிக்கு எதிரான தாக்குதலைத் தீவிரப்படுத்துவதற்கு மக்களைச் சார்ந்து நின்று, அவர்களது அரசியல் முன்முயற்சியைக் கட்டவிழ்த்துவிடும் துணிவையும் நம்பிக்கையையும் கொண்டிருக்க வேணடும். இதனைப் புரிந்துகொள்வதற்கு 1917 பெப்ரவரிக்கும் 1917 ஒக்டோபருக்கும் இடைப்பட்ட காலத்தில் லெனின் தலைமையிலான போல்ஷ்விக் கட்சியின் அனுபவங்கள் நமக்கு வழிகாட்டுகின்றன.


ரஷ்யாவில் ஜார் ஆட்சிக்கு எதிரான 1917 பெப்ரவரி புரட்சி வெற்றிகரமாக நிறைவுற்று சோசலிசப் புரட்சியை முன்னெடுத்துச் செல்ல வேண்டிய அரசியல் கடமை முன்நின்றபோது, மென்ஷ்விக்குகள் ரஷ்யாவின் பின்தங்கிய நிலைமையைக் காரணம் காட்டி, "முதலாளித்துவ உற்பத்தி சக்திகள் இன்னும் வளரவில்லை. சோசலிசப் புரட்சிக்கான காலம் இன்னும் கனிந்து விடவில்லை" எனக் கூறி, கெரன்ஸ்கி தலைமையில் இருந்த முதலாளித்துவ அரசிற்கு வால்பிடிக்கும் வேலையைச் செய்தார்கள். ஆனால், போல்ஷ்விக் கட்சி அத்தகைய பாரதூரமான நிலைமையிலும் புரட்சியை அடுத்த கட்டத்திற்கு வளர்த்துச் செல்லும் திட்டத்தோடு நிலம், உணவு, சமாதானம் என்ற முழக்கங்களை முன்வைத்தது. இம்முழக்கங்கள் பெருவாரியான மக்களை மட்டுமின்றி, ஜாரின் இராணுவத்திலும் ஒரு பிரிவை ஈர்த்தன. போல்ஷ்விக்குகள் சோவியத்துகளில் சிறுபான்மையினராக இருந்த நிலையிலும் ஒக்டோபர் புரட்சிக்கான தயாரிப்புகளைத் துணிந்து செய்து வெற்றியும் ஈட்டினர்.

ஆனால், நேபாள மாவோயிசக் கட்சி மன்னராட்சியைத் தூக்கியெறிந்த பிறகு மக்களைச் சார்ந்து நின்று புரட்சியை அடுத்த கட்டத்திற்கு இட்டுச் செல்வதற்குரிய பொருத்தமான அரசியல் துணிவைக் காட்டவில்லை. நேபாளத்தில் 1996 தொடங்கி 2006 முடிய நடந்த பத்தாண்டு கால மக்கள் யுத்தத்தின் பொழுது, மாவோயிசக் கட்சியினர் கிராமப்புறங்களில் உள்ளூர் அளவிலான மக்கள் அரசு மற்றும் நிர்வாக அமைப்புகளை ஏற்படுத்தியிருந்தனர். நிலப்பிரபுக்கள் மற்றும் புரட்சிக்கு எதிரான வர்க்கங்களின் நிலங்களையும், சொத்துக்களையும் பறிமுதல் செய்து மறுவிநியோகம் செய்திருந்தனர். இவ்வாறான புதிய ஜனநாயகப் புரட்சிக்குரிய அரசியல்-பொருளாதாரத் திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கான திசைவழியில் செல்வதற்குப் பதிலாக, மக்கள் யுத்தத்தில் கிடைத்த பலன்களைத் தக்கவைத்துக் கொண்டு, கெட்டிப்படுத்தி, நகரத்திலும் விரிவுபடுத்துவதற்குப் பதிலாக, அவற்றை ஒவ்வொன்றாகக் கைகழுவினர்.

குறிப்பாக, பட்டாராய் பிரதமராகப் பதவியேற்றவுடனேயே மக்கள் யுத்தத்தின்பொழுது கைப்பற்றப்பட்ட நிலங்களும் சொத்துக்களும் மீண்டும் புரட்சியின் எதிரிகளிடமே திருப்பி ஒப்படைக்கும் துரோக ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டார். செம்படை ஐ.நாவின் கண்காணிப்பின் கீழ் பாசறையில் அடைபட்டிருந்த நிலையில், கம்யூனிச இளைஞர் கழகத்தை ஒரு குடிமக்கள் படையாக வளர்த்தெடுப்பதற்குப் பதிலாக, ஆளும்வர்க்கம் மற்றும் அவற்றின் கட்சிகளின் நிர்ப்பந்தத்திற்கு அடிபணிந்து, இளைஞர் கழகத்தை வெறும் சமூக சீர்திருத்த அமைப்பாக மாற்றி அமைத்தார். 1950-க்குப் பின் இந்தியாவுடன் செய்து கொண்ட சமனற்ற ஒப்பந்தங்கள் அனைத்தையும் துணிந்து இரத்துசெய்து நாட்டுப்பற்று கொண்ட சக்திகளைத் தம்பக்கம் அணிதிரட்டுவதற்குப் பதிலாக, இந்தியாவின் முதலீடுகளுக்குப் பாதுகாப்பு அளிக்கும் இருதரப்பு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுத் துரோகமிழைத்தார். இவற்றுக்கெல்லாம் மேலாக, ஆளும் வர்க்கம் மற்றும் கட்சிகளின் கட்டளைகளுக்கு அடிபணிந்து செம்படையைக் கலைத்து, கட்சியையும் உழைக்கும் மக்களையும் நிராயுதபாணியாக்கியது, பட்டாராய் அரசு.

"ஒரு கூட்டணி அரசில் பங்கு பெறுவதற்கு முன்னிபந்தனையாக மக்கள் படை இருப்பது அவசியம். இம்மக்கள் படையை ஒரு புதிய ஜனநாயகக் கூட்டணி அரசாங்கம் உருவான பிறகுதான் கையளிக்க முடியும்" எனத் தனது "கூட்டரசாங்கம் பற்றி" நூலில் குறிப்பிடுகிறார், மாவோ. ஆனால், நேபாளப் பிரதமராக இருந்த பாபுராம் பட்டாராய் மாவோவின் இந்தப் போதனைகளை உதாசீனப்படுத்தி விட்டு, புதிய அரசியல் சாசனமும் புதிய அரசும் உருவாவதற்கு முன்பே, அப்படி உருவாகும் அரசு எந்த வர்க்கத்தின் நலனைக் கொண்டிருக்கும் எனத் தெரியும் முன்பே செம்படையின் ஆயுதங்களை ஒப்படைக்கும் முடிவை எடுத்தார். அதுவும் புரட்சிக்கும் மக்களுக்கும் எதிராகப் போரிட்டப் பிற்போக்கு இராணுவத்தின் நிபந்தனைகளுக்குட்பட்டுக் கலைத்தார்.

இந்தச் சரணடைவுக்கு எதிராக செம்படை பாசறைகளில் கலகங்கள் நடந்தன. ஆனால், அப்போராட்டங்கள் செம்படையைக் கலைக்கக் கூடாது என்ற புரட்சிகர அரசியல் முழக்கத்தின் அடிப் படையில் அல்லாமல், "சமாதான ஒப்பந்தத்தின்படி அனைத்துப் போராளிகளையும் நேபாள இராணுவத்தில் சேர்த்துக்கொள்ள வேண்டும் இந்த இணைப்பு கௌரவமிக்க வழிகளில் நடைபெற வேண்டும்" என்ற வரம்பிற்குட்பட்டே நடந்தது. ஆனால், இந்தப் போராட்டத்தைக்கூடப் பொறுத்துக் கொள்ளாத பிரசண்டா-பட்டாராய் கும்பல் நேபாள இராணுவத்தை அனுப்பி, இந்தப் போராட்டத்தை ஒடுக்கியது



நேபாளத்தில் செய்யப்பட்டுள்ள இந்திய முதலீடுகளைப் பாதுகாக்கும் வர்த்தக ஒப்பந்தத்தில் கையெழுத்திடும் முன்னாள் நேபாள பிரதமர் பாபுராம் பட்டாராய் மற்றும் இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங்.

முதலாளித்துவ ஓட்டுக் கட்சிகள் மற்றும் இந்தியா, அமெரிக்கா உள்ளிட்ட அந்நிய ஆக்கிரமிப்பு சக்திகளின் நிர்ப்பந்தம், மிரட்டலகளுக்கு அடிபணிந்து, அவர்களிடம் சமரசமாக நடந்துகொள்வதன் மூலம் அவர்களின நன் மதிப்பைத் தாம் பெற்றுவிட முடியும் என நம்பியது, பிரசண்டா-பட்டாராய் கும்பல். ஆனால், முதலாளித்துவக் கட்சிகளோ மன்னராட்சியைத் தூக்கியெறிந்த பிறகு, மாவோயிசக் கட்சி நாடாளுமன்ற அரசியல் சூதாட்டத்தில் தம்மிடம் தோற்றுப் போனதை உறுதிப்படுத்திக்கொண்ட பின்னர் முதலாவது அரசியல் நிர்ணய சபையைக் கலைப்பதிலும் வெற்றி பெற்றனர். இன்னொருபுறம், செம்படையைக் கலைத்தது, ஏழை உழவர்களுக்குப் பகிர்ந்தளிக்கப்பட்ட நிலங்களையும் சொத்துக்களையும் மக்களிட மிருந்து பறித்து மீண்டும் புரட்சியின் எதிரிகளுககுக் கொடுத்ததன் காரணமாக மாவோயிசக் கட்சி கிராமப்புற மக்களின் ஆதரவை இழந்து நின்றது.

பாட்டாளி வர்க்கக் கட்சி பிளவுபடாத தலைமையைப் பெற்றிருப்பதும் அதன்கீழ் மக்கள் திரள் அரசியல் படையைக் கட்டியமைப்பதும் போர்த்தந்திர ரீதியிலும் செயல்தந்திர ரீதியிலும் வெற்றி பெறுவதற்கான முன்தேவையாகும் என மார்க்சியம்-லெனினியம் போதிக்கிறது. ஆனால், புரட்சியை அடுத்த கட்டத்திற்கு எடுத்துச் செல்ல வேண்டிய நேரத்தில் நேபாள மாவோயிசக் கட்சித் தலைமை மூன்று அணிகளாக பிரசண்டா, பாபுராம் பட்டாராய், கிரண் எனப் பிளவுபட்டுக் கிடந்தது. இம்மூன்று அணிகளுள் பிரசண்டா மற்றும் பட்டாராய் கோஷ்டிகள் சமரச சரணடைவுவாதத்தை உயர்த்திப் பிடித்ததோடு, கட்சிக்குள் பெரும்பான்மை பலத்தையும் கொண்டிருந்தனர்.

2007 ஆம் ஆண்டு பாலாஜு எனுமிடத்தில் நடந்த கட்சியின் பிளீனத்திலும், 2008 ஆம் ஆண்டு காரிபாட்டி என்னுமிடத்தில் நடந்த கட்சி மாநாட்டிலும், 2010 ஆம் ஆண்டு பலுங்டர் என்னுமிடத்தில் நடந்த கட்சி பிளீனத்திலும், அதே ஆண்டு பாரிஸ் தண்டா என்னுமிடத்தில் நடந்த மத்திய கமிட்டி கூட்டத்திலும் கிரண் குழுவைச் சேர்ந்த தோழர்கள், பிரசண்டா மற்றும் பட்டாராய் கும்பலின் சமரச சரணடைவுக்கு எதிராகப் போராடினாலும், அக்கும்பலைத் தனிமைப் படுத்தும் வகையில் அரசியல் நடத்தை வழி. முழக்கங்கள், போராட்ட மற்றும் அமைப்பு வடிவங்களை முன்வைத்து அப்போராட்டங்களை நடத்தவில்லை. ஒருபுறம் நகர்ப்புற எழுச்சிக்கான தயாரிப்புகளைச் செய்ய வேண்டும் என கிரண் குழு கோரிக்கை வைத்துக்கொண்டே, இன்னொருபுறம் இத்துரோகிகளைக் கட்சியிலிருந்து அப்புறப் படுத்துவதற்குத் தேவையான அரசியல்-அமைப்பு பலமின்றியும், கட்சியைப் பிளவு படுத்தக் கூடாது என்ற நல்லெண்ணத்திற்கு ஆட்பட்டும் சமரசம் செய்துகொண்டது. பாரிஸ்தண்டா மத்தியக் கமிட்டி கூட்டத்திலும், ஏப்ரல் 2011 இல் நடந்த மற்றொரு மத்தியக் கமிட்டிக் கூட்டத்திலும் இச்சமரசம் அப்பட்டமாக வெளிப்பட்டது.

கட்சிக்குள் கிரண் அணியோடு சமரசம் செய்து கொள்வதும், அரசு விவகாரங்களில் பட்டாராயுடன் சேர்ந்துகொண்டு கட்சி முடிவுகளுக்கு எதிராக நடந்துகொள்வதுமென இரட்டை வேடமிட்டு பிரசண்டா துரோகமிழைத்தார். இத்தகைய பிளவுகளும், துரோகங்களும், சமரசங்களும் மக்களுக்குக் கட்சியின்மீது நம்பிக்கையை ஏற்படுத்தவில்லை. மேலும், மன்னராட்சி தூக்கியெறியப்பட்டதற்குப் பிந்தைய காலங்களில் புரட்சியின் எதிரிகள் மற்றும் கட்சிக்குள்ளிருந்த சமரச, துரோகக் கும்பலுக்கு எதிராக மக்கள் அரசியல்ரீதியில் அணிதிரட்டப்படாமல் வெறும் பார்வையாளர்களாக வைக்கப்பட்டிருந்தனர். இந்த நிலையில் இரண்டாவது அரசியல் நிர்ணய சபைத் தேர்தலை எதிர்கொண்ட நேபாள மக்கள், ஒரு கட்சிக்கு மாற்றாக வேறொரு கட்சி என்ற விதத்தில் அம்பலப்பட்டுப்போன துரோகிகளுக்கும் பிற்போக்காளர்களுக்கும் வாக்களித்துள்ளனர்.

ஐக்கிய மாவோரயிசக் கட்சியின் செல்வாக்கு வீழ்ந்து, அவர்கள் தேர்தலில் மூன்றாமிடத்திற்குத் தள்ளப்பட்டதன் பின்னணி இதுதான். ஒரு கட்சி ஆயுதப் படையைக் கொண்டிருந்தாலும், மக்கள் யுத்தத்தை நடத்தித் தளப்பிரதேசங்களை அமைத்திருந்தாலும், புரட்சியின் ஒவ்வொரு இடைக்கட்டத்திலும் கட்சிக்குள் எழக்கூடிய எதிர்ப்புரட்சிகர சக்திகளையும் முதலாளித்துவப் பாதையாளர்களையும் எதிர்த்து முறியடிக்கக்கூடிய மார்க்சிய-லெனினிய பற்றுறுதி, மாற்று வழியை முன்வைக்கக்கூடிய தெளிவு, மக்களின் மீது நம்பிக்கை வைத்து அவர்களை அணிதிரட்டும் அரசியல் துணிவு ஆகியவற்றைக் கொண்டிராவிடில், அக்கட்சி வீழ்வது தவிர்க்க முடியாதது என்ற பாடத்தைத்தான் நேபாள அனுபவங்கள் எடுத்துக் காட்டுகின்றன.

(முற்றும்)

-இணையம்-

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# ஆயுள் காக்கும் 10 கட்டளைகள்!

தவறு செய்யாத மனிதன் இல்லை. ஆனால், "இது தப்பு' என்று தெரிந்தும், ஒரே விடயத்தைத் திரும்பத் திரும்பச் செய்தால்? நம் ஆரோக்கியத்துக்கு நாமே வேட்டுவைக்கக்கூடிய "தவறுகள்" என்னென்ன என்பது குறித்து, மருத்துவர்கள் குறிப்பிடும் முக்கியமான 10 தவறுகள் இங்கே பட்டியலிடப்பட்டுள்ளன.





**புகைபிடித்தல் மது அருந்துதல்**

சந்தோஷம், சோகம், டென்ஷன்... என, எந்த ஓர் உணர்ச்சிக்கும் உடனே புகைபிடிக்க வேண்டும் என்ற தூண்டுதல் பலருக்கும் உள்ளது. ஒரு சிகரெட்டைப் பற்ற வைக்காமல், இவர்களால் கொண்டாட்டத்தைத் தொடங்க முடியாது.

புகைபிடிப்பது புகைப்பவர் உடலுக்கு மட்டுமல்ல அந்தப் புகையை சுவாசிப்பவர்களின் உடல்நலத்துக்கும் கேடு. புகை பிடிக்கும்போது இரத்தத்தில் ஒட்சிசன் குறைந்து காபனீரொட்சைட் அளவு அதிகரிப்பதால், கடைக்கோடி திசுக்களுக்கும் போதிய ஒட்சிசன் கிடைக்காது.

இதுபோல ஆயிரக்கணக்கான பிரச்சினைகள் ஒரு சிகரெட் பிடிப்பதால் ஏற்படுகின்றன. அதேபோல், தினசரிக் கட்டுப்பாடு இன்றி மது அருந்துவதால் கல்லீரல், சிறுநீரகம் பாதிக்கப்படும். நோய் எதிர்ப்பு சக்தி குறையும். இதுபோன்ற பிரச்சினைகளைத் தவிர்க்க, மது அருந்துவதைக் கைவிடுவது நல்லது.

**பல் துலக்காமல் தூங்குதல்**

காலை, மாலை இருவேளையும் பல் துலக்குவது அவசியம் என்று எவ்வளவுதான் கூறினாலும், ஒருசிலர்தான் இதைப் பின்பற்றுகின்றனர். பல்துலக்கும் நுட்பம் தெரிந்தவர்களால்கூட, 90 சதவிகிதம் அளவுக்குத்தான் கிருமிகளை அகற்ற முடியும். மீதம் உள்ள 10 சதவிகிதம் கிருமி மேலும் பெருக 12 மணி நேரம் போதும்.

இதைத் தவிர்க்க, இரவு தூங்குவதற்கு முன்பும் பல்துலக்க வேண்டும். ஆனால், தூங்கும் அவசரத்தில், இது என்ன பெரிய விடயமா? என்று நாம் ஒதுக்கித் தள்ளுவதால் ஈறு, சொத்தை போன்ற பிரச்சினைகள் ஏற்படுகின்றன. இதை நம்மால் தவிர்க்க முடியும்.

**வேகமாக உண்ணுதல்**

சூடான உணவுகளை சுவைக்க விரும்புபவர்களும் சரி... பசியில் துடிப்பவர்களும் சரி, சாப்பிடும் போது அவர்களை அறியாமல் வேகமாகச் சாப்பிட ஆரம்பித்து விடுவார்கள்.

அந்த நேரத்துக்கு அது திருப்தியளித்தாலும், அது ஏற்படுத்தும் விளைவுகள் அதிகம். நம் வாயில் உள்ள சுரப்பிகள் நாம் உட்கொள்ளும் உணவை நன்கு அரைத்துச் செரிமானம் செய்வதற்கு எளிதாக 'களி போன்று ஆக்கி இரைப்பைக்கு அனுப்புகிறது. ஆனால் ஒருவர் வேகமாக உண்ணும் போது வாயில் மெல்வது தடைபட்டு, நேரடியாக உணவு இரைப்பைக்குள் செல்கிறது. இதனால் உணவை, செரிமானம் செய்வதில் வயிற்றுக்குப் பிரச்சினை ஏற்படுகிறது. உணவுக் குழாய்க்குப் பதில் மூச்சுக் குழாயில் உணவு சிக்கிவிடவும் வாய்ப்பு உள்ளது. இது மூச்சுத் திணறலுக்கு வழி வகுத்துவிடும். உணவை மெதுவாக மென்று விழுங்க வேண்டும்.

**காலை உணவை தவிர்ப்பது**

அனைவரும் செய்யும் மிகப் பெரிய தவறு, காலை உணவைத் தவிர்ப்பது. காலையில் வெறும் வயிற்றுடனோ அல்லது ஒரு கப் கோப்பி, பால் குடித்துவிட்டு வேலைக்குச் செல்பவராக இருந்தால், உங்கள் எதிர்கால ஆரோக்கியம் கேள்விக்குறியாக மாறிக்கொண்டிருக்கிறது என்பதை உணரவேண்டும். இந்தப் பழக்கம், உங்கள் செரிமான மண்டலத்தின் பணியைப் பாதிக்கும். காலையில் சாப்பிடாத போது, உடல் பலவீனம் அடையலாம்.

**உடற்பயிற்சியைத் தவிர்ப்பது**

நாள் ஒன்றுக்கு குறைந்தது 45 நிமிடங்கள் நடைப்பயிற்சி, வாரத்துக்கு மூன்று நாட்களுக்கு உடலை வலுவாக்கும் பயிற்சிகள் செய்வது அவசியம். பயிற்சிக்கு இடையில் இடைவெளி இருக்கலாம். ஆனால், பயிற்சி செய்வதற்கு நீண்ட இடைவெளிகூடாது. மிக அவசியமான காரணங்களைத் தவிர்த்து வேறு எந்த ஒரு காரணத்துக்காகவும் உடற்பயிற்சி செய்வதைத் தவிர்க்கக் கூடாது. அலுவலகத்தில் காலார நடக்கப் பழகுங்கள்.

பேருந்தில் பயணிப்பவர்கள், இறங்குவதற்கு முந்தைய நிறுத்தத்தில் இறங்கி நடக்க ஆரம்பியுங்கள்.



**நேரம் கெட்ட நேரத்தில் தூங்குவது**

மாணவப் பருவத்தில், தேர்வுக்கு முந்தைய நாள் மட்டும் விடிய விடியப் படிப்போம். மற்றபடி இன்றைய வாழ்க்கை முறை மாற்றத்தால், நேரம் கெட்ட நேரத் தில் தூங்குவது, காலையில் அவசர அவசரமாக எழுந்திருப்பது என்பது வழக்கமாகிவிட்டது. ஒரு நாளைக்கு 8 மணி நேரத் தூக்கம் அவசியம்.

தூக்கம் குறையும்போது, உடலின் நோய் எதிர்ப்பு மண்டலம் பாதிக்கப்படும்.

மேலும், உடலின் செயற்பாட்டிலும் கொஞ்சம் கொஞ்சமாகப் பாதிப்பை ஏற்படுத்தும். நோய் எதிர்ப்பு சக்தி குறையும் போது, சாதாரணக் கிருமித் தொற்றைக்கூட, உடலால் எதிர்க்க முடியாத நிலை ஏற்பட்டுவிடும். போதுமான தூக்கமின்மையால் கண் எரிச்சல், பணியில் ஈடுபாடின்மை போன்றவையும் ஏற்படும்.

**தொலைக்காட்சியில் மூழ்குவது**

மணிக்கணக்கில் கணனி, தொலைக் காட்சி முன்பு மூழ்கியிருந்தால், இதயம், கண், செரிமான மண்டலம் எனப் பலவற்றையும் பாதிக்கும். மாரடைப்பு, பக்கவா தம், உடல் பருமனுக்கான வாய்ப்பை அதிகரிக்கச் செய்யும். தொலைக் காட்சி பார்க்கும் போது, நம்மை அறியாமல் அதிகக் கொழுப்புள்ள உணவை எடுத்துக்கொள்கி றோம். உடல் உழைப்பு குறைகிறது. இத னால் கலோரி அதிகரித்து, கொழுப்பு படிந்து, உடலில் கொலஸ்ரோல அளவு அதிகரிக்கும்போது, மாரடைப்பு உள்ளிட்ட பிரச்சினைக்கு வழி வகுத்துவிடுகிறது. எனவே, குறிப்பிட்ட மணிநேரம் மட்டுமே தொலைக்காட்சி என்று சுய கட்டுப் பாட்டுடன் இருந்தால், ஆரோக்கியம் காக்கலாம்.

**கலர்ஃபுல் ஜங்க்ஃபுட்**

இன்றைய குழந்தைகளுக்கு, பாரம்பரிய இட்லி, தோசை பிடிப்பது இல்லை. கலர்ஃபுல்லான ஜங்க் ஃபுட்ஸ் அவர்களை ஈர்க்கின்றன. அவை பெரும்பாலும் கோதுமை மாவில் செய்யப்படுவதால், உடலுக்குக் கேடு. இந்த வகை உணவில், "நார்சத்து' கொஞ்சமும் இல்லை. இதனால் மலச்சிக்கல் ஏற்படும். சில ஜங்க் ஃபுட்களில் இருக்கின்ற மெழுகு போன்ற பொருள் உடலினுள் சென்று குடலின் மேல் படிந்து, கேடு விளைவிக்கின்றன.

இத்தகைய உணவுகளைத் தொடர்ந்து சாப்பிட்டால், சின்ன வயதிலேயே பெப்டிக் அல்சர், சர்க்கரை நோய், உயர் இரத்த அழுத்தம் வருவதற்கான வாய்ப்புகள் அதிகரிக்கும். அவர்களை ஈர்ப்பது உணவிலுள்ள அந்த நிறங்கள்தான் என்பதால், வீட்டிலேயே குழந்தைகளுக்கு, கலர்ஃபுல் "ஃப்ரூட் சாலட்' செய்து தரலாம்.

**ஆறு வேளையும் அரிசிக்கு அடிமை**

உணவு விரும்பிகள் இன்று ஏராளம். உணவு, அதன் தரத்தையும் சரிபார்த்த பின்னர் அவற்றை எடுத்துக்கொள்ள வேண்டும். பொதுவாக நாம் உண்ணும் அரிசியில் காபோவைதரேட் மட்டுமே உள்ளது.

உடலுக்குத் தேவையான கார்காபோவைதரேட்போக மீதம் உள்ளவை கொழுப்பாக மாற்றம் அடையும். இதனால் உடல் பருமன், இரத்தக் குழாயில் கொலஸ்ரோல் படிதல் போன்ற பிரச்சினைகள் ஏற்படும்.

உணவுகளின் கலோரியை அறிந்து கொண்டு, அவற்றைக் கொஞ்சம் கொஞ்சமாகப் பிரித்து ஒரு நாளைக்கு ஆறு வேளைகளாகச் சாப்பிடலாம். பருப்பில் புரதச் சத்து, சாதத்தில் காபோவைதரேட், எண்ணெயில் கொழுப்புச் சத்து இருக்கிறது. காய்கறி, பழங்க ளில் நார்ச் சத்து, விற்றமின், மினரல்கள் உள்ளன.

எனவே, இவற்றைச் சரிவிகிதத்தில் எடுத்துக் கொள்ள வேண்டும். நாம் சாப்பிடும் உணவைத் தெரிந்து உட்கொண்டால், ஆரோக்கியம் நம் கையில்.

**டீ, கோப்பி தவிர்க்கலாமே!**

டீ, கோப்பி போன்ற பானங்களுக்கு அடிப்படையிலேயே மூளையைத் தூண்டிவிடும் சக்தியுள்ளது. ஒரு நாளுக்கு நான்கு முறைக்கும் மேல் டீ, கோப்பி அருந்துபவர்களுக்கு அந்தத் "தூண்டுதல்' அதிகமாகி மூளையைத் "தொந்தரவு' செய்யும் நிலைமைக்குப் போய் விடுகிறது. இதன் விளைவாக மூளை மந்தமடையலாம்.

மேலும் சர்க்கரை, பாலில் கொழுப்புச் சத்து அதிகம் உள்ளதால், இதய நோய்க்கான வாய்ப்பு அதிகரிக்கும். கலோரிகள் அதிகரிக்கும். கோப்பி, தேநீருக்குப் பதில் ஆன்டிஆக்சிடென்ட் நிறைந்த கிரீன் டீ அருந்துவது ஆரோக்கியமானது. கிரீன் டீயில் சர்க்கரை, தேன் எதையும் சேர்க்காமல் அப்படியே அருந்துவது முக்கியம்.

ஜீனியர் விகடன்

# அரசாங்கங்கள் பயங்கரவாதத்தை பொருளாதார நோக்கில் பார்த்தன

## அமைச்சர் டலஸ் தெரிவிப்பு



(கொழும்பு)

கடந்த கால அரசாங்கங்கள் பயங்கரவாதத்தை பொருளாதார நோக்கில் பார்த்தன என இளைஞர் விவகார அமைச்சர் டலஸ் அழகப்பெரும தெரிவித்துள்ளார்.

அனுராதபுரத்தில் நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் பங்கேற்ற போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

பிரிவினைவாதத்திற்கு ஏனைய அரசாங்கங்கள் அஞ்சின. தமிழீழ விடுதலைப் புலிகளை தாக்கினால் கொழும்பில் குண்டுகள் வெடிக்கும் அவ்வாறு வெடித்தால் பொருளா தாரத்திற்கு பாதிப்பு ஏற்படும் என்றே கடந்த கால அரசாங்கங்கள் பயந்தன.

எனினும், ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷஇதனை பொருட்படுத்த வில்லை. பயங்கரவாதத்தை இல்லாமல் செய்வதே மிகச் சிறந்த முதலீடு எனக் கருதினார்.

இனவாத விசத்தை ஊட்டிக் கழுத்தில் சயனைட் குப்பிகளை தொங்க விட்ட காலத்தை முடிவுக்குக் கொண்டு வந்தார்.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அரச தலைவர் மட்டுமன்றி இந்த நாட டின் பிள்ளைகளின் தந்தையாவார்.

நாட்டின் இளைய தலைமுறை உதாசீனம் செய்யப்பட்டு வந்த காலத்தில், ஜனாதிபதி அவர்களுக்கு மதிப்பளித்தார்.

பரீட்சையில் தேறியவர்களைப் போன்றே தேறாதவர்களுக்கும் எதிர்காலமொன்றை அமைத்துக் கொடுக்க நடவடிக்கை எடுத்தார்.

தொழில் பயிற்சிகளை மாணவர்களுக்கு வழங்க நடவடிக்கை எடுத்தார் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (அ-2)

# இந்த மாத இறுதிக்குள் இலத்திரனியல் அ.அட்டை

இலத்திரனியல் அடையாள அட்டைகள் விநியோகிக்கப்படும் வரை தற்போது வழங்கப்பட்டுள்ள தேசிய அடையாள அட்டை செல்லுபடியாகும் என ஆட்பதிவுத் திணைக்களம் அறிவித்துள்ளது.

இந்த மாதத்தினுள் இரண்டு மொழியிலான இலத்திரனியல் அடையாள அட்டை, வழங்கப்படும் என ஆட்பதிவு திணைக்களத்தின் ஆணையாளர், ஆர்.எம்.எஸ். சரத்குமார தெரிவித்தார்.

புதிய விண்ணப்பதாரிகளுக்கு மாத்திரமே இலத்திரனியல் அடையாள அட்டைகள் விநியோகிக்கப்படவுள்ளதாகவும், தற்போது அடையாள அட்டைகளை வைத்திருப்பவர்கள் புதிய இலத்திரனியல் அடையாள அட்டையை பெற்றுக் கொள் வது அவசியம் இல்லை எனவும் அவர் குறிப்பிட்டார்.

நாட்டிலுள்ள மொழிக் கொள்கைக்கு அமைவாக இந்த புதிய இலத்திரனியல் அடையாள அட்டை விநியோகிக்கப்படவுள்ளதாக ஆணையாளர் மேலும் சுட்டிக் காட்டினார். (அ-2)

## விசாரணை கோரி ஆர்ப்பாட்டம் நடத்த ஏற்பாடு-செல்வம் எம்.பி.

மன்னார் திருக்கேதீஸ்வரம் மனித புதைகுழியில் இருந்து 55 மனித எலும்புக்கூடுகள் மீட்கப்பட்டமை தொடரபில் பக்கச்சார்பற்ற விசாரணையை கோரி ஆர்ப்பாட்டம் ஒன்றை நடத்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக தமிழ் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்துள்ளார்.

மன்னார் சிவில் சமூகம் மற் றும் பொதுமக்கள் அமைப்புக்கள் என்பன இணைந்து இந்தப்போராட்டத்தை முன்னெடுக்கவுள்ளன. இது தொடர்பில் கலந்துரையாடல்கள் இடம் பெறவுள்ளதாகவும் அவாத் தெரிவித்துள்ளார். (அ-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையின் விடயத்தில் சர்வதேச சமூகம் பொறுமையிழந்துள்ளது

## உதவி இராஜாங்க செயலாளர் நிஷா

(கொழும்பு)

**இலங்கைக்கு மூன்று நாட்கள் உத்தியோகபூர்வ விஜயம் ஒன்றை மேற்கொண்டிருந்த தெற்கு மற்றும் ஆசிய விவகாரங்களுக்கான அமெரிக்காவின் உதவி இராஜாங்க செயலாளர் நிஷா பிஷ்வால் நேற்று முன்தினம் இலங்கையிலிருந்து லண்டன் பயணமானார்.**

லண்டன் சென்றுள்ள நிஷா பிஷ வால் அங்கு பிரிட்டன் அரசாங்கத் தின் முக்கியஸ்தர்களுடன் பேச்சு நடத் திவிட்டு லண்டனிலிருந்து ஜெனீ வாவுக்கு விஜயம் செய்யவுள்ள துடன் அங்கு ஜெனீவா மனித உரி மைப் பேரவைக்கான இந்தியாவின தூதுவரையும் சந்திதது பேச்சு நட தத வுள்ளதாக தெரிவிககப்படுகின்றது.

நிஷா பிஷ்வால் அங்கு பிரிட்டன் அரசாங்கத்தின் பல்வேறு முக்கிய ஸ்தர்களுடனும் பேச்சுவார்த்தை நடத்தவுள்ளார்.

ஜெனீவா மனித உரிமைப் பேரவையில் இலங்கை தொடர்பில் அமெரிக்காவினால் கொண்டு வர ப்படவுள்ள பிரேரணைக்கு பிரிட்ட னும் அனுசரணை வழுங்கவுளள தாக தெரிவிக்கப்பட்டுள்ள நிலை யல்அமெரிக்க உதவிஇராஜாங்க செய லாளரின் லண்டன் விஜயம் முக் கியத்துவமிக்கதாக கருதப்படுகின்றது.

அதன்படி பிரிட்டன் அரசாங்கத் தின் பல்வேறு முக்கியஸ்தர்களு டன் கலந்துரையாடல்களை நடத்தி விட்டு அங்கிருந்து ஜெனீவாவுக்கு விஜயம் செய்யவுள்ள நிஷா பிஷ் வால் அங்கு மனித உரிமைப் பேர வையின் உறுப்பு நாடுகளுடன் பேச்சுவார்த்தைகளை நடத்தவுள் ளார்.

குறிப்பாக ஜெனீவா மனித உரி மைப் பேரவைக்கான இந்தியாவின் நிரந்தர வதிவிட பிரதிநிதி திலிப் சிங்குடன் நிஷா தேசாய் பேச்சுவார் த்தை நடத்தவுள்ளார்.

இலங்கை தொடர்பில் அமெரிக் காவினால் கொண்டுவரப்படவுள்ள பிரேரணை தொடர்பாகவே இந்திய பிரதிநிதி திலிப் சிங்குடன் நிஷா பிஷ்வால் கலந்துரையாடவுள்ளார்.

மேலும் தனது இலங்கைக் கான விஜயத்தின் இறுதியில் கொழு ம்பில் ஊடகவியலாளர் மாநாடு ஒன்றை நடத்திய அமெரிக்காவின் உதவி இராஜாங்க செயலாளர் நிஷா பிஷ்வால் இலங்கையில், இலங்கையின் போருக்குப் பின்ன ரான நிலைமையில் முன்னேற்ற ங்கள் போதுமானதாக இல்லை என்றும் இதனால் சர்வதேச சமூகம் பொறுமையிழந்து இருப்பதாகவும் கூறியிருந்தார்.

மேலும் எதிர்வரும் மார்ச் மாதம் நடைபெறவுள்ள ஐக்கிய நாடுகளின் மனித உரிமைப் பேர வையின் 25 ஆவது கூட்டத் தொட ரில் இலங்கைக்கு எதிராக பிரேரணை கொண்டுவரப்படும் என்றும் எனி னும் பொருளாதார தடைகள் விதிக் கப்படுவது தொடர்பில் எந்த விடய மும் பேசப்படவில்லை என்றும் அவர் குறிப்பிட்டிருந்தார். (அ-2)

# அமைச்சர்கள் உட்பட 60 பேர் ஐ.தே.கட்சியில் இணைவர்

## கயந்த எம்.பி. தெரிவிப்பு

அரசாங்கத்தில் உள்ள அமை ச்சர்கள் உட்பட 60 பேர் ஐக்கிய தேசியக் கட்சியில் இணைந்து கொள்வது தொடர்பில் பேச்சுவார் த்தைகளை நடத்தி வருவதாக அந்த கட்சியின் ஊடகப் பேச்சா ளரும் நாடாளுமன்ற உறுப்பின ருமான கயந்த கருணாதிலக தெரிவித்துள்ளார்.

காலி, ஹபராதுவ பிரதேசத்தில் நடைபெற்ற கூட்டம் ஒன்றில் உரை யாற்றும் போதே அவர் மேற்கண்ட வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், அரசாங்கத்தில் அங்கம் வகி க்கும் அமைச்சர்கள், நாடாளு மன்ற உறுப்பினர்கள் என 60 பேர் ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணை ந்து அரசாங்கம் ஒன்றை ஸ்தாபிக்க விருப்பம் வெளியிட்டுள்ளனர்.

என்னிடம் பேசும் போது அமைச் சர்கள் இதனை கூறினர். ஐக்கிய தேசியக் கட்சி வெற்றியை நோக்கிய பயணத்திற்கு வந்துள்ளது என்ப தால், கட்சிக்குள் இருக்கும் சிறிய பிரச்சினைகளை தீர்த்து தயாராக இருக்குமாறு அவர்கள் என்னிடம் பேசும் போது தெரிவித்தனர்.

ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணிக்கு வாக்களித்த மக்களுக்கு இன்று பாலும் இல்லை வெள்ளரிக்காயுமில்லை. பால் மாவின் விலையை நினைத்தால் மயக்கம் வருகிறது.

எதிர்காலத்தில் கரண்டிகளில் அளந்தே மக்கள் பால்மாவை கொள்வனவு செய்ய வேண்டிய நிலைமை ஏற்படும் அளவுக்கு இந்த அரசாங்கம் பாதிப்படைய செய்துள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சியை சேர்ந்தவர்கள் தம்முடன் இணை ந்து கொள்ளவுள்ளதாக அரசா ங்கம் கூறுகிறது. நானும் அரசு டன் இணைய போவதாக சிலர் பிரசாரம் செய்தனர். ஊடகங்களும் இதற்கு பிரசாரத்தை பெற்றுக் கொடுத்தன.

அரசாங்கத்திற்கு போகிறீர்களா, இல்லையா என்று என்னிடமும் கேட்டனர். நான் எதனையும் கூறவில்லை. சிலர் ஐக்கிய தேசியக் கட்சியில் இருந்து அரசாங்கத்தி ற்கு போனார்கள். நான் மட்டுமல்ல எனது நாயும் போகாது என்று கூறியவர்கள் மறுநாள் அரசாங் கத்தில் இணைந்து கொண்டனர் என்றார். (அ-2)



இளவாலை வருத்தப்படாத இளைஞர் கழகத்தின் ஏற்பாட்டில் அண்மையில் இலவச மருத்துவ முகாம் கலைமகள் படிப்பகத்தில் இடம் பெற்ற போது..... (படம்:- மானிப்பாய் செய்தியாளர்)

# கலைஞர்களின் விபரம் கோரப்படுகின்றது

வலி.தென்மேற்கு சண்டிலிப்பாய் பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட கலைஞர்களின் விபரத்தை சேக ரிக்கவுள்ளதாக சண்டிலிப்பாய் பிர தேச செயலாளர் அறிவித்துள்ளார்.

எதிர்வரும் காலங்களில் எமது பிரதேசம் சார்ந்த கலைஞர்களின விபரத்தை புத்தக வடிவில் உருவாக்கு வதே நோக்கம் என அறிவிக்கப் பட்டுள்ளது.

இதற்கான விண்ணப்பப்படிவம் கலைஞர்களுக்கு வழங்கப்பட்டு வருகின்றது. விண்ணப்பப் படிவ த்தை பூர்த்தி செய்து எதிர்வரும் ஏப்ரல் மாதம் 31ஆம் திகதிக்கு முன்னர் எமது பிரதேச செயலக கலாசாரப் பிரிவில் ஒப்படைக்குமாறும் அவர் கேட்டுள்ளார். (அ-2)

# ரவிக்கும் முஸம்மிலுக்கும் இடையில் கடும் முறுகல்

(கொழும்பு)

கொழும்பு மாநகர மேயர் ஏ.ஜே.எம். முஸம்மிலின் மனைவி யான பெரேஸா முஸம்மில், ஐக்கிய தேசியக் கட்சியின் சார்பில் மேல் மாகாண சபைத் தேர் தலில் போட்டியட வேட்புமனுவை கோரியுள்ளமை தொடர்பில் நாடா ளுமன்ற உறுப்பினர் ரவி கரு ணாநாயக்க கடும் எதிர்ப்பு வெளி யிட்டுள்ளதாக ஐக்கிய தேசியக் கட்சியின் தகவல்கள் தெரிவி க்கின்றன.

கொழும்பு மாவட்டத்தின் தொகுதி அமைபபாளர்கள் சிலரை அண்மையில் வேட்புமனு குழு விற்கு அழைத்திருந்த ரவி கரு ணாநாயக்க, முஸம்மிலின் அர சியல் செயற்பாடுகள் தொடர்பாக கடுமையாக விமர்சித்துள் ளார்.

மேயரின் மனைவிக்கு வேட்பு மனுவை வழங்க ரணில் விக்ரமசிங்க இணங்கினாலும் தான் அதற்கு இடமளிக்க போவ தில்லை என அவர் திட்டவட் டமாக கூறியுள்ளார்.

கொழும்பு மேயரான முஸம் மில், பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவுடன் நெருக்கமான தொடர்புகளை கொணடிருப்பதுடன் மாநகர சபை யில் அங்கம் வகிக்கும் ஐ.தே.கட் சியின் உறுப்பினர்கள் மற்றும் கட்சியின் தலைமைத்துவத்தை புறக்கணித்து வருவதாகவும் அவர் குற்றம் சுமத்தியுள்ளார்.

எவ்வாறாயினும், தன் மீது சுமத்தப்பட்டுள்ள இந்த குற்றச் சாட்டுக்களுக்கு பதிலளிக்க தன க்கு சந்தர்ப்பம் வழங்குமாறு முஸம்மில் விடுத்திருந்த கோரி க்கைக்கு அமைய, ஐ.தே. கட்சியின் தலைமைத்துவச் சபை யும் வேட்புமனு குழுவும் கூட வுள்ளது. (அ-2)

# தமிழ்மக்களை வெற்றிகொள்வதில் ஜே.வி.பி. தோல்வியடைந்துள்ளது

## அநுரகுமார தெரிவிப்பு

(கொழும்பு)

தமிழ் மக்களை வெற்றிகொள் வதில் எமது கட்சி தோல்விய டைந்துள்ளது என ஜே.வி.பியின் புதிய தலைவர் அநுரகுமார திஸா நாயக்க தெரிவித்துள்ளார்.

உலகச் செய்தி சேவை ஒன்றிற்கு வழங்கிய செவ்வியிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இவ்வாறான கைவிடப்பட்ட மற்றும் தவறவிடப்பட்ட விடயங்கள் தொடர்பில் கவனம் செலுத்தி அவ ற்றை வெற்றியுடன் முன்னோக்கி செல்ல வேண்டியது எனது பொறு பபு.

ஜே.வி.பியின் மத்திய செயற் குழு 25 பேரை கொண்டதாக விரி வுபடுத்தப்பட்ட போதும் சிங்களவர் அல்லாதவர்கள் மற்றும் பெண் களின் பிரதிநிதித்துவம் அதில் போதுமானதாக இல்லை.

ஜே.வி.பியின் மத்திய செயற் குழுவின் ராமலிங்கம் சந்திரசேகர் மட்டுமே சிங்களவர் அல்லாத உறுப்பினராக இருக்கின்றார். அத்துடன் சமன்மலி குணசிங்க மட்டுமே பெண்களை பிரிதிநிதி த்துவப்படுத்துகிறார்.

இதனை விட தமிழ், முஸ்லிம் அங்கத்துவமும், பெண்களின் பிரிதிநிதித்துவமும் மத்திய செயற் குழுவிற்கு அவசியம். இதுவே எமது விருப்பமும் தேவையுமாக உள்ளது என்றார். (அ-2)

# வீதியை மறித்து ஆர்ப்பாட்டம் நடத்துவோர் கைதாவார்கள்

ஆர்ப்பாட்டங்கள் மற்றும் பேர ணிகள் காரணமாக போக்குவரத்து நெரிசல் ஏற்படுவதாகவும் பொது மக்களின் நேரம் வீணடிக்கப்ப டுவதாலும் வீதியை மறித்து ஆர்ப் பாட்டம் மற்றும் பேரணிகளை நடத்துபவர்கள் எதிர்வரும் கால ங்களில்கைது செய்யப்படுவார்கள்என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மக்கள் அசௌகரியங்களுக்கு உள்ளாவதனை கவனத்தில் கொண்டு இந்த தீர்மானம் எடுக் கப்பட்டதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளரும் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகருமான அஜித் ரோஹன குறிப்பிட்டார்.

பொலிஸ் தலைமையகத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவிய லாளர் சந்திப்பில் ஊடகப் பேச்சாளர் இதனை தெரிவித்துள்ளார்.

கொழும்பு உள்ளிட்ட நாட்டின் அனைத்து பகுதிகளிலும் இவ்வாறு ஆர்ப்பாட்டங்கள் மற்றும் பேரணி கள் முன்னெடுப்பவர்கள் கைது செய்து சட்ட நடவடிக்கை எடுக்க ப்படும் என்றார். (அ-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆணைக்குழுவின் பரிந்துரைகள் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன

## இலங்கை ம.உ. ஆணைக்குழு தெரிவிப்பு

உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழுவின் அநேகமான பரிந்துரைகள் அமுல்படுத்தப்பட்டுள்ளதாக இலங்கை மனித உரிமை ஆணைக்குழுவின் தலைவர் பிரதீபா மஹானாமஹேவா தெரிவித்துள்ளார். இலங்கைக்குஅண்மையில் விஜயம் செய்திருந்த தென் மற்றும் மத்திய ஆசிய விவகாரங்களுக்கான அமெரிக்க துணை ராஜாங்கச் செயலாளர் நிஷா பிஷ்வால் வெளியிட்ட கருத்துக்கள் ஏற்றுக் கொள்ளக் கூடியதல்ல என அவர் குறிப்பிட்டுள்ளார்.

பிஷ்வாலின் சகல குற்றச்சாட்டுக்களும் பிழையானவை எனவும், இதனை ஏற்றுக்கொள்ள முடியாது எனவும் அவர் தெரிவித்துள்ளார். கொதலாவல பாதுகாப்புக் கல்லூரியின் தலைவர் என்ற ரீதியில் அவர் இந்தக் கருத்துக்களை வெளியிட்டுள்ளார்.

இலங்கையின் மனித உரிமை நிலைமைகளில் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளதாகத் தெரிவித்துள்ளார். அநேகமான முக்கியமான பரிந்துரைகள் ஏற்கனவே அமுல்படுத்தப்பட்டுள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார்.

யுத்த கால சேத விபரங்கள் மற்றும் காணாமல் போதல்கள் தொடர்பில் ஜனாதிபதி ஆணைக்குழு விசாரணைகளை ஆரம்பித்துள்ளதாகத் தெரிவித்துள்ளார். தகவல் அறிந்துகொள்ளும் சட்டத்தையும் அரசாங்கம் விரைவில் பாராளுமன்றில் சமர்ப்பிக்க உள்ளதாகத் தெரி வித்துள்ளார்.இறுதிக் கட்ட யுத்தம் மனிதாபிமான மீட்புப் பணியாகவே நோக்கப்பட வேண்டும் எனவும் படையினர் யுத்தக் குற்றச் செயல்களில் ஈடுபடவில்லை எனவும் அவர் தெரிவித்துள்ளார். (அ-2)

# விமானத்தில் வெடிகுண்டு புரளி! இலங்கை பயணி கைதானார்

டுபாயிலிருந்து சுவீடன் -ஸ்டோக்ஹோம் நோக்கி சென்ற விமானத்தில் பயணித்த இலங்கையர் ஒருவர், தன்னிடம் வெடிகுண்டு இருப்ப தாக கூறி அச்சுறுத்தியதால் கைது செய்யப்பட்டுள்ளார்.

எமிரேட்ஸ் விமான நிறுவனத்திற்கு சொந்தமான விமானத்தில் பயணித்த குறித்த இலங்கையர், தன்னிடம் வெடி குண்டு இருப்பதாக தெரிவித்துள்ளதுடன் விமானிகளின் அறைக்குள் பிரவேசிக்க முயற்சித்துள்ளார்.

அப்போது விமானத்தில் இருந்த சிப்பந்திகள் அவரைப்பிடித் துள்ளனர். இதனையடுத்து விமானம் சுவீடனின் அலண்டா விமான நிலையத்தில் தரையிறக்கப்பட்டது.

விமானப் பயணத்தை சீர்குலைத்தார் என்ற குற்றச்சாட்டின் பேரில் சுவீடன் அதிகாரிகள் இவரை கைது செய்து அவரிடம் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (அ-2)

# பிரிவுத்துயர் பகிர்வு




### திருமதி சேனாதிராஜா நாகேஸ்வரி

கொக்குவில் கிழக்கைப் பிறப்பிடமாகவும் கனடா Scarborough ஐ வசிப்பிடமாகவும் கொண்ட சேனாதிராஜா நாகேஸ்வரி முதலாம் ஆம் திகதி சனிக்கிழமை அன்று காலமானார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் 9 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11 மணிக்கு St. John´s Norway Cemetery And Crematorium,256 Kingston Road, Toronto, on, M4L 1 S7, Canada என்னும் முகவரியில் நடைபெறும்.



### திருமதி ஏரம்பமூர்த்தி பத்மாவதி

புலோலி மேற்கு வியாபாரி மூலையைப் பிறப்பிடமாகவும் அவுஸ்ரேலியா சிட்னியை வசிப்பிடமாகவும் கொண்ட ஏரம்பமூர்த்தி பத்மாவதி முதலாம் திகதி சனிக்கிழமை அன்று காலமானார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளைமறுதினம் வியாழக்கிழமை முற்பகல் 9 மணிக்கு Guardian Funerals ,Sunnyholt Road, Blacktown, NSW,2148, -Australia என்னும் முகவரியில் நடைபெற்று பூதவுடல் தகனம் செய்யப்படும்.



### அல்பிறட் கனகசுந்தரி மரியதாசன்


யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் கனடா மொன்றியலை வசிப்பிடமாகவும் கொண்ட அல்பிறட் கனகசுந்தரி மரியதாசன் கடந்த 31 ஆம் திகதி வெள்ளிக்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் திருப்பலி 8 ஆம் திகதி சனிக்கிழமை 9400 rue Lajeunesse, Mon treal,Qc,H2M 1S4 என்னும் முகவரியில் நடைபெற்று பூதவுடல் நல்லடக்கம் செய்யப்படும்.



### பொன்னையா தணிகாசலம்

(பல.நோ.கூ.சங்கக்கிளை முகாமையாளர்) அச்சுவேலி பத்தமேனியைப் பிறப்பிடமாகவும் கனடா மொன்றியலை வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னையா தணிகாசலம் முதலாம் திகதி சனிக்கிழமை அன்று காலமானார். அன்னாரின் பூதவுடல் நாளை புதன்கிழமை முற்பகல் 10 மணிக்கு 4275 Boul.Des Sources. DDO, Qc. H9B 2A6, Canada என்னும் முகவரியில் தகனம் செய்யப்படும்.



### செல்லத்துரை செல்லையா

உரும்பிராயைப் பிறப்பிடமாகவும் ,வசிப்பிடமாகவும் கொண்ட செல்லத்துரை செல்லையா நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளைமறுதினம் வியாழக்கிழமை நண்பகல் 12 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் உரும்பிராய் இளங்காடு இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

# இலங்கையை சிக்கவைக்கவே கூட்டமைப்பு சிந்திக்கின்றது

## அமைச்சர் வாசு தெரிவிப்பு

(கொழும்பு)

எதிர்வரும் மார்ச் மாதத்திற்குப் பின்னர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வேறு வழியில் பயணிக்க வேண்டிய நிலை ஏற்படும் என தேசிய மொழிகள் மற்றும் சமூக ஒருமைப்பாட்டு அமைச்சர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் மார்ச் மாதம் ஜெனீவாவில் நடைபெறவுள்ள மனித உரிமைகள் பேரவை கூட்டத் தொடரில் அமெரிக்கா, இலங்கை அரசுக்கு எதிரான ஒரு பிரேரணையைக் கொண்டு வரும் என தெற்கு மற்றும் மத்திய ஆசிய விவகாரங்களுக்குப் பொறுப்பான உதவி இராஜாங்க செயலாளர் நிஷா தேசாய் பிஸ்வால், அண்மையில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப் பின்போது உறுதிப்படுத்தியிருந்தார்.

அதுமட்டுமல்லாது, தமிழர்களுக்கு நிரந்தரத் தீர்வொன்று எட்டப்பட வேண்டுமெனில், இலங்கைக்கு எதிராக அமெரிக்கா நிச்சயமாக சர்வதேச விசாரணை கோரி பிரேரணை ஒன்றைக் கொண்டு வர வேண்டும் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரான சம்பந்தனும் நிஷாவுடனான சந்திப்பின் போது தெரிவித்திருந்தார்.

இந்த விடயங்கள் தொடர்பில் அரசின் நிலைப்பாடு குறித்து வினவியபோதே அமைச்சர் வாசுதேவ மேற்கண்டவாறு தெரிவித்தார்.

கூட்டமைப்பின் செயற்பாடுகளுக்கு அவர் கடும் எதிர்ப்பைத் தெரிவித்தார்.

தற்போது அமெரிக்காவும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் எப்படி இலங்கை அரசை சிக்க வைப்பது என்றே சிந்தித்து வருகின்றன.

இவர்களுடைய செயற்பாடுகளைப் பார்க்கும் போது இதுதான் தென்படுகிறது.

ஆனால், அடுத்த மார்ச் மாதத்திற்குப் பின்னர் நிச்சயமாக கூட்டமைப்பு வேறு வழியில் பயணிக்க வேண்டிய நிலையொன்று ஏற்படும். இது உறுதி என்றும் அமைச்சர் தெரிவித்தார். (அ-2)

# அலங்கார உற்சவ பேருரைகள்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் வெள்ளாந்தெரு நல்ல தண்ணீர் கிணற்றடி அருள்மிகு ஸ்ரீ ஞான வைரவப் பெருமாள் ஆலய மாசி மகத்தினையொட்டிய அலங்கார உற்சவ விழா கடந்த 31 ஆம் திகதி முதல் ஆரம்பமாகி எதிர்வரும் 14 ஆம் திகதி வெள்ளிக்கிழமை வரை நடைபெறும்.

இவ் உற்சவ காலங்களில் மாலை 6.30 மணி முதல் தொடர் தெய்வீகப் பேருரையை உலக சைவதிருச்சபையின் யாழ்ப்பாண கிளையின் சைவத் தமிழ்த்துறைத் தலைவர் மதுரகவி காரை.எம்.பி.அருளானந்தன் நிகழ்த்துவார். நிறைவு நாளன்று போட்டியாளர்களுக்கான பரிசளிப்பு நிகழ்வு இடம்பெறும். (அ-2)

# யாழ்.ஆயரின் கருத்தை திருச்சபை ஏற்கவேண்டும்

## ஜாதிகஹெல உறுமய கர்ஜிப்பு

(கொழும்பு)

இலங்கை தொடர்பில் சர்வதேச விசாரணை மேற்கொள்ளப்பட வேண்டும் என யாழ் .ஆயர் தோமஸ் சவுந்தரநாயகம் தெரிவித்துள்ளமை குறித்த பொறுப்பை, இலங்கை கத்தோலிக்க திருச்சபை ஏற்க வேண்டும் என ஜாதிக ஹெல உறுமய தெரிவித்துள்ளது.

கொழும்பில் நேற்று நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் அந்த கட்சியின் மத்திய குழு உறுப்பினரான பஸ்ஸரமுல்லே தயாவங்ஸ தேரர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

தோமஸ் சவுந்தரநாயகத்தின் இந்தக் கருத்தானது சர்வதேசத்தில் எஞ்சியுள்ள புலம்பெயர் விடுதலைப் புலிகளுக்கு உதவுவதாக அமைந்துள்ளது எனவும் அவர் கூறினார்.

இலங்கைக்கு அண்மையில் விஜயம் செய்த அமெரிக்க உதவி இராஜாங்க செயலாளர் நிஷா தேசாய் பிஸ்வால், யாழ்.ஆயரை சந்தித்தார்.

இதன்போது கருத்து வெளியிட்ட ஆயர், இலங்கையின் போர்க் குற்றங்கள் தொடர்பில் சர்வதேச விசாரணை நடத்தப்பட வேண்டும் என தெரிவித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (அ-2)

# பால்மாவை விடவும் ஹெரோயின் போதைப் பொருள் இலாபம்

(கொழும்பு)

பால்மாவை விடவும் ஹெரோயின் போதைப் பொருள் மிகவும் இலாபகரமானது என எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்ரமசிங்க தெரிவித்துள்ளார்.

அரசாங்கம் பால்மாவின் விலையை உயர்த்தியுள்ளதாக அவர் குற்றம் சுமத்தியுள்ளார். 400 கிராம் எடையுடைய பால்மா 61 ரூபாவினாலும், ஒரு கிலோ கிராம் எடையுடைய பால்மாவின் விலை 152 ரூபாவினாலும் உயர்த்தப்பட்டுள்ளது. இலங்கையில் உலக சாதனை நிலைநாட்டப்பட்டுள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

பால்மாவை விடவும் நாட்டில் ஹெரோயின் போதைப் பொருள் விலை குறைவு என அவர் குறிப்பிட்டுள்ளார். அரசாங்கம் மேலும் பல பொருட்களின் விலைகளை உயர்த்துவதற்கு முயற்சித்து வருவதாகத் தெரிவித்துள்ளார். (அ-2)





ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழக மாணவர்களினால் நடத்தப்பட்ட மலைத்தென்றல் நிகழ்வு அண்மையில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் விருந்தினர்கள் அமர்ந்திருப்பதையும் மாணவர்களின் கலைநிகழ்வுகளையும் படங்களில் காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தாய்லாந்தில் அமைதியான வாக்குப்பதிவு



(பாங்கொக்)

தாய்லாந்தில் எதிர்க்கட்சிகளின் தேர்தல் புறக்கணிப்புக்கு மத்தியில் நேற்றுமுன்தனம் அமைதியான வாக்குபபதிவு நடைபெற்றது.

எனினும், எதிர்ப்பாளர்களின் கட்டுப்பாட்டில் உள்ள 45 தொகுதிகளில் வாக்குப்பதிவு இரத்து செய்யப்பட்டது.

வாக்குப்பதிவு முடியும் வரை பெரிய அளவிலான வன்முறை எதுவும் நிகழவில்லை என்று தகவல்கள் தெரிவிக்கின்றன. வாக்குப்பதிவு முடிந்தவுடன் வாக்கு எண்ணிக்கை தொடங்கியது. அனைத்து வாக்குச்சாவடிகளிலும் வாக்கு எண்ணிக்கை முடிந்த பின்னர் முடிவுகள் தேர்தல் ஆணையத்துக்கு அனுப்பி வைக்கப்படும்.

எனினும், வாக்குப்பதிவு நடைபெறாத பகுதிகளில் மறு வாக்குப்பதிவு நடத்தப்பட்ட பின்னரே முடிவுகளை தேர்தல் ஆணையம் அறிவிக்கும் என்று கூறப்படுகிறது.

தாய்லாந்தில் 375 தொகுதிகளில் அன்றையதினம் வாக்குப்பதிவு நடைபெற்றது. இவற்றில் 127 தொகுதிகளில் வாக்குப்பதிவில் பாதிப்பு ஏற்பட்டதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

குறிப்பாக, எதிர்க்கட்சிகளின் கட்டுப்பாட்டில் உள்ள தலைநகர் பாங்கொக் மற்றும் தெற்கு மாகாணங்களில் வாக்குப்பதிவு இரத்து செய்யப்பட்டது.

தேர்தல் நடைபெறாத இடங்களுக்கு மறு தேர்தல் நடைபெறும் என்று தேர்தல் ஆணையம் அறிவித்துள்ளது. அந்த மறு தேர்தலுக்கான முன் வாக்குப்பதிவு இம்மாதம் 23 ஆம் திகதி நடைபெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

அந்த முன் வாக்குப்பதிவு நடைபெற்ற ஒரு வாரத்திற்குப் பின்னர் மறு தேர்தல் திகதி நிர்ணயிக்கப்படலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது. (2)



அறிஞர் அண்ணாவின் 45 ஆவது நினைவு நாளையொட்டி தி.மு.க. தலைவர் கருணாநிதி மெரினாவில் உள்ள அண்ணா நினைவு இடத்தில் மலர்தூவி மரியாதை செலுத்தினார். தி.மு.க. பொதுச்செயலாளர் க.அன்பழகன், மு.க.ஸ்டாலின், தயாநிதிமாறன், ஜெ.அன்பழகன், டி.ஆர்.பாலு, எ.வ.வேலு உள்ளிட்ட தி.மு.க. நிர்வாகிகள் மலர் தூவி அஞ்சலி செலுத்தினார்.

## 54 சிறைக்கைதிகள் தப்பியோட்டம்

(திரிபோலி)

லிபிய நாட்டின் தலைநகர் திரிபோலி சிறைச்சாலையிலிருந்து 54 சிறைக்கைதிகள் தப்பியோடினர். சிறைக்கைதிகளுக்கு நேற்று முன்தினம் காலை உணவு அளிக்கப்பட்டுக் கொண்டிருந்தபோது சிறையில் ஐந்து காவலர்கள் குறைவாக இருந்துள்ளனர். இந்த சந்தர்ப்பத்தைப் பயன படுத்திக்கொண்ட சிறைக்கைதிகள 54 பேர் சிறைக் கட்டடத்தின் பின்புறமிருந்த பாதுகாப்பு ஜன்னல் கண்ணாடிகளை உடைத்து அங்கிருந்து தப்பித்துள்ளனர்.

நாட்டில் பொலிஸாரும், இராணுவமும் போதிய அளவில் இல்லாத நிலையில் தற்போதைய அரசு பெரும்பான்மையான புரட்சிப் படைகளையே பாதுகாப்பிற்கு நம்பியுள்ளது. இந் நிலையில் காவலர்கள் எண்ணிக்கைக் குறைவால் இத்தகைய சம்பவங்கள் தொடர்ந்து நடைபெறுவதாகத் தகவல்கள் தெரிவித்தன. (2)

## முள்ளிவாய்க்கால் நினைவுமுற்றம் தமிழர்களுக்கு சொந்தமானது

### பழ.நெடுமாறன்



(தஞ்சாவூர்)

முள்ளிவாய்க்கால் நினைவு முற்றம் தமிழர்களுக்குச் சொந்தமானது. இதனை இளைஞர்கள் தான் பாதுகாக்க வேண்டும் என உலகத் தமிழர் பேரமைப்பின் தலைவர் பழ.நெடுமாறன் தெரிவித்துள்ளார்.

தஞ்சை விளார்சாலை அருகேயுள்ள முள்ளிவாய்க்கால நினைவு முற்றத்தில் அண்மையில் நடைபெற்ற நிகழ்வில் கலந்துகொண்ட போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இவ் விழாவில் அவர் உரையாற்றுகையில்,

இந்த முற்றம் எந்த நோக்கத்திற்காக தொடங்கப்பட்டதோ அந்த நோக்கம் நிறைவேறுவதை கண்டு மகிழ்ச்சி அடைகிறேன்.

நமது மொழி, பண்பாடு, கலை ஆகியவற்றையும் வளர்க்கும் இடமாக முள்ளிவாய்க்கால் நினைவு முற்றம் அமைந்துள்ளது. தமிழ் மண்ணுக்கு, தமிழினத்திற்காக உயிர் நீத்த மாவீரர்கள், தமிழ் அறிஞர்கள் போல குழந்தைகள் வேடம் அணிந்து இங்கே வந்திருந்ததை பார்க்கும் போது, நமது தமிழ் இனத்திற்கு ஒரு போதும் ஆபத்து ஏற்படாது என்ற உணர்வு ஏற்பட்டுள்ளது.

இந்த குழந்தைகள் பெரியவர்களாக வளர்ந்த பின்னர் நிச்சயமாக தமிழ் இனத்தை காப்பாற்றுவார்கள் என்ற உணரவும் ஏற்பட்டுள்ளது.

இந்த முற்றத்தில் மொத்தம் 202 படங்கள் வைக்கப்பட்டுள்ளன. இவர்கள் எல்லாம் தமிழுக்காக போராடி மெழுகுவர்த்தி போல் எரிந்து கரைந்து போனவர்கள். இந்த முற்றத்திற்கு வரும் இளைஞர்கள் தமிழினத்தை காப்பாற்ற வேண்டும் என்ற உணர்வுடன் வரவேண்டும்.

இந்த நினைவு முற்றம் தமிழர்களுக்கு சொந்தமானது. இதனை இளைஞர்கள் தான் பாதுகாக்க வேண்டும் என்றார். (2)

## தமிழக ஏதிலிகளை மீள்குடியமர்த்தும் பணி தீவிரப்படுத்தப்பட வேண்டும்

### இணையமைச்சர் நாச்சியப்பன் தெரிவிப்பு

(சென்னை)

***இலங்கை தமிழர்களை மீள்குடியமர்த்தும் பணியை தீவிரப்படுத்த வேண்டும். அதற்காக மத்திய அரசையும், இலங்கை அரசையும் வழிக்கு கொண்டுவருவது எளிது என மத்திய வணிகம் மற்றும் தொழிற்றுறை இணையமைச்சர் சுதர்சன நாச்சியப்பன் கூறியுள்ளார்.***



நாம் அமைப்பு சார்பில் சங்கம் 4 என்ற பெயரில் நடத்தப்பட்ட தமிழ்த் திருவிழாவின் நிறைவு விழா சென்னையில நேற்றுமுன்தினம்நடத்தப்பட்டது.

இந் நிகழ்வில் மத்திய இணையமைச்சர் சுதர்சன நாச்சியப்பன் கலந்துகொண்டு உரையாற்றுகையில்,

மாமன்னர் இராஜேந்திரன் 52 நாடுகளை கைப்பற்றி ஆட்சியமைத்து, தமிழ் கலாசாரத்தை பரப்பியிருப்பது தமிழர்களுக்கு பெருமையான விடயம். அண்மையில் பாங்கொக் சென்றிருந்தபோது, சோழப் பேரரசனின் ஆட்சி மிகப் பெரிய அளவில் விஸ்தரிப்பாக இருந்ததற் கான சான்றை காண முடிந்தது.

மேலும், கைப்பற்றப்பட்ட இந்த 52 நாடுகளிலும் வணிக ஒப்பந்தங்கள் அனைத்தும் தமிழில்கையெழுத்திடப்பட்டுள்ளன.

இதுபோல் வரலாறுகளைப் படிக்கின்றபோது, இலங்கை உட்பட பல உலக நாடுகள் மது இராஜேந்திர சோழன் படையெடுத்து வெற்றிபெற்று ஆட்சியமைத்தார் என்பதை அறிந்து கொள்ளமுடிகின்றது.

இலங்கைத் தமிழர்களைப பொறுத்தவரை, தமிழகத்திலும் அவர்களை அகதிகள் முகாம்களில் பணயக் கைதிகளாகத் தான் நாம் வைத்திருக்கிறோம். இவர்களுக்கென இலங்கையில் வீடுகள் மற்றும் நிலங்கள் உள்ளன. ஆனால், இவர்களை தமிழகத்தில் கடந்த 21 ஆண்டுகளாக பணயக் கைதிகளாக வைத்திருப்பதன் அவசியம் என்ன?

மாமன்னன் இராஜேந்திர சோழன் மீட்டுத் தந்த இலங்கை மண்ணில், மீண்டும் இவர்களை குடியமர்த்துவதுதான் நமக்குப் பெருமையாக இருக்க முடியும். இதற்கான முயற்சிகளை எடுக்கும் அமைப்புகளுக்கு தலைமையேற்க நான் தயாராக இருக்கிறேன். இந்திய அரசையும், இலங்கை அரசையும் வழிக்குக் கொண்டுவரும் தைரியம் எனக்கு இருக்கிறது. இந்திய அரசை இலங்கைத் தமிழர்களுக்காக பணம் செலவழிக்க வைக்க முடியும் என்றார்.

முன்னதாக விழாவில் நாம அமைப்பு நிறுவநர் ஜெகத் கஸ்பார் உரையாற்றுகையில்,

இலங்கையில் முகாமில் தங்கவைக்கப்பட்டுள்ள தமிழர்களில் விதவைகளாக 80 ஆயிரம் பேர் இருப்பதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

இவர்களுக்கு ஏதாவது செய்ய வேண்டும் என்று பல்வேறு அமைப்புகள் முயற்சித்த போதும், அதற்கான பூர்வாங்க நடைமுறை இல்லாத காரணத்தால் உதவிகள் செய்ய முடியாத நிலை உள்ளது. எனவே, மத்திய அரசு இதுபோன்ற நடைமுறையை உருவாக்கினால், இலங்கையில் உள்ள தமிழ் விதவைகளில் 100 பேருக்கு தொடர்ந்து 3 ஆண்டுகளுக்கு மாதம் 5 ஆயிரம் ரூபா அளித்து சுய தொழில் தொடங்குவதற்கு உதவி செய்ய நாம் அமைப்பு தயாராக உள்ளது என்றார். (2)

## ஈழத்தமிழர்களுக்கு ஆதரவாக ம.தி.மு.க. எழுச்சி போராட்டம்

### வைகோ அழைப்பு

ஈழத் தமிழர்களுக்கு ஆதரவாக எதிர்வரும் 26 ஆம் திகதி எழுச்சி நாள் போராட்டம் நடத்தபடும் என ம.தி.மு.க. பொதுச்செயலர் வைகோ அறிவித்துள்ளார்.

திண்டுக்கலில் நடைபெற்ற நிகழ்வில் பங்கேற்பதற்காக வந்த வைகோ செய்தியாளர்களிடம கூறுகையில்,

சென்னையில் இன்று செவ்வாய்க்கிழமை ம.தி.மு.க. வின் மாநில பொதுக்குழுக் கூட்டம் நடைபெறவுள்ளது. இதில் அரசியல் முக்கியத்துவம் வாய்ந்த தீர்மானம் நிறைவேற்றப்படும்.

சென்னை கிண்டியில் எதிர்வரும் 8 ஆம் திகதி நடைபெறும் பா.ஜ.க. மாநாட்டில் பங்கேற்க ம.தி.மு.கவுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. அதனை ஏற்று மாநாட்டில் பங்கேற்க உள்ளோம்.

ஈழத் தமிழர்களுக்கு ஆதரவாக எதிர்வரும் 26 ஆம் திகதி எழுச்சி நாள் போராட்டம் நடத்தப்படவுள்ளது.

வாஜ்பாய் தலைமையிலான பா.ஜ.க. அரசு ஈழத் தமிழர்களுக்கு ஏராளமான உதவிகளை செய்துள்ளது. ஆனால் காங்கிரஸ் அரசு தமிழர்களுக்கு எதிராகவும், இலங்கை இராணுவத்துக்கு ஆதரவாகவும் செயற்பட்டு வருகிறது.


ஊழலுக்கு எதிராகவும், தமிழக வாழ்வாதார பிரச்சினைகளான முல்லைபெரியாறு, காவிரி, மீனவர் நலன் உள்ளிட்ட பிரச்சினைகளில் இருந்து எந்த காலத்திலும் பின்வாங்க மாட்டோம்.

இலங்கையில் நடந்த இனப்படுகொலைக்கு இலங்கை அரசு மட்டுமன்றி மத்தியில் ஆளும் காங்கிரஸ் அரசும் தான் காரணம். இந்த அரசு ஒழிக்கப்பட வேணடும்.

இம் மாதம் 26 ஆம் திகதி உலகத்தமிழர்களுக்கான குரல எழுப்பும் நாளாகும். இந்த நாளில் இந்தியா மட்டுமன்றி உலகம் முழுவதும் தமிழர்கள வாழும் 65 நாடுகள் நீதிகேட்டு குரல் எழுப்பவேண்டும்.

அப்போது இலங்கையில் நடந்த மனிதவுரிமை மீறலுக்கு விசாரணை, பொது வாக்கெடுப்பு நடத்த வேண்டும் போன்ற கருத்துக்கள் பதிவு செய்யவேண்டும். இலங்கை தமிழர்களுக்காக சிந்திய [illegible] என்று தெரிவித்தார். (2)

## பக்தர்கள் பயணித்த பேருந்து விபத்து; 10 பேர் பலி, 56 பேர் படுகாயம்!



நேபாள பேருந்தில் 66 பக்தர்கள் பயணித்தனர். இப் பேருந்தானது திடீரென விபத்திற்குள்ளானதில் 10 பேர் உயிரிழந்தனர். 56 பேர் படுகாயமடைந்தனர்.

நேபாள நாட்டின் கிழக்குப் பகுதியில் அமைந்துள்ள சிந்ஹுலி எனும் இடத்தில் இருந்து சுமார் 66 பக்தர்கள் பேருந்தில் ஹோதாங என்ற இடத்திலுள்ள இந்து கோவிலுக்கு சென்றுகொண்டிருந்தனர். வழியல் 300 மீற்றர் ஆழமுள்ள கிடுகடு பள்ளத்தில் பேருந்து கவிழ்ந்து விபத்துக்குள்ளானது.

இதில் சம்பவ இடத்தில் 3 பேரும், வைத்தியசாலையில் சிகிச்சை பலனின்றி 7 பேரும பரிதாபமாக பலியாகினர். மற்ற 56 பக்தர்களும் பலத்த காயத்துடன் உயிர் தப்பினர். இவர்கள் பல்வேறு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெறு கிறார்கள். இவர்களில் பலரது உடல் நிலை மிகவும் கவலைக்கிடமாக உள்ளது. எனவே சாவு எண்ணிக்கை மேலும் அதிகரிக்கும் என்று தெரிகிறது. (2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருளில் பெற்றோம் (சுதந்திரம்)
இன்னும் விடியவில்லை.
~ கவிஞர் மேத்தா

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## கொடியேற்று; தேசிய கீதம் பாடு எனக் கட்டளையிடுவதா தேசப்பற்று!

பேரறிஞர் அண்ணாதுரை இறந்தபோது அவருக்கு அஞ்சலி செலுத்துவதற்காக இலட்சோப இலட்ச மக்கள் கூடினர்.

புகையிரத வண்டிகளில் இடம் இல்லாததால் புகையிரத வண்டிக்கு மேல் ஏறிப் பயணித்து அறிஞர் அண்ணாவுக்கு அஞ்சலி செய்த வரலாறுகள் பதிவிலுள்ளன.

மக்களின் விருப்பத்திற்குரியதாக எது இருக்கிறதோ அது விடயத்தில் தாமாகவே மக்கள் ஈடுபாடு காட்டுவர்.

இதற்கு நல்லூர்க் கந்தசுவாமி கோவில் நல்ல உதாரணம்.

நல்லூர்க் கந்தசுவாமி கோவில் மஹோற்சவத்திற்கு மக்கள் செல்லவேண்டும் என எவரும் கோரிக்கை விடுவது கிடையாது.

நல்லூர்க் கந்தனின் மஹோற்சவம் ஆரம்பமாகிறது. அடியார்கள் ஆலயத்திற்கு வருகை தாருங்கள் என ஆலய நிர்வாகம் எக்காலத்திலும் விளம்பரம் செய்ததும் கிடையாது.

ஆனால் நல்லூர் முருகனின் மஹோற்சவம் என்றால் – நல்லூர்த் தேர்த் திருவிழா என்றால் இலட்சோப இலட்சம் மக்கள் நல்லூரில் கூடுவர்.

அதிகாலை மூன்று மணிவேளையில் சுமார் ஒருலட்சம் பேர்வரை, ஒரே நேரத்தில் நீராட வைக்கின்ற சக்தி நல்லூர் முருகனுக்கு மட்டுமே உண்டு.

எங்கே பார்க்கலாம் ஒரு நாளைத் தெரிவு செய்து எல்லா மக்களும் அதிகாலை மூன்று மணிவேளையில் நீராடவேண்டும் என்று கூறிப் பாருங்கள். பத்துப்பேர் கூட அதனை ஏற்கமாட்டார்கள்.

ஆக, மக்கள் தாமாக விரும்பும் போது அவர்கள் தங்களை மறந்து தமது பிரசன்னத்தை – ஆதரவை – பங்களிப்பை வழங்குவர்.

இதைவிடுத்து கட்டாயப்படுத்தலின் மூலம் செய்யப்படும் எந்த நிகழ்வும் அர்த்தமற்றதாகி விடும் என்பதே யதார்த்தம்.

இதனை இலங்கை அரசு புரிந்துகொள்ள வேண்டும். இலங்கையின் 66–வது சுதந்திர தினம் இன்றாகும்.

இலங்கை சுதந்திரமடைந்து 66 ஆண்டுகள் பூர்த்தியடைந்த நிலையில்; தேசியக் கொடி யேற்றுங்கள், தேசிய கீதம் பாடுங்கள் என அறிவுறுத்தல் கொடுப்பது, கிடைத்த சுதந்திரத்திற்கு இழுக்கைத் தரக்கூடியது.

நாட்டின் சுதந்திர தினம் என்றால் அதனை அந்த நாட்டு மக்கள் அனைவரும் ஒன்று கூடி தேசப் பற்றோடு அனுஷ்டிக்க வேண்டும். அதுவே உண்மையான சுதந்திர தினமாகும்.

இதனைவிடுத்து சுதந்திர தினத்தில் தேசியக் கொடி பறப்பதும், தேசிய கீதம் படிப்பதுமே சுதந்திர தினக் கொண்டாட்டம் என்று நினைத்தால், அது மகா தவறாகும்.

இந்த நாடு என்னுடையது என்று ஒவ்வொரு பிரஜையும் நினைக்க வேண்டும். சிங்களவர்களே ஆளும் இனம் என்றால், அவர்களே ஜனாதிபதியும் பிரதமரும் என்றால், நாட்டுப் பற்று எல்லா இனத்திடமும் இருக்க வேண்டும் என நினைப்பது எங்ஙனம் நியாயமாகும்?

ஆகவே கட்டாயப்படுத்தல்களை ஒருபுறத்தில் தள்ளிவிட்டு இந்த நாடு எல்லோரதும் தேசம் என்ற நினைப்பை அனைத்து மக்களிடமும் முதலில் ஏற்படுத்த வேண்டும். அப்போதுதான் மனம், வாக்கு, காயம் என்ற திரிகரண சுத்தியோடு சுதந்திர தினம் நினைவுபடுத்தப்படும்.

# பட்டதாரிகளுக்கு நியமனம் வழங்குவதில் வடமாகாணத்தை புறக்கணிப்பது ஏன்?

## உயர் தேசிய பட்டதாரிகள் சங்கம் கேள்வி

வடமாகாணத்தைச் சேர்ந்த உயர் தேசிய கணக்கியல் முகாமைத்துவ பட்டதாரிகளான தம்மை பட்டதாரி பயிலுநர்கள் சேவைக்குள் உள்ளீர்க்கவில்லை என யாழ். மாவட்ட உயர் தேசிய கணக்கியல் முகாமைத்துவ பட்டதாரிகள் சங்கம் குற்றம் சுமத்தியுள்ளது.

இவ்விடயம் தொடர்பில் அச்சங்கம் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

யாழ்.மாவட்ட உயர் தேசிய கணக்கியல் முகாமைத்துவ பட்டதாரிகள் ஆகிய நாம் எமது நியமனம் தொடர்பாக யாழ்.அரச அதிபர் மற்றும் அரசியல் தலைவர்களைச் சந்தித்த போது அவர்கள் எமக்களித்த உறுதி மொழிகள் எதனையும் நிறைவேற்ற வில்லை.

இதனால் நாம் ஜனநாயக ரீதியாக போராட்டம் ஒன்றையும் முன்னெடுத்திருந்தோம். அப்போராட்டமும் அப்போதிருந்த தமிழ் பொலிஸ் அதிகாரியால் ஒடுக்கப்பட்டது.

அனைத்து போராட்ட வழிகளும் தோற்றுப்போன நிலையில் 31யூலை 2012 அன்று அதி உயர் நீதிமன்றத்தில் எமது நியமன மறுப்புக்கு எதிராக அடிப்படை உரிமை மீறல் மனு ஒன்றை 228 பட்டதாரிகள் இணைந்து தனித்தனி வழக்குகளாக தாக்கல் செய்தோம். வழக்கை விசாரித்த நீதியரசர்கள் குழாம் மனுதாரர்கள் நியாயத்தை ஏற்றுக்கொண்டு வழக்கை தொடர்ந்து நடத்த உத்தரவிட்டனர்.

பட்டதாரி பயிலுநர் நியமனத்தின் அடிப்படைத் தகுதியாக பல்கலைக் கழக மானியங்கள் ஆணைக் குழுவால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக் கழகம் அல்லது நிறுவனம் ஒன்றில் பட்டத்தை பெற்றிருக்க வேண்டும் என்பதாகும்.

அந்த வகையில் எமது கற்கை நெறிகள் 1990-ம் ஆண்டின் 46-ம் இலக்க பொதுநிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சின் சுற்றுநிருபத்தின் மூலம் பல்கலைக்கழகத்தால் வழங்கப்படுகின்ற வணிகமாணி பட்டத்திற்கு பதிலீடானது என பிரகடனப்படுத் தப்பட்டுள்ளதுடன் அதன் அடிப்படையில் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவினால் இலங்கை உயர் கல்வி தொழில்நுட்பவியல் நிறுவனத்தால் வழங்கப்படும் நான்கு வருட காலத்தைக் கொண்ட மேற்படி இரண்டு பட்டங்களும் அங்கீகரிக்கப்பட்டிருந்தது.

அதன் அடிப்படையிலும் ஏனைய மாவட்டங்களில் பட்டதாரிகளிற்கு பயிலுநர் நியமனம் வழங்கப்பட்டமை கடந்த கால அனைத்து அரச சேவை நியமனத்தின் போதும் எமது பட்டதாரிகளிற்கு நியமனம் வழங்கப்பட்டு வந்துள்ளமை என்பவற்றின் அடிப்படையில் எமக்கும் நியமனம் வழங்க உத்தரவிடுமாறு மனுவில் மன்றைக் கோரியிருந்தோம்.

தொடர்ந்து வழக்கு நடைபெற்று 20.12.2013 அன்று வழக்கு விசாரணைக்கு எடுக்கப்படவிருந்த சூழ்நிலையில் பட்டதாரிகள் விடயம் அமைச்சர வைக்கு பாரப்படுத்தப்படு அதனூடாக நிவாரணம் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் அதனடிப்படையில் மனுதாரர்களிற்கு நிவாரணம் கிடைக்கும் எனக் கருதுவதாகவும் வழக்கு விசாரணையை பிற்போடுமாறும் சட்டமா அதிபர் திணைக்களம் ஓர் நகர்தல் பத்திரம் மூலம் மன்றைக் கோரியிருந்தது.

அதற்கமைவாக வழக்கு தைமாதம் 2014ற்கு ஒத்தி வைக்கப்பட்டு 30.01. 2014 அன்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. மன்றில் ஆஜராகிய சிரேஷ்ட அரச சட்டத்தரணி நகர்தல் பத்திரத்தில் தெரிவிக்கப்பட்ட விடயம் தவறானது எனவும் அமைச்சரவை தீர்மானம் வடமாகாணத்திற்கு ஏற்புடையது அல்ல என வாதிட்டார்.

அமைச்சரவை தீர்மானத்தின் பிரதி ஒன்றை வழங்கும்படியான மனுதாரர் தரப்பு சட்டத்தரணியின் கோரிக்கையும் அரச சட்டவாதியால் நிராகரிக்கப்பட்டது. அவ்வாறான ஓர் உத்தரவை பிறப்பிக்க மன்றமும் மறுத்துவிட்டது.

மனு திகதியை மிக குறுகிய அடிப்படையில் நிர்ணயிக்குமாறான மனுதாரர் தரப்பு சட்டத்தரணியின் கோரிக்கையும் நிராகரிக்கப்பட்டு வழக்கு நீண்ட தவணையாக 29.09.2014ற்கு ஒத்தி வைக்கப்பட்டது.

அரச தரப்பின் மேற்படி அறிவித்தலால் மனுதாரர்கள் அதிர்ச்சியும் ஆழ்ந்த வேதனையும் அடைந்துள்ளனர். அரசாங்கத்தின் அறிவித்தலின் பிரகாரம் மேற்படி வடமாகாண பட்டதாரிகள் புறநீங்கலாக ஏனைய பிரதேச பட்டதாரிகளிற்கு நிரந்தர நியமனம் வழங்கப்பட்டுள்ளது என கருதுகின்றோம்.

அவ்வாறு நடைபெறும் பட்சத்தில் அரசாங்கம் திட்டமிட்டு ஒரு தமிழ் மாகாணத்தை இன அடிப்படையில் புறக்கணித்து மத்திய அரசாங்கத்தினால் வழங்கப்படுகின்ற வரப்பிரசாதங்களை அவர்களிற்கு கொடுக்க மறுத்து பாரிய அநீதி இழைக்க தயாராகின்றது என்று கருத வேண்டியுள்ளது.

எம்மை இலங்கை மாதாவின் மைந்தர்களாக அன்றி மாற்றாந்தாய் மனப்பான்மையுடன் நடத்த முற்படுகிறதா என தோன்றுகிறது. உயர் கல்வியை பூர்த்தி செய்து பட்டம் பெற்ற ஒரு துறை பட்டதாரிகளிற்கு அநீதி இழைப்பதன் மூலம் அந்த உயர் கல்வி கூட்டத்திற்கு மூடுவிழா செய்து பல் கலைக்கழக வாய்ப்புக் கிடைக்காத மாணவர்களின் உயர்கல்வி வாய்ப்பை இல்லாமல் செய்து வடமாகாண கல்வித துறையை நசுக்க அரசாங்கம் பிள்ளையார் சுழி போடுகிறதா என சந்தேகப்பட வைக்கிறது. கடந்த காலங்களில் நாம் வாழ்ந்த கல்விகற்ற சூழலைக் கருத்திற் கொண்டு நியமனத்தில் முன்னுரிமை வழங்க வேண்டிய அரசாங்கம் எமக்கு அநீதி இழைக்க முற்படுவது வெந்த புண்ணில் வேல் பாய்ச்சுவது போன்றுள்ளது. என அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# முஸ்லிம் மக்கள் 5000 பேர் காணாமற் போயுள்ளனர்

(கொழும்பு)

முஸ்லிம்கள் 5,000 பேர் வரை காணாமல் போயுள்ளதாக காணாமல் போயுள்ளோரை கண்டறியும் ஜனாதிபதி ஆணைக்குழுவிடம் இதுவரை முறையிடப்பட்டுள்ளது என இந்த ஆணைக் குழுவின் தலைவர் மெக்ஸ்வெல் பராக்கிரம பரணகம தெரிவித்தார்.

கிழக்கு மாகாண சபை உறுப்பினர் பொறியியலாளர் சிப்லி பாரூக் தலைமையிலான குழுவினர் குறித்த ஆணைக் குழுவின் தலைவரினை கொழும்பிலுள்ள ஆணைக்குழுவின் அலுவலகத்தில் நேற்று சந்தித்து கலந்துரையாடினர்.

இதன்போது விடுதலை புலிகளினால் மட்டக்களப்பு மாவட்டத்தில் படுகொலை செய்யப்பட்டவர்கள் பற்றிய விசாரணைகள் மற்றும் நட்டஈடு வழங்குவது தொடர்பிலும் கலந்துரையாடப்பட்ட போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அத்துடன் இது தொடர்பில் காணாமல் போனவர்களின் உறவினர்களுடன் தனித்தனியாக கலந்துரையாடுவதற்கு அவர்களை கொழும்புக்கு அழைத்து வரும்படியும் அவர் தெரிவித்தார்.

அத்துடன் காணாமல் போனவர்களின் புகைப்படங்கள் மற்றும் ஆவணங்களை ஆணைக்குழுவிடம் வழங்குமாறும் அவர் குறிப்பிட்டார். இதே வேளை, இந்த ஆணைக்குழு எதிர்வரும் மார்ச் 2ஆம் வாரத்தில் மட்டக்களப்புக்கு விஜயம் மேற்கொள்ளவுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார். (அ-2)

## அதிபர்களுக்கான செயலமர்வு

யாழ்ப்பாணம் வலயத்தைச் சேர்ந்த அதிபர்களுக்கான செயலமர்வொன்று இடம் பெறவுள்ளதாக யாழ். வலயக் கல்விப்பணிப்பாளர் எஸ். உதயகுமார் அறிவித்துள்ளார்.

இதற்கமைய நாளைமறுதினம் வியாழக்கிழமை காலை 8.30 மணிக்கு வகை 2, வகை 3 பாடசாலைகள் ஆகியவற்றிற்கு யாழ்.வலய முகாமைத்துவ மண்டபத்திலும் வகை1 AB, வகை 1C பாடசாலைகள் ஆகியவற்றிற்கு மறுதினம் வெள்ளிக்கிழமை காலை 8.30 மணிக்கு யாழ்.வலய முகாமைத்துவ மண்டபத்திலும் நடைபெறும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

செயலமர்விற்கு வருகை தரும் அதிபர்கள் மேற்படி செயலமர்வில் பாடசாலை அபிவிருத்திக்குழு அமைத்தல், கணக்கு திறத்தல் தொடர்பான முக்கிய விடயங்கள் கலந்துரையாடப்படவுள்ளதால் அதிபர் மாத்திரமே நேரில் கலந்து கொள்ள வேண்டும். அதிபர் சார்பில் வேறு பிரதிநிதிகள் கலந்துகொள்வது முற்றாகத் தவிர்க்கப்பட்டுள்ளதென அவர் தெரிவித்துள்ளார். (அ-2)

## சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத் துளிகள்

### அன்பே ஆணிவேர்



- அறிவோடு ஒன்றி விடும் போது தான் நம்முடைய குறைகளை அகற்ற முடியும்.
- தாய், தந்தையரை மகிழ்வித்தால் கடவுளும் மகிழ்ச்சி அடைகிறார்.
- அன்பின் அடிப்படையில் செய்யப்படும் அனைத்தும் ஆனந்தம் தரும். அன்பே ஆணிவேர் என்பதை உணருங்கள்.
- நம் அனைவருக்கும் ஒரே மாதிரியான இன்பம் அளிக்கும் பொருள் உலகத்தில் கிடையாது.
- கோபத்தில் சிறப்பான பணிகளைச் செய்ய இயலாது. அமைதியில் பணி ஆர்வம் அதிகரிக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆண்களுக்கான எல்லே போட்டி; மனோகரா இளைஞர் சம்பியன்



கரவெட்டி பிரதேச செயலக இளைஞர் கழக சம்மேளனத்தில் பதிவு செய்யபட்ட இளைஞர் கழகங்களுக்கிடையிலான விளையாட்டு நிகழ்வுகளின் பெரு விளையாட்டுப் போட்டிகள் கடந்த முதலாம் திகதி ஆரம்பமாகின.

அன்று மனோகரா விளையாட்டு மைதானத்தில் ஆணகளுக்கான எல்லே போட்டிகள் இடம்பெற்றன.

இதில் அல்வாய் மனோகரா இளைஞர் கழகம் சம்பியன் பட்டத்தை வென்றது.

இறுதியாட்டத்தில் நெல்லை ப்ளாஷ்ரர் இளைஞர் கழகத்தை எதிர்த்து அல்வாய் மனோகரா இளைஞர் கழகம் மோதியது.

முதலில் ஆட்டத்தை ஆரம்பித்த நெல்லை ப்ளாஷ்ரர் இளைஞர் கழகம் 5 ஓட்டங்களை பெற்றது. இதில் அவ்வணி சார்பில் ந.டினாஎன் - 3, த.தர்ஷிகன் - 1, சி.அருணகுமார் - 1 என ஓட்டங்களை பெற்று கொடுத்தனர்.

பதிலுக்கு ஆடிய அல்வாய் மனோகரா இளைஞர் கழகம் 6 ஓட்டங்களை பெற்று வெற்றி பெற்றது.

மனோகரா இளைஞர் கழகம் சார்பில் ம.நிதர்சன் -1, பா.பிரதீப் - 1, ச.கதீஸ் - 2, ம.மனோஜனன் - 1, வி.கிருவரன்-1 என ஓட்டங்களை பெற்று கொடுத்தனர். (க-23)

# சங்கானை பிரதேசத்துக்குட்பட்ட உதைபந்து; சென்.நியூஸ்ரார், பாரதி இளைஞர் வெற்றி

அராலி வடக்கு சில்வெஸ்ரார் இளைஞர் கழகம் சங்கானை பரதேச செயலகத்திற்குட்பட்ட இளைஞர் கழக அணிகளுக்கிடையே நடத்தும் உதைபந்தாட்டப் போட்டிகள் இடம்பெற்று வருகின்றன.

அணிக்கு 7 பேர் கொண்ட இப் போட்டிகள் அராலி வடக்கு சில்வெஸ்ரார் இளைஞர் கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன.

இடம்பெற்ற லீக் போட்டியில் அராலி ஏ.எல். இளைஞர் கழக அணியும் சென்.நியூஸ்ரார் இளைஞர் கழக அணியும் மோதின.

போட்டி நேர நிறைவில் இரு அணிகளும் சமநிலையில் இருந்தது. சமநிலை உடைப்பிற்கு தண்ட உதை வழங்கப்பட்டது. இதன் மூலம் போட்டியில் சென்.நியூஸ்ரார் இளைஞர் கழக அணி வெற்றி பெற்றது.

இடம்பெற்ற அடுத்த போட்டியில் பாரதி இளைஞர் கழகஅணியும் கலைஞர் இளைஞர் கழக அணியும் மோதின. இப் போட்டியில் பாரதி இளைஞர் கழக அணி வெற்றி பெற்றது. (க-23)

# இளைஞர் கழகங்களுக்கிடையிலான விளையாட்டுப் போட்டி இன்று ஆரம்பம்

கரவெட்டி பிரதேச இளைஞர் கழக சம்மேளனத்திற்குட்பட்ட பதிவு செய்யப்பட்ட இளைஞர் கழகங்களுக்கிடையிலான விளையாட்டுப் போட்டிகள் இன்று ஆரம்பமாகவுள்ளன.

முதல் நிகழ்வாக காலை 7 மணி முதல் ஆண்களுக்கான கிரிக்கெட் போட்டிகள் கரணவாய் கொலின்ஸ் விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெறவுள்ளன.

8 மணி முதல் பெண்களுக்கான கிரிக்கெட் போட்டிகள் மாலுசந்தி மைக்கல் விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெறவுள்ளன.

எனவே பதிவு பெற்ற இளைஞர் கழக அணிகள் குறித்த நேரத்தில் வருகை தந்து போட்டிகளில் பங்கு பற்றுமாறு கரவெட்டி பிரதேச இளைஞர் சேவை உத்தியோகத்தர் மனோராஜ் கேட்டுள்ளார். (க-23)

வலம்புரி SPORTS விளையாட்டுச் செய்திகள்

# பெரிய சீரோவாகி விட்டோம்

## கவலையில் டோனி



நியூசிலாந்துக்கு எதிரான போட்டியில் நாங்கள் மிகப்பெரிய சீரோவாகி விட்டோம் என்று கூறியுள்ளார் அணித்தலைவர் டோனி. நியூசிலாந்துக்கு எதிரான ஒருநாள் தொடரை, முற்றிலுமாக இந்தியா இழந்து விட்டது.

இதுகுறித்து டோனி கூறுகையில், எல்லாத் தோல்விகளுமே மோசமானதுதான். ஒரு நாளின் முடிவில் உங்களால் அந்த ஏமாற்றத்தைத் தாங்கிக் கொள்வது கஷ்டம்தான், ஆனால் வேறு வழியில்லையே.

நமது பட்டிங்குக்காக நிறைய செலவளிக்கிறோம். அனுபவம் இல்லாத வீரர்கள் உள்ளனர். இருந்தாலும் பல முக்கிய வீரர்கள், அனுபவ வீரர்களும் உள்ளனர்.

ஆனால் நியூசிலாந்துக்காரர்கள் பிரமாதமாக திட்டம் போட்டு தெளிவாக அதை அமுல்படுத்தி விடுகின்றனர். நாம் என்னதான் முயற்சித்தாலும் அவர்கள் முன்பு அது பலிக்காமல் போய் விடுகிறது.

நமது வீரர்களை தனித்தனியாக குறிவைத்து காலி செய்கிறார்கள், ஒவ்வொரு வீரருக்கும் தனியாக வியூகம் அமைக்கிறார்கள். நாம்தான் உஷாராக இருக்க வேண்டியுள்ளது. ஏதாவது ஒரு வீரர் நிலைத்து நின்று விட்டால் அவரைக் குறிவைத்து அவுட்டாக்க முயற்சிக்கின்றனர்.

தொடர் முழுவதும் நியூசிலாந்து வீரர்கள், பட்டிங், பந்து வீச்சு என எல்லாவற்றிலுமே நம்மை நொறுக்கி விட்டார்கள். அது தான் நமக்குப் பாதகமாகி விட்டது, மொத்தத்தில் நாம் பெரிய சீரோவாகி விட்டோம் என்று கூறியுள்ளார். (க)





அல்வாய் அம்பாள் வித்தியாலயத்தின் இல்ல மெய்வல்லுநர் போட்டி நாளை புதன்கிழமை இடம்பெறவுள்ளது. முதல் நிகழ்வான மரதன் ஓட்டம் அண்மையில் இடம்பெற்றது. பழைய மாணவர் சங்க செயலாளர் என்.லங்கேஸ்வரன் ஆரம்பித்து வைப்பதையும் வெற்றி பெற்ற மாணவர்கள் பாடசாலையின் அதிபர், ஆசிரியர்களுடன் நிற்பதையும் படத்தில் காணலாம். (க)

# நல்லூர் கழகங்களுக்கிடையிலான கரச் சுற்றுப் போட்டி



நல்லூர் பிரதேச இளைஞர் கழக சம்மேளனத்தில் பதிவு செய்யப்பட்ட இளைஞர் கழக அணிகளுக்கிடையிலான கரம் போட்டிகள் கடந்த முதலாம் திகதி கொக்குவில் இந்துக் கல்லூரியில் இடம்பெற்றன.

ஆண்கள் பிரிவில் 10 அணிகளும் பெண்கள் பிரிவில் 16 அணிகளும் இப் போட்டிகளில் கலந்து கொண்டன.

ஆண்கள் ஒற்றையர் பிரிவில் இறுதிப் போட்டியில் கொக்குவில் காமாட்சி இளைஞர் கழக அணியின் சோபானந்த் யாழ்.பல்கலைக் கழக இளைஞர் கழக அணியின் தினேஷ்குமாரை எதிர்த்தாடினார்.

இப் போட்டியில் கொக்குவில் காமாட்சி இளைஞர் கழக அணியின் சோபானந்த் 25:11 என்னும் புள்ளிகள் அடிப்படையில் வெற்றி பெற்றார்.

பெண்களுக்கான ஒற்றையர் பிரிவீல் இறுதிப் போட்டியில் யாழ். இந்து மகளிர் கல்லூரி இளைஞர் கழக அணியின் வோஜனா கொக்குவில் இந்துக் கல்லூரி இளைஞர் கழக அணியின் லிஷாந்தியை எதிர்கொண்டார்

இதில் 25:0 என்னும் புள்ளிகளின் அடிப்படையில் யாழ்.இந்து மகளிர் கல்லூரி இளைஞர் கழக அணியின் வோஜனா வெற்றி பெற்றார்.

ஆண்களுக்கான இரட்டையர் பிரிவில் கொக்குவில் காமாட்சி இளைஞர் கழக அணியின் சோபானந்த் ஜெயசாந் சோடியை K.C.C.C. இளைஞர் கழக அணியின் ஷெல்டன் சுபதீபன் சோடி எதிர்த்து விளையாடியது.

பரபரப்பாக இடம்பெற்ற இப் போட்டியில் 25:21 என்னும் புள்ளிகள் அடிப்படையில் இரட்டையர் பிரிவில் கொக்குவில் காமாட்சி இளைஞர் கழக அணியின் சோபானந்த் ஜெயசாந் சோடி வெற்றி பெற்றது.

பெண்களுக்கான இரட்டையர் பிரிவில் யாழ்.பல்கலைக்கழக இளைஞர் கழக அணியின் சுவேதினி டிலோஜினி சோடியை கொக்குவில் இந்துக் கல்லூரி இளைஞர் கழக அணியின் லிஷாந்தி, துஷாயினி சோடி எதிர்த்து விளையாடியது.

இப் போட்டியில் 14:13 என்னும் புள்ளிகள் அடிப்படையில் யாழ். பல்கலைக்கழக இளைஞர் கழக அணியின் சுவேதினி டிலோஜினி சோடி வெற்றி பெற்றது. (க-23)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பங்களாதேஷ் - இலங்கை அணிகளுக்கிடையிலான 2-வதும் இறுதியுமான டெஸ்ட் போட்டி இன்று ஆரம்பமாகும் நிலையில், அதற்கான பயிற்சியில் இலங்கை வீரர்கள் நேற்று ஈடுபட்டபோது...

# எரிகாயத்துக்குள்ளான குடும்பப் பெண் மரணம்

(புங்குடுதீவு)

எரிகாயங்களுக்கு உள்ளான நிலையில் யாழ்.போதனா வைத்திய சாலையில் சிகிச்சை பெற்று வந்த குடும்பப் பெண்ணொருவர் சிகிச்சை பலனின்றி நேற்றுக் காலை 5.30 மணியளவில் உயிரிழந்துள்ளார்.

இதில் புங்குடுதீவு 7-ம் வட்டாரத்தினைச் சேர்ந்த சர்வானந்தம் விஜயராணி (வயது - 40) என்ற குடும்பப் பெண்ணே உயிரிழந்தவராவார். எரிகாயங்களுக்கு உள்ளான நிலையில் நேற்று முன்தினம் மாலை 3.20 மணியளவில் சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட இவர் நேற்றுக் காலை சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்.

சடலமானது பிரேத பரிசோதனையின் பின் நேற்று மாலை உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. இது தொடர்பாக ஊர்காவற்றுறை பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றார்கள். (எ-11)

# ரொனால்டினோவின் ஒப்பந்தம் நீடிப்பு



பிரேசிலின் நட்சத்திர கால்பந்தாட்ட வீரர் ரொனால்டினோ, அந்நாட்டு கிளப் அணியுடன் தனது ஒப்பந்தத்தை ஓராண்டு நீடிப்பு செய்துள்ளார்.

2002-ம்ஆண்டு உலகக்கிண்ணத்தை வென்ற பிரேசில் அணியில் இடம்பெற்றிருந்தவர் ரொனால்டினோ.

கடந்த டிசம்பரில் கிளப் உலகக் கிண்ணக் கால்பந்துப் போட்டி நடைபெற்றதிலிருந்து, ஒப்பந்தம் குறித்து பேச்சுவார்த்தை நடத்தப்பட்டு வந்தது.

சமீபத்தில் அவர் அட்லெடிகோ மினீரியா அணியுடன் ஒப்பந்தத்தை நீடிப்பு செய்ய சம்மதம் தெரிவித்து, அதில் கையெழுத்திட்டுள்ளார்.

இருப்பினும், கிளப் உலக கிண்ண போட்டியின்போது சிவப்பு அட்டை காண்பிக்கப்பட்டதால், இந்த மாதம் அவரால் கிளப் அணிக்காக விளையாட முடியாது. (க)

# பங்களாதேஷிக்கு எதிரான ஒருநாள் போட்டி ஜெயவர்த்தன, ஹேரத்துக்கு ஓய்வு



பங்களாதேஷில் நடைபெறவுள்ள ஒருநாள் கிரிக்கெட் போட்டித்தொடர் மற்றும் இருபது-20 போட்டித் தொடருககான இலங்கை அணி அறிவிக்கப்பட்டுள்ளது.

ஒருநாள் போட்டித் தொடருக்கான அணியில் மஹேல ஜெயவர்த்தன மற்றும் ரங்கன ஹேரத் இருவரும் சேர்க்கப்படவில்லை. இருவருக்கும் ஓய்வு வழங்கப்பட்டுள்ளது. ஆனால் இருபது-20 போட்டித் தொடருக்கான அணியில் இருவரும் இணைக்கப்பட்டுள்ளனர். உலக இருபது-20 தொடருக்கு முன்னர் இலங்கை அணி விளையாடும் இருபது-20 தொடர் இது என்பது குறிப்பிடத்தக்கது.

அஞ்சலோ பெரேரா மீண்டும் அணியில் இணைக்கப்பட்டுள்ளார். முதற்தரப் போட்டி ஒன்றில் 204 பந்துகளில் 244 ஓட்டங்களை வேகமாக அடித்தமை இவருக்கு வாய்ப்புகளை மீண்டும் வழங்கியுள்ளது.

இதேவேளை தெரிவுக்குழுவினரின் அபாய வலயத்திற்குள் இருந்த திசார பெரேரா, பிக் பாஷ் போட்டிகளில சிறப்பாக செயற்பட்டமை மீண்டும் அவருக்கு வாய்ப்புகளை வழங்கியுள்ளது. லசித் மாலிங்க உபாதையில் இருந்து மீண்டுள்ளமையினால் அவருக்கும் அணியில் இடம் கிடைத்துள்ளது. அஷான் பிரியரஞ்சன், பிரசன்ன ஜெயவர்த்தனவின் இடத்திற்கு அனுப்பட்டவர் தொடர்ந்தும் அங்கேயே ஒரு நாள் போட்டிகளுக்காக இருப்பார்.

ஒருநாள் போட்டி அணி விபரம்

அஞ்சலோ மத்யூஸ் (தலைவர்), தனேஷ் சந்திமால் (உப தலைவர்), குமார் சங்ககார, திலகரட்ன டில்ஷான், குஷால் பெரேரா, அஷான் பிரயரஞ்சன், கித்ருவன் விதானகே, அஞ்சலோ பெரேரா, லசித் மாலிங்க, திசார பெரேரா, நுவான் குலசேகர, சுராங்க லக்மால், சச்சித்திர சேனாயக்க, அஜந்த மெண்டிஸ், சீகுகே பிரசன்ன.

இருபது-20 அணி விபரம்

தினேஷ் சந்திமால் (தலைவர்), லசித் மாலிங்க (உப தலைவர்) குமார் சங்ககார, திலகரட்ன டில்ஷான், குஷால் பெரேரா, மஹேல ஜெயவர்த தன, அஞ்சலோ பெரேரா, திசார பெரேரா, நுவான் குலசேகர, சுரங்க லக்மால், சச்சித்திர சேனநாயக்க, அஜந்தமெண்டிஸ் சீகுகே பிரசன்ன, அஞ்சலோ மத்தியூஸ், ரங்கன ஹேரத். (க)



# ஆஸி அணியை வீழ்த்தி இலங்கை அபார வெற்றி

இலங்கை 19 வயதிற்குட்பட்ட கிரிக்கெட் அணி, அவுஸ்திரேலியா 19 வயதிற்குட்பட்ட அணியை 111 ஓட்டங்களால் வெற்றி கொண்டுள்ளது. கொழும்பு கொல்ட்ஸ் கிரிக்கெட் மைதானத்தில் நடைபெற்ற இந்தப் போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி 48.5 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 248 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது.

இதில் பிரியாமல் பெரேரா 58 ஓட்டங்களையும், ஹர்ஷா ராஜபக்ஷ 43 ஓட்டங்களையும், ஹஷான் டுமின்டு 37 ஓட்டங்களையும் பெற்றுக் கொண்டனர்.


பந்துவீச்சில் அவுஸ்திரேலியா 19 வயதிற்குட்பட்ட அணி சார்பாக மத்தே போட்டியா 8 ஓவர்கள் பந்து வீசி ஓர் ஓட்டமற்ற ஓவர் அடங்கலாக 39 ஓட்டங்களிற்கு 6 விக்கெட்களைக் கைப்பற்றினார்.

பதிலளித்த அவுஸ்திரேலியா 19 வயதிற்குட்பட்ட அணி 41.4 ஓவர்களில் சகல விக்கெட்களையும் இழந்து 137 ஓட்டங்களை மாத்திரமே பெற்றுக் கொண்டது. இதில் டேமியன் மோர்டிமர் 41 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டார்.

இலங்கை 19 வயதிற்குட்பட்ட அணி சார்பாக பந்துவீச்சில் ஹர்ஷா ராஜபக்ஷ 3 விக்கெட்களையும், லக்ஷான் ஜெயசிங்ஹ, அனுக் பெர்னாண்டோ ஆகியோர் தலா இரண்டு விக்கெட்களையும் கைப்பற்றினர்.

இந்த தொடரின் முதல் போட்டியிலும் வெற்றி பெற்ற இலங்கை அணி 2-0 என்ற ரீதியில் தொடரை கைப்பற்றியுள்ள நிலையில் ஒரு போட்டி மீதமாகவுள்ளது. (க)

# முர்ரேக்கு விரைவில் திருமணம்



உலகின் முன்னணி டெனிஸ் வீரரான அண்டி முர்ரே விரைவில் தனது காதலியை கரம்பிடிக்க உள்ளார். இங்கிலாந்து நாட்டை சேர்ந்த அண்டி முர்ரே, அந்நாட்டு டெனிஸ் பயிற்சியாளர் நிஜெல் சியர்ஸின் மகளான சியர்ஸை 2005-ம் ஆண்டு முதல் காதலித்து வருகிறார். ஆனால் இருவரும் எப்போது திருமணம் செய்து கொள்கிறோம் என்பதை வெளிப்படையாக தெரிவிக்காமல் இருந்தனர்.

இந்நிலையில் ரசிகர்களின் கேள்விகளுக்கு டுவிட்டரில் பதிலளித்த அண்டி முர்ரே, வருகிற விம்பிள்டன் போட்டி தனக்கு சிறப்பாக அமைந்தவுடன் சியர்ஸை திருமணம் செய்து கொள்வேன் என்று கூறியிருக்கிறார். விம்பிள்டன் போட்டி வருகிற ஜூன் 23-ம் திகதி முதல் ஜூலை 6-ம் திகதிவரை நடக்கிறது. தற்போதைய சம்பியனான முர்ரே அதை தக்க வைத்துக்கொள்ள தீவிர பயிற்சியில் ஈடுபட்டுள்ளார். (க)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## 19 மீனவர்களுக்கு...

வந்து காங்கேசன்துறை கடற்பரப்பில் மீன்பிடியில் ஈடுபட்டதாகக் கூறப்படும் மேற்படி இந்திய மீனவர்கள் 19 பேரையும் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை கைது செய்ததாக கடற்படையினர் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்ட மீனவர்களை கடற்படையினர், யாழ். கடற்றொழில் மற்றும் நீரியல்வளத்துறை அதிகாரிகளிடம் ஒப்படைத்தனர். இதனையடுத்து நீதவான் முன்னிலையில் ஆஜர்படுத்தியபோதே அவர் மேற் கண்டவாறு உத்தரவைப் பிறப்பித்தார். (எ-6)

## சர்வதேச விசாரணை...

அய்யனாபுரம் முருகேசன், முன்னாள் எம்.எல்.ஏ. நசீமுதீன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

கூட்டம் முடிந்து பின்பு உலகத் தமிழர் பேரமைப்பின் தலைவர் பழ. நெடுமாறன் நிருபர்களுக்கு பேட்டி அளிக்கையில்,

இலங்கை மற்றும் தமிழகத்தில் வாழும் ஈழத் தமிழர்களின் முழு உரிமை பெறுவதற்கு உலக நாடுகளில் வாழும் ஈழத் தமிழர்களிடம் பொது வாக்கெடுப்பு நடத்தி அவர்கள் அளிக்கும் தீர்ப்பை ஐ.நா. சபை நடவடிக்கை எடுக்க வேண்டும்.

ஜெனீவாவில் மார்ச் மாதம் நடைபெற உள்ள ஐ.நா. மனித உரிமைகள் ஆணையக் கூட்டத்தில் ஈழத் தமிழர்களைத் திட்டமிட்டு படுகொலை செய்த ராஜபக்ஷ மீது விசாரணை நடத்த தற்சார்பு பன்னாட்டு புலனாய்வு ஆணையத்தை அமைக்க வேண்டும்.

இந்த கோரிக்கைகளை வலியுறுத்தி வருகிற 20ம் திகதி தமிழகத்தில் உள்ள மாவட்ட தலைநகரங்களில் ஆர்ப்பாட்டம் நடைபெறும்.

இந்த ஆர்ப்பாட்டத்திற்கு தமிழ் அமைப்புகள், மனித உரிமை ஆர்வலர்கள் திரளாக கலந்து கொள்ள வேண்டும் என்று கூறினார். (எ-11)

## இந்திய வீட்டுத் திட்டம்...

கொண்ட ஆர்ப்பாட்டம் ஒன்று நேற்று திங்களன்று நடத்தப்பட்டிருக்கின்றது.

இந்திய வீட்டுத் திட்டத்திற்கான பயனாளிகள் தெரிவில் வவுனியா மாவட்டத்தில் அதிகமாக வாழும் தமிழ் மக்களுக்கு அமைச்சர் ரிசாட் பதியுதீன் பாரபட்சம் காட்டுவதாகக் கூறி கடந்த வாரம் வவுனியா மாவட்ட மீள்குடியேறியோர் நலன்பேணும் அமைப்பினால் நடத்தப்பட்ட ஆர்ப்பாட்டத்திற்கு எதிராகவே முஸ்லிம் மக்களினால் இந்த ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டுள்ளது.

இந்திய வீட்டுத் திட்டத்திற்கான பயனாளிகள் தமிழ், முஸ்லிம், சிங்கள மக்கள் என மூவினங்களிலுமிருந்தும் தெரிவு செய்யப்பட்டிருந்தபோதிலும், அமைச்சரினால் தமிழ் மக்கள் புறக்கணிக்கப்படவில்லை என இந்த ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டிருந்தவர்கள் தெரிவித்திருக்கின்றனர்.

இனவாதத்தைத் தூண்டுவதாகக் குறிப்பிட்டு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைக் குறிக்கும் உருவம் ஒன்றும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்தவர்களினால் ஏந்திச் செல்லப்பட்டு தீயிடப்பட்டது.

இந்திய வீட்டுத் திட்டத்தைத் தடுத்து நிறுத்தும் வகையில் முயற்சிகள் மேற்கொள்ளப்படுவதாகவும், அத்தகைய முயற்சிக்கு இடம்கொடுக்கக் கூடாதென்றும் ஆர்ப்பாட்டக்காரர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

அந்தக் கோரிக்கை அடங்கிய மகஜரை, ஜனாதிபதி மற்றும் இந்திய வெளியுறவு அமைச்சர் உள்ளிட்ட முக்கியஸ்தர்களுக்கு அனுப்பி வைப்பதற்காக, வவுனியா மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் திருமதி சரஸ்வதி மோகநாதனிடம் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்த முக்கியஸ்தர்கள் கையளித்தனர்.

இதேவேளை, வவுனியா மாவட்டத்தில் போரினால் பாதிக்கப்பட்டுள்ள 10 ஆயிரத்து 209 தமிழ் குடும்பங்ளுக்கு வீடுகள் தேவையென மதிப்பிடப்பட்டுள்ளபோதிலும், ஓர் ஆயிரத்து 938 குடும்பங்கள் மட்டுமே இந்திய வீட்டுத் திட்டத்தின் மூன்று கட்டங்களிலும் பயனாளிகளாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளனர் என்று வவுனியா மாவட்ட மீள்குடியேறியோர் நலன்பேணும் அமைப்பு அறிக்கையொன்றில் தெரிவித்திருக்கின்றது.

அதேநேரம், இந்த மாவட்டத்தில் 773 சிங்கள குடும்பங்களுக்கு வீடுகள் தேவையென மதிப்பிடப்பட்டு 545 குடும்பங்கள் பயனாளிகளாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளன. ஆனால் முஸ்லிம் குடும்பங்களைப் பொறுத்தமட்டில் ஓர் ஆயிரத்து 483 குடும்பங்களுக்கு வீடுகள் தேவையென மதிப்பிடப்பட்டு, ஓர் ஆயிரத்து 634 குடும்பங்கள் பயனாளிகளாகத் தெரிவு செய்யப் பட்டிருக்கின்றார்கள்.

இதன் மூலம் இந்த மாவட்டத்தில் பெரும்பான்மையாக வாழும் தமிழ் மக்கள் அரசியல் பழிவாங்கல் நோக்கிலும் அரசியல் இலாபம் கருதியும் இந்திய வீட்டுத் திட்டத்தில் பாகுபாடாக நடத்தப்பட்டிருக்கின்றார்கள் என்று அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (செ-6-11)

## பால்மா விலையேற்ற...

பின் அமைப்பாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ரோசி சேனா நாயக்க, நாடாளுமன்ற உறுப்பினர் பாலித தெவரபபெரும உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

அரசாங்கம் கடந்த சனிக்கிழமை முதல் அமுலுக்கு வரும் வகையில், 400 கிராம் பால் மா 61 ரூபாயாலும் ஒரு கிலோ கிராம் பால் மா 152 ரூபாயினாலும் அதிகரித்தது.

பால் மா விலைகள் அதிகரிக்கப்பட்டுள்ளதால் குழந்தைகளுக்கு பால்கொடுக்க முடியாத நிலையில் தாய்மார்கள் சிரமங்களை எதிர்நோக்கி வருவதாக ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டவர்கள் தெரிவித்தனர்.

பால் கலந்து தேநீரை அருந்துவது மக்களுக்கு கனவாக மாறியுள்ளதாகவும் ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டவர்கள் குறிப்பிட்டனர். (எ-11)

OPTIMO GROUP SRI LANKA
VACANCY
எமது Optimo group company க்கு யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, மன்னார், வவுனியா, கிளிநொச்சி ஆகிய மாவட்டங்களில் உள்ள துடிப்பும், ஆர்வமும், தன்னம்பிக்கையும் கொண்ட இளைஞர் யுவதிகள் தேவைப்படுகின்றனர்.
எம்மிடம் 04 பணிகள் உள்ளன
➢ மேற்பார்வையாளர் (Supervisor)
➢ முகாமைத்துவ பயிற்சியாளர் ( Management trainee)
➢ களஞ்சிய மேற்பார்வையாளர் (Store Supervisor)
➢ சந்தைப்படுத்துனர்கள் (Distributors)
ஆகியோர் தேவைப்படுகின்றனர்.
➢ வயதெல்லை 18 – 35
➢ தங்குமிடம் & உணவு இலவசம்.
➢ இலவசமாக சிங்கள & ஆங்கில வகுப்புக்கள் நடைபெறும்.
(5514)
தொடர்புகளுக்கு:- 0775586224, 0777981471, 0772302795



உடன்டி வேலைவாய்ப்பு
நீங்கள் புதிய தொழில் தேடுனரா? முகாமைத்துவத்தில் சிறந்த வருமானம் பெற விரும்புபவரா?நீங்கள் O/L or A/L பயின்றவரா?
உடன் அழையுங்கள்...
பயிற்சியின் போது 12,000 - 25,000 பின்பு 60,000 மேல் மற்றும் Bonus பெறலாம்
We are looking for this Categories
* Supervisor * Ass. Manager
* Training Administrator * Management Trainers
முன் அனுபவம் அவசியமில்லை, தங்குமிடம், மருத்துவம் மற்றும் பயிற்சி இலவசம்
(5513)
தொடர்பு : 021 499 3166, 0779994807
இல. 225, 3ஆம் குறுக்குத்தெரு, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

### அகில இலங்கை இந்து மாமன்றம்

### முக்கிய அறிவித்தல்

### பாதிக்கப்பட்ட இந்து ஆலயங்கள்

கடந்த 3 தசாப்தங்களில் அழிக்கப்பட்ட அல்லது சேதப்படுத்தப்பட்ட (பாதுகாப்பு வலயங்களிலோ, போரினால் பாதிக்கபட்ட இடங்களிலோ எவ்விதத்திலும் பாதிக்கப்பட்ட) **இந்து ஆலயங்கள்** பற்றிய விபரங்களை சேகரித்து அந்த ஆலயங்கள் உதவி பெற வழிவகுக்க விரும்புகிறோம். அப்படியான ஆலயங்களின் (நிர்வாகத்தினர் அல்லது சிவாச்சாரியார்களோ அல்லது பக்தர்களாவது) அப்படியான அழிவுகள்/சேதங்கள் /பாதிப்புக்கள் பற்றிய சுருக்கமான விபரங்களை (ஆலயத்தின் பெயர், பதிவு எண் (ஏதும் இருப்பின்) இருப்பிடம், நிர்வாகத்தின் தொடர்பு விலாசம், தொலைபேசி இல, ஏற்பட்ட நட்டங்களின் இழப்பீடு உட்பட) உடனடியாக 11-02-2014க்கு முன் எழுத்து மூலம் எங்களுக்கு அனுப்பவும். அதன் பின் மேலும் விபரங்களைத்திரட்ட ஆலய நிர்வாகத்தினரை தொடர்பு கொள்ள நடவடிக்கை எடுப்போம்.

கந்தையா நீலகண்டன்
தலைவர்

முத்தையா கதிர்காமநாதன்
பொதுச் செயலாளர்

அகில இலங்கை இந்து மாமன்றம்
91/5, சேர் சிற்றம்பலம் ஏ. காடினர் மாவத்தை
கொழும்பு 02.
தொ.பேசி. 011-2434990, தொலைநகல். 011-2344720
(C-6413)

## ஜனாதிபதி ஆணைக்...

குழுவின் விசாரணை கிளிநொச்சி மாவட்டத்தில் கடந்த மாதம் 18 ஆம் திகதி காலை 9.30 மணியளவில் ஸ்கந்தபுரம் அரசினர் தமிழ் கலவன் பாடசாலையில் ஆரம்பமானது.

கிளிநொச்சி மாவட்டத்தில் தொடர்ந்து மூன்று நாட்கள் இடம்பெற்ற இந்த விசாரணைக்கு சுமார் 150 இற்கும் மேற்பட்ட காணாமல்போனவர்களின் உறவினர்கள் ஆணைக்குவின் முன் சாட்சியமளித்தனர்.

இந்நிலையில் யாழ்.மாவட்டத்தில் காணாமற்போனோரின் உறவினர்கள் சாட்சியமளிக்கும் நடவடிக்கைகள் எதிர்வரும் 14 ஆம் திகதி முதல் மேற்கொள்ளப்படவுள்ளதாக யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் சுந்தரம் அருமைநாயகம் தெரிவித்தார்.

இவ்விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

காணாமற்போனோரைக் கண்டறியும் ஜனாதிபதி ஆணைக்குழுவின் செயலாளர் எச்.டபிள்யூ குணதாசாவினால் யாழ்.மாவட்டத்தில் இந்த விசாரணைகள் எதிர்வரும் 14,15,16 மற்றும் 17 ஆம் திகதிகளில் மேற்கொள்ளப்படவுள்ளது.

யாழ்.மாவட்டத்தில் காணாமற்போனோரின் விபரங்கள் கிராம அலுவலர் பிரிவு ரீதியாக சேகரிக்கப்பட்டு, பிரதேச செயலகங்களினூடாக காணாமற்போனோரைக் கண்டறியும் ஜனாதிபதி ஆணைக்குழுவிற்கு அனுப்பப்பட்டிருந்தன. அதனடிப்படையில் கிராமஅலுவலர் பிரிவுகள் ரீதியாக காணாமற்போனோரின் உறவினர்கள் சாட்சியமளிக்கும் நடவடிக்கைகள் இடம்பெறவுள்ளன.

அந்த வகையில், எதிர்வரும் 14 ஆம் திகதி கோப்பாய் பிரதேச செயலகத்திலும், 15 ஆம் திகதி சாவகச்சேரி பிரதேச செயலகத்திலும், 16 மற்றும் 17 ஆம் திகதிகளில் யாழ்.மாவட்டச் செயலகத்திலும் காணாமற்போனோரின் உறவினர்கள் சாட்சியமளிக்கவுள்ளனர்.

இதேவேளை யாழ்.மாவட்டத்தில் காணாமற்போனோரின் உறவினர்கள் சாட்சியமளிக்கும் நடவடிக்கையின் ஆரம்பக் கலந்துரையாடல் நாளை 5 ஆம் திகதி புதன்கிழமை மாவட்டச் செயலகத்தில் இடம்பெறவுள்ளதாக மாவட்ட அரச அதிபர் மேலும் தெரிவித்தார். (எ-6)

## இலங்கைக்கு எதிரான...

களிடையே பொது வாக்கெடுப்பு நடத்தி அதற்கேற்ப நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இலங்கை நாட்டில் நடைபெறும் அனைத்துக் கூட்டங்களையும் இந்தியா புறக்கணிக்க வேண்டும். இலங்கை வீரர்கள் எவருக்கும் இராணுவப் பயிற்சியை இந்தியாவில் அளிக்கக் கூடாது. இலங்கை நாட்டுடனான விளையாட்டுப் போட்டிகளில் கலந்து கொள்ளக்கூடாது என்பனவற்றில் நாங்கள் உறுதியாக இருக்கிறோம்.

இந்த ஆண்டு மார்ச் மாதம் ஐ.நா. மனித உரிமை சபையில் இலங்கைக்கு எதிராக நான்கு நாடுகள் தீர்மானம் கொண்டு வரப் போவதாக செய்திகள் வந்துள்ளன.

எங்களைப் பொறுத்த வரையில், இந்தியாவே, இனப் படுகொலையை நிகழ்த்தியவர்களை தண்டிக்க தனித் தீர்மானத்தை இலங்கைக்கு எதிராக கொண்டு வந்து அதற்கு ஆதரவாக மற்ற நாடுகளை வாக்களிக்க வைத்து அந்தத் தீர்மானத்தை நிறைவேற்ற வேண்டும். ஆனால், தற்போதைய மத்திய காங்கிரஸ் கூட்டணி அரசு இதனை நிச்சயம் நிறைவேற்றாது என ஜெயலலிதா தெரிவித்துள்ளார். (எ-11)

## கோயில் ஒன்றை...

ளாக மேற்கொள்ளப்பட்ட அகழ்வு நடவடிக்கைகள் கடந்த வெள்ளிக்கிழமை நீதிமன்ற பணிப்புரைக்கு அமைய அந்த நடவடிக்கைகள் இடைநிறுத்தப்பட்டிருந்தன.

எதிர்வரும் வாரத்தில் விசேட நிகழ்வுகள் இடம்பெறவுள்ள நிலையில், 20 மீற்றர் நீளம் மற்றும் 12 மீற்றர் அகலவாக்கில் புதைகுழியை விரிவாக்கி அகழ்வுகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

இந்த தகவலை அனுராதபுர போதனா மருத்துவமனையின் சட்ட மருத்துவ அதிகாரி தனஞ்ஜய வைத்தியரத்ன வெளியிட்டுள்ளார். (எ-11)

## கட்சி தாவும்...

ஜே.வி.பியின் உறுப்பினர் ஐக்கிய தேசியக் கட்சியில் இணைந்து கொண்டதாக அந்த கட்சியினர் தெரிவித்தனர். (எ-11)

## பால்மாவின் விலை...

நிறுவனங்களை எம்மைப் போன்ற நாடு ஒன்றினால் கட்டுப்படுத்த முடியாது.

பல்தேசிய நிறுவனங்கள் உலகின் பலம் பொருந்திய அரசாங்கங்களையே ஆட்டம் காணச்செய்கின்றன என அமைச்சர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அதேவேளை, பல்தேசிய நிறுவனங்களுக்கு தேவையான வகையில் பால் விலையை உயர்த்த அனுமதிக்க முடியாது என அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ சூளுரைத்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (எ-11)

2 மணித்தியாலத்தில்
கணினி திருத்தம்
உங்கள் கணினிகள் பழுதடைந்துவிட்டனவா?உடன் உங்களது வீடுகளுக்கே வந்து திருத்தி தருகிறோம்.
அழையுங்கள். 077 908 6737
GUNAA BEST PC
52,Hospital Road,Jaffna.
இப்பொழுது GUNAA BEST PC இல் Quick Service
2 மணித்தியாலத்தில் கணினிகளை திருத்தம் செய்து பெற்றுக்கொள்ளலாம்.
Computer Repair Laptop and motherboard Repair

காணி விற்பனைக்கு
உதயசூரியன் வீதி, உடுவில் கிழக்கு சுன்னாகத்தில் பரப்பு 2 குளி 2 காணி விற்பனைக்கு உண்டு.
தொடர்பு :
0779524393 – பொ. மகேந்திரராசா
பலாலி வீதி, ஊரெழு கிழக்கு,
சுன்னாகம். (5509)

மணல் விற்பனைக்கு
கட்டட வேலைகளுக்கும், பூச்சு வேலைகளுக்கும் சிறந்த மணல் விற்பனைக்கு உண்டு. தொடர்பு :- கண்ணா
4 1/2 ரக்ரர் - 19000 /- 0777 590 792
(C-6411)

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, [illegible] முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 04.02.2014 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org